# மொழியியல்

தொகுதி 6 ஏப்ரல்-ஜூன் எண் 4

பதிப்பாசிரியர்கள்

ச. அகத்தியலிங்கம்

கி. கருணாகரன்

ந. நடராசபிள்ளை

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்
காலாண்டு இதழ்
1983

T13391
R005A07

# அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்

பதிவு எண் 2 (1977)

அண்ணாமலைநகர்

## செயற்குழு

| | |
|---|---|
| தலைவர் : | டாக்டர் சி. சுப்பிரமணியம் (நாகர்கோவில்) |
| துணைத் தலைவர் : | டாக்டர் இ. அண்ணாமலை (மைசூர்) |
| செயலாளர் : | டாக்டர் ச. அகத்தியலிங்கம் (அண்ணாமலைநகர்) |
| பொருளாளர் : | டாக்டர் க. முருகையன் (அண்ணாமலைநகர்) |
| உறுப்பினர்கள் : | திரு ஜி. கிருட்டிணபகவான் (மலேசியா) |
| | டாக்டர் கே. குத்தாலம்பிள்ளை (திருவனந்தபுரம்) |
| | டாக்டர் பி. சாம்டேனியல் (அல்ஜீரியா) |
| | திரு ந. அருணபாரதி (வாரணாசி) |
| | செல்வி மு. சுசிலா (அண்ணாமலைநகர்) |

## மொழியியல்

### அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின் காலாண்டு இதழ்

### கட்டணம்

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆயுள் கட்டணம் | ரூ 200-00 | US $ 50-00 |
| ஆயுள் கட்டணம் (நிறுவனங்களுக்கு) | ரூ 300-00 | US $ 75-00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ 20-00 | US $ 5-00 |
| ஆண்டுக் கட்டணம் (நிறுவனங்களுக்கு) | ரூ 30-00 | US $ 7-00 |
| ஆண்டுக் கட்டணம் (மாணவர்களுக்கு) | ரூ 10-00 | |

மொழியியல் 6.4 1 83

# விரவுத்திணை

Thanjavur

செ. வை. சண்முகம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

## 1. முன்னுரை

தொல்காப்பியர் சொல்லதிகார முதல் சூத்திரத்தில் உயர் திணை, அஃறிணை என்று சொற்களை இரண்டாகப் பாகுபடுத்தி னாலும் பெயரியலிலும் (6.3-5) வினையியலிலும் (4.3-5)

> உயர்திணைக்கு உரிமையும் அஃறிணைக்கு உரிமையும்
> ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்
> அம்மூவுருபின தோன்றல் ஆறே

என்று மூன்று வகையான பாகுபாட்டைக் குறிப்பிடுகிறார்.

அந்த மூன்றாவது பாகுபாட்டுக்கான பெயர் பற்றி முதலில் விவாதித்துப் பிறகு அந்த பாகுபாட்டில் அடங்கும் சொற்களின் தன்மையையும் (§ 2) அவை செயல்படும் முறையையும் (§ 3)

அறிந்து கொண்டு அதற்கான இலக்கண அடிப்படையும் (§ 4) இலக்கிய அடிப்படையும் (§ 6) விளக்கி இலக்கண அடிப்படைகளை இலக்கணக் கூறுகளில் பயன்படுத்தும் முறையையும் (§ 5) புரிந்து கொள்ள முயலுவதே இந்தக் கட்டுரையின் நோக்கம் ஆகும். மேலும் திணைகளை ஏன் மூன்றாகப் பிரித்துள்ளார் என்ற முக்கிய கேள்வியும் பின்னால் (§ 4.3) விளக்கப்படும்.

'ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமைய' என்பது திணைப் பாகுபாட்டை ஒட்டி அமைந்திருப்பதால் 'விரவுத் திணை' என்று சுருக்கமாகக் குறிப்பிடலாம் ஆயினும் தொல்காப்பியப் பயிற்சியைக் கவனித்துத் தொல்காப்பியர் கருத்தை அறிந்து கொள்ளமுயலுவோம்.

தொல்காப்பியர் 'விரவு' என்று பொதுவாகவும் 'விரவுப் பெயர் என்று சிறப்பாகவும் பயன்படுத்தியுள்ளார். சொல்லதிகாரத்தில் 'வியங்கோள் எண்ணுத்திணை விரவு வரையார்' (கிளவி. 45) என்றும் 'பல வயினானும் எண்ணுத்திணை விரவுப் பெயர்' (கூ. 49) என்றும் உயர்திணைச் சொற்களும் அஃறிணைச் சொற்களும் ஒரே தொடரில் கலந்து பயன்படுத்துதலை 'விரவு' என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் 'அஃறிணை விரவுப் பெயர்' (எழுத்து. 155; விளி. 32) என்ற தொடரைக் கையாண்டுள்ளார். நச்சினார்க்கினியர்தான் எழுத்ததிகார உரையில் 'ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமைய' என்று சொல்லதிகாரத்தில் குறிப்பிட்டதுதான் எழுத்ததிகாரத்தில் அஃறிணை விரவுப் பெயர் என்று சொல்லப்படுகிறது என்று கூறி அதற்கான காரணத்தையும் புலப்படுத்தியுள்ளார்.

அஃறிணைக்கு ஒருமைப் பாலும் பன்மைப் பாலும் உணர்த்தும் ஈறு அன்றி ஆண் பாலும் பெண் பாலும் உணர்த்தும் ஈறுகள் உளவாக ஆசிரியர் ஓதாமையின், அங்ஙனம் உயர்திணை இரு பாலும் உணர்த்தும் ஈறுகள் நின்றே அஃறிணை ஆண் பாலையும் பெண் பாலையும் உணர்த்துதலின் அஃறிணை உயர்திணையோடு சென்று விரவிற்று என்று அவற்றின் உண்மைத் தன்மைத்

தோற்றம் கூறுவான் ஈண்டுக் கூறினார்''

என்பது அவருடையவாசகம். அவர் கருத்து உயர்திணைக்கே உரியபெயர்கள் அஃறிணையிலும் பயன் படுத்துவதால் விரவுப் பெயர்என்று குறிப்பிடப்பட்டது என்பதே.

தொல்காப்பியர் கிளவியாக்கச் சூத்திரங்களில் உயர்திணைக் குரிய சொற்களும் அஃறிணைக்குரிய சொற்களும் ஒரே தொடரில் கலந்து விரவி வருதலைக் குறிப்பிட்டார். அதுபோல இங்கு (அஃறிணை விரவுப் பெயர் என்னும் போது) ஒரு திணைக்குரிய சொற்கள் மற்றொரு திணையிலும் பயன்படுவதை 'விரவுப் பெயர்' என்று அழைத்துள்ளார். அதாவது உண்மையில் விரவி வராது 'விரவும் ஆற்றலுடைய சொற்களையே' 'விரவுப் பெயர்' என்று குறிப்பிட்டு விட்டார். எனவே அந்தக் கருத்தை ஒட்டி 'விரவுத் திணை' என்று நாம் அழைப்பது தொல்காப்பியர் கருத்துக்கு ஒத்ததாகவே அமையும்

2. விரவுத்திணைச் சொற்களின் விளக்கம்.

தொல்காப்பியர் விரவுத்திணைச் சொற்களைப் பெயரியலிலும் வினையியலிலும் பிரித்து முறையே விரவுப் பெயர்கள், விரவு வினைகள் என்று பாகுபடுத்திப் பொதுவாகவும் (இயற் பெயர், விபங்கோள் முதலியன) தனியாகவும் (எல்லாம், வேறு முதலியன விளக்கியுள்ளார். இவைகளில் விரவுப்பெயர்களாகக் குறிப்பிட்ட இயற்பெயர், சினைப் பெயர், சினைமுதற்பெயர் என்பன எவை என்பதில் கருத்து மாறுபாடு கர்ணப்படுகிறது. எனவே அவை பற்றி முதலில் விளக்குவோம்.

2. 1. இயற்பெயர்.

இளம்பூரணர் பொதுவாக உதாரணங்களைக் கொடுப்பதன் மூலமே எல்லாப் பொதுச் சொற்களையும் விளக்கியுள்ளார். சேனாவரையரே பொது நிலையில் விளக்கமும் கொடுத்துள்ளார். அவர் கருத்துப்படி:

''இயற்பெயராவன: சாத்தன், கொற்றன் என வழங்குதற் பயத்தவாகிய நிமித்தம் இன்றிப் பொருளேபற்றி வரும் இடுபெயர்.

இயற்பெயர் எனினும் விரவுப் பெயர் எனினும் ஒக்குமாயின் அவற்றுள் ஒரு சாரனவற்றிற்கு அப்பெயர் கொடுத்தது என்னை யெனின்: அவற்றது சிறப்பு நோக்கி அப்பெயர் கொடுத்தார்.''

பாணியும் தாளமும் ஒரு பொருளவாயினும் இசை நூலார் தாளத்துள் ஒரு சாரனவற்றிற்குப் பாணி என்னும் பெயர் கொடுத் பாற் போல என்பது,

இங்கு இயற்பெயருக்கான விளக்கமும் அதன் ஒரு பண்பும் குறிப்பிடப்பட்டுள்ளது. வழங்குதல் பயத்தது (வழங்குவதற்காக அமைந்தது), நிமித்தம் (காரணம்) இல்லாதது என்ற இரண்டு பண்பும் எல்லாச் சொல்லுக்கும் பொதுவானது. 'பொருள் பற்றி வருவது' என்பது பெயர்ச் சொல்லுக்குரியது, இந்த மூன்று பண்புகளோடு 'இடுபெயர்') என்பதே இயற்பெயரின் சிறப்புப் பண்பாகும். ஒரு குறிப்பிட்டப் பொருளை வழங்குவதற்காகக் கார ணம் இல்லாமல் இடப்பட்ட பெயர் இயற்பெயர் என்ற விளக்கம் மிகப் பொருத்தமானது, அடுத்து விரவுப் பெயரும் இயற்பெயரும் ஒரு வகையில் ஒப்பு உடையது; ஆயினும் சில வேறுபாடு அதாவது சிறப்புப் பண்பு உடையது என்று கருத்து உள்ளது பூவராகம் பிள்ளை- 'இயற்பெயர் எனினும் விரவுப் பெயர் எனினும்...பெயர் கொடுத்தாற் போல என்பது' இடைச் செருகல் ஆகலாம்' என்று கருதுகிறார். ஆனால் சேனாவரையரே கிளவியாக்கத்தில் (38 சூ,)

'அவன் தான் வந்தான்; அவன் ஒருவனும் அறங்கூறும்...என இயற்பெயரல்லா விரவுப் பெயர்க்கும்

என்று கூறுவதால் இயற்பெயரை விரவுப் பெயரின் ஒருவகை என்று குறிப்பிட்டிருக்கிறார் என்பது தெளிவாகிறது. எனவே சிறப்புக் கருதி இயற்பெயரை விரவுப் பெயர் என்றாலும் விரவுப் பெயரில் ஒரு பிரிவு இயற்பெயர் என்ற சேனாவரையர் கருத்துச் சரியானதே.

'வழங்குதற் பயத்தவாய் நிமித்தம் இன்றிப் பொருள் பற்றி வருவது' இயற்பெயர் என்ற நச்சினார்க்கினியரின் விளக்கம் சேனாவரையரை முக்காற்பங்கு அடியொற்றியது. எனவே இது பொதுப் பெயரின் விளக்கமாகவே உள்ளது. ஒரு பொருட்கு இடு குறியாகி வழங்கும் பெயர்' என்ற தெய்வச்சிலையாரின் விளக்க மும் பொதுப்பெயர்க்கு உரியதே'. அவர் இயற்பெயரை 'முதற்

பெயர்' என்றும் குறிப்பிட்டுள்ளார். இது சினைப்பெயரை நோக்கிக் கொடுக்கப்பட்டது. நன்னூலாரும் 'முதற்பெயர்' (282) என்றே அழைத்துள்ளரர்.

'இரு திணைக் கண்ணும் வாளாது இயன்று வருதலான் இயற்பெயர்' என்ற கல்லாடனார் விளக்கம் ஓரளவு இயற் பெயரின் பண்பைச் சுட்டுவதாகக் கொள்ளலாம். சுப்பிரமணிய சாஸ்திரியார் உள்ளிட்ட உரையாசிரியர்கள் அனைவரும் 'ஒருமை இயற் பெயர்' என்பதற்குக் 'கோதை' என்ற சொல்லும் பன்மை இயற் பெயர் என்பதற்கு 'யானை' என்ற சொல்லும் உதாரணமாகக் கொடுத்துள்ளதால் இயற் பெயர் என்பதைப் பொதுப் பெயராகவும் நினைத்தார்களா என்று எண்ண வேண்டியிருக்கிறது. எனவே தொல்காப்பியர் 'இயற்பெயர்' என்பதை எந்தப் பொருளில் கையாண்டிருக்கிறார் என்பதையும் மொழியியலார் தரும் விளக்கத்தையும் அறிந்து கொண்டு இங்கு என்ன பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நிர்ணயிக்க வேண்டும்.

தொல்காப்பியர் கிளவியாக்கம், பெயரியல், இடையியல் ஆகிய மூன்றிலும் 'இயற்பெயர்' என்ற கலைச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்,

கிளவியாக்கத்தில் 'இயற்பெயர்கிளவியும் சுட்டுப்பெயர் கிளவியும்' என்ற சூத்திரத்தில் (38) மனிதர்களின் சிறப்புப் பெயரையே குறிப்பதாக உரையாசிரியர்கள் முதலில் கருதினாலும் கடைசியில் எல்லாப் பெயர்களுக்கும் உரியதாகவே விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். ஏனென்றால் பதிலீட்டுப் பெயராக வரும் சுட்டுப் பெயர்கள் மனிதச் சிறப்புப் பெயர்க்கு மட்டும் அல்லாமல் பொதுப்பெயர்க்குப் பின்னாலும் வரும். எனவே இயற்பெயர் என்பது திட்டவட்டமாகச் சிறப்புப் பெயரைக் குறிக்கிறது என்று கூறமுடியாது; அப்படிச் சொன்னால் இலக்கணம் 'குன்றக் கூறல்' ஆய் அமைந்து விடும்.

இடையியலில் (22) இயற்பெயர்க்குப் பின்னால் 'ஆர்' என்ற விகுதி வந்து பலர்பால் வினைமுற்றைப் பெறும் என்ற சூத்திரமும் விரவுப்பெயரையும் பொதுப்பெயரையும் குறிப்ப

தாகவே உரையாசிரியர்கள் கொண்டுள்ளார்கள். சேனாவரையர் ஈண்டு இயற்பெயர் என்றது இரு திணைக்கும் அஃறிணை இரு பாற்கும் உரிய பெயரை என்று விளக்கமே கொடுத்துள்ளார். எனவே இந்தச் சூத்திரமும் 'இயற் பெயர்' எது என்பதை வரையறுக்கப் பயன்படவில்லை.

பெயரியலில் 'கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயர் '(சூ.15) என்று குறிப்பிடும்போது அஃறிணை பொதுப்பெயர் (பிற் காலத்தில் பால் பகா அஃறிணை பெயர் என்று அழைக்கப் படுவது) என்பது தெளிவு. அஃறிணை இயற்பெயராவன ஆ, நாய், குதிரை, கழுதை, தெங்கு... என்ற தொடக்கத்துச் சாதிப் பெயர் ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய் நிற்றலின் இயற் பெயர் என்றார்' என்பது சேனாவரையர் வாசகம். ஆனால் அவரே இயற்பெயர் எனவே பாலறிபெயரேயன்றி 'அஃறிணைப் பொதுப் பெயரும் உள என்பது பெற்றாம் என்று அடுத்துக் கூறியிருப்பது சில சந்தேகத்தைஎழுப்புகிறது. இதன்படி அஃறிணை இயற்பெயர் இரண்டு வகைப்படும் என்று ஆகிறது. பாலறிபெயர் என்பதற்கு பூவராகம் பிள்ளை அது இது, உது, பல்ல, பல சில என்ற சூத்திரங்களில் கூறப்பட்டவை' என்று விளக்கம் கொடுத்துள்ளார். அப்படியானல் பாலறி பெயரும் இயற்பெயராகும். அவை 'கள்' விகுதி ஏற்காமலும், பலவின்பால் வினைமுற்றைக் கொண்டு முடியும் என்று கொள்ள வேண்டும். இது பொருந்தாது. எனவே சேனாவரையருடைய விளக்கமான அஃறிணை இயற்பெயர் எனவே பாலறி பெயரே யன்றி அஃறிணைப் பொதுப் பெயர் என்பது பிரச்சனைக்கு உரியது.

தெய்வச்சிலையார் 'உயர்திணைப் பொருள்மேல் விரவி வரும் இயற்பெயர் ஒருமையும் பன்மையும் தோன்ற நிற்றல்' என்று குறிப்பிடும் பண்பு அஃறிணை பெயர் இயற்பெயராக வருகிறது என்பதைச் சுட்டுகிறது. (பெ. 17. விளக்கவுரை).

ஆகவே தொல்காப்பியச் சூத்திரங்களும் உரையாசிரியர் கருத்துகளும் விரவுத் திணையில் வரும் 'இயற் பெயர்' என்பதற்குத் தெளிவான விளக்கம் தரவில்லை என்றே நினைக்க வேண்டி

யிருக்கிறது. எனவே மொழியியலார் தரும் விளக்கதததையும் இலக்கணத்தையும் பார்ப்போம்.

உல்மன் என்ற சொற் பொருள் இயல் அறிஞர் (1962 ; 79) சிறப்புப் பெயர் (Proper nouns) என்றும் பொதுப் பெயர் (Common nouns) என்றும் பிரித்து சிறப்புப் பெயரை வெறும் அடையாளச் சின்னம் என்றும் பொதுப் பெயர் பொருளை உடையது என்றும் விளக்குகிறார்[1]. மொழியியலாரும் இரண்டுக்குமுள்ள வேறுபாட்டையும் இரண்டும் மொழி அமைப்பில் வேறுபடும் விதத்தையும் சுட்டிக் காட்டியுள்ளார்கள். உதாரணமாக அகத்திய லிங்கம் (1979 : 76) கூறுவதாவது:

'குறிப்பிட்ட ஒரு மனிதனின் அல்லது இடத்தின் அல்லது ஒரு குறிப்பிட்ட பொருளின் பெயரைக் குறிப்பது சிறப்புப் பெயர் எனப் படும்... கிறப்புப் பெயர்கள் அனைத்தும் குறிப்பிட்ட ஒரு பொருளையோ மனிதனையோ அல்லது இடத்தையோ குறிப்பன வாகும்....

பொருட்களை அல்லது மக்களைப் பொதுவாகச் சுட்டும் பெயர்கள் பொதுப் பெயர் எனப்படும் ... ... (ப. 77)

சிறப்புப் பெயர்கள் பன்மை உருபுகளை ஏற்று வருவதில்லை. சிறப்பான ஒன்றுக்கே உரிய நிலையில் பன்மை உருபை ஏற்க முடியாது... சிறப்புப் பெயர்கள் இனத்தைச் சுட்டும் அடைகளையும் எடுத்து வருவதில்லை.... அவற்றுடன் வரும் அடைகள் இனஞ் சுட்டா அடைகளே' (ப. 77)

எனவே பொதுப்பெயர்கள் பன்மை ஏற்பதும் (சில பொதுப் பெயர்களும் பன்மை ஏற்பதில்லை; அவை திரட் பெயர் (Mass nouns) என்று பொதுப் பெயர்களின் ஒரு உட்பிரிவாகக் கருதப்படும் -அகத்தியலிங்கம் 1979:77), இனஞ் சுட்டும் அடைகளை ஏற்று வருவதும் ஆகிய இரண்டு மாறுபட்ட பண்புகளை உடையதாகக் கருதலாம்.

எனவே தொல்காப்பியர் 'இயற்பெயர்' என்று விரவுத் திணையில் கூறுவது சிறப்புப் பெயர் என்றே கொள்ள வேண்டும்

அப்படியானல் 'ஒருமை, பன்மை இயற் பெயர்களுக்குப் புதிய விளக்கம் தரவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அதற்கு முன்னால் சிறப்புப் பெயர் பற்றிய உலக வழக்கையும் இலக்கியப் பயிற்சியையும் கவனித்து சிறப்புப்பெயர் பற்றிய வேறு சில உண்மைகளையும் அறிந்து கொள்ள வேண்டும்.

தெய்வச் சிலையார் மேலே நாம் குறிப்பிட்ட இலக்கணத்துக்கு மாறாக இயற்பெயர் பன்மை உருபை ஏற்று வரும் என்று காட்டியதோடு அதற்கான காரணத்தையும் புலப்படுத்தியுள்ளார்.

'சாத்தன் என்னும் பெயருடையார் இருவர், மூவர் சேரவந்த வழிச் சாத்தன் வந்தான் சாத்தான் வந்தான் எனத் தனித்தனி கூறின் பொருள் வேற்றுமை உணர்த்தாது ஒரு பொருளை இரு காற் சொன்னாற் போலப்படும். ஆண்டுச் சாத்தான்மார் வந்தார், சாத்திமார் வந்தார் என வேண்டுதலானும் அப்பொருள் உயர் திணை ஆகலானும்'... என்பது தெய்வச்சிலையார் வாசகம் (பெ. 11உரை விளக்கம்). முதலில் காரணம் கூறப்பட்டு அதனையொட்டியே மொழி அமைப்பு உண்மையும் சொல்லப் பட்டுள்ளது. அதாவது உலகில் வாழும் எல்லா மனிதர்களுக்கும் தனிப்பட்ட பெயர்கள் சிறப்புப் பெயராக அமைவதில்லை; ஒரு பெயரேஒருவர்க்கு மேற்பட்ட மனிதர்களுக்குச் சிறப்புப் பெயராக அமைகிறது என்ற உலக வழக்கை ஒட்டி இயற் பெயரும் பன்மை ஏற்று வந்துள்ளன. இதனால் சிறப்பு பெயர் ஒருகுறிப்பிட்ட மனிதரைக் குறிக்காமல் ஒருவர்க்கு மேற்பட்ட மனிதரைக் குறிப்பதால் பொதுப் பெயராக மாறிவிட்டது என்று நாம் கொள்ள வேண்டும்: ஆகையினால் தான் சிறப்புப் பெயர் பன்மை விகுதி ஏற்று வந்திருக்கிறது, என்று

நாம் விளக்கலாம். அப்படியே பிறமொழியில்விளக்கப்பட்டிருக்கிறது[2]. ஆயினும் தெய்வச்சிலையார் குறிப்பிட்ட வழக்கு அவர்கள் சுட்டும் வழக்கிலிருந்து கொஞ்சம் மாறுபட்டது, அதாவது மொழியியலார் இயற்பெயர் ஆகுபெயராக [ (i) ஒரு இயற் பெயரோடு தொடர்பு உடை பெயர்களை அதே இற்யபெயராகக் குறிப்பிடுவதையும் [3](ii) ஒரு இயற் பெயர் சுட்டும் பொருளின் சிறப்புப்பண்பு உடைய பொதுப் பெயரை அதே இயற்பெயரால் குறிப்பிடுவதையும்] கையாளப் படுவதையே உதாரணங்காட்டியுள்ளார்

கள். தெய்வச்சிலையார் காட்டிய உதாரணம் நேரடி உலக வழக்கை - ஒரே இயற்பெயர் ஒருவர்க்கு மேற்பட்ட மனிதர்க்கு இயற்பெயராக அமையும் நிலையை ஒட்டியது.

ஒரு இயற்பெயர் ஒருவர்க்கு மேற்பட்ட மனிதர்களுக்கு இயற் பெயராக அமையும்போது அதன் இலக்கணப்பண்பும் மாறி அடை யெடுத்து இனம் சுட்டுதலும் உண்டு என்பதற்கு இலக்கிய வழக்கும் உலக வழக்கும் சான்று பகர்கின்றன, சங்க இலக்கியத்தில் நெடுஞ்செழியன் போன்ற பெயர்கள் ஒருவர்க்கு மேற்பட்ட பெயராக அமைந்து அடை எடுத்து இனம் சுட்டியுள்ளன. தலையானங் கானத்து செருவென்ற நெஞ்செழியன், ஆரியப்படைகடந்த நெடுஞ் செழியன் என்று அடையெடுத்து வந்துள்ளது இரண்டு வேறு நெடுஞ்செழியன் இருந்ததையே காட்டுகிறது.

பாலு, பழனியப்பன் போன்ற சிறப்புப் பெயர்கள் இரண்டு மனிதர்களின் பெயராக அமையும் போது அவர்களிடையே உள்ள வேறுபாட்டை ஒட்டி பெரிய பாலு, சின்னபாலு, என்றும் கறுப்பு பழனியப்பன், சிவப்பு பழனியப்பன் என்றும் பிரித்து இனம் சுட்டுதலையும் இன்றும் காணமுடியும்.

ஆகவே இந்த நிலையில் நாம் மேலே குறிப்பிட்ட இலக்கணம் முரண்படுவது போலத் தோன்றினாலும் இங்கு இயற்பெயரின் அடிப்படை இலக்கணமான -தனிப்பட்ட மனிதரைக் குறிக்கும் அடையாளச் சின்னம் என்ற தன்மை மாறிப் போவதால்தான் அந்த முரண் ஏற்பட்டுள்ளது என்று உணர்ந்து கொள்ளவேண்டும். இதை இலக்கண ரீதியில் 'இயற்பெயர்' பொதுப் பெயராக மாறி விட்டது என்று கொண்டால் இலக்கணமும் முரண் இல்லாமல் போய்விடும்.

இயற் பெயரை ஆகுபெயராகப் பயன் படுத்தும் போது அதன் இலக்கணம் மாறுபடுவதற்கு இலக்கியத்திலும் வழக்கிலும் உதாரணங்களைப் பார்க்க முடியும். கம்பராமாயணத்தில் 'ஆயிரம் இராமர் நின்கேழ்ஆவரோ' (அயோத்தியா காண்டம் -- குகப் படலம் 35-4) என்ற தொடரில் வரும் இராமர் என்ற சிறப்புப் பெயர் எண்ணுப் பெயரின் அடையை ஏற்று வந்திருந்தாலும் அங்கு இராமர் என்பது இராமர் போன்ற சிறந்த பண்புடை

மனிதர் என்று பொதுப் பொருளைக் குறிப்பதாக அமைவதால் அடையெடுத்து வந்திருக்கிறது. இன்றும் 'இந்தச் சூழலைப் பாடுவதற்கு ஒரு கம்பன் இல்லை; ஒரு பாரதி இல்லை' என்ற தொடர்களைக் கேட்கலாம், எனவே இயற்பெயர் ஒருவர்க்கு மேற்பட்ட மனிதர்க்கோ-ஒன்றுக்கு மேற்பட்ட பொருளுக்கோ ஆகு பெயராக அமையும் போது பொதுப் பெயராக மாறுவதால் பன்மை விகுதி ஏற்றும் இனம் சுட்டும் அடைகளைப் பெற்றும் வருகின்றன. அதனால் மேலே குறிப்பிட்ட இயற்பெயரின் இலக்கணம் எப்பொழுதும் பொருந்துவதாகக் கொள்ளலாம்.

தொல்காப்பிய இலக்கணத்தைப் பொறுத்தவரையில் 'இயற்பெயர்' என்பது சிறப்புப்பெயர் என்று இன்று மொழியியலார் கொடுக்கும் இலக்கணத்தோடு ஒத்ததாகக் கொள்ள வேண்டும். அப்படியானால் உரையாசிரியர்கள் கொடுத்த 'கோதை' என்பது எப்படி ஒருமை இயற்பெயராகும் என்ற கேள்விக்கு விடை காண முயலுவோம்.

கோதை என்பது சங்க இலக்கியத்தில் பெரும்பான்மையான வழக்கு 'பூமாலை' என்ற பொருளைக் குறிக்கிறது. பெண்களின் 'தலைமயிர்' என்ற பொருளில் சிலம்பில் ஓரிடத்திலும் (25. 80) அரசனின் இயற்பெயராக அகம், புறம் ஆகியவற்றிலும் (அகம். 93 : 20, 263 : 11; புறம் 3 இடம்) வந்துள்ளன.

'கோதை மார்பிற் கோதையானும்' (புறம். 48-2)
'யாங்ஙனம் மொழிகோ ஓங்கு வாட் கோதையை' (புறம், 49-2)

இங்கு 'கோதை' என்ற அஃறிணை பொதுப் பெயர்தான் திணை விரவி உயர்திணை இயற் பெயராகி வழங்கப் பட்டுள்ளது என்று உணர வேண்டும். ஏனெனில் அதன் அடிப்படைப் பொருள் 'பூமாலை' என்பதே. எனவே கோதையை ஒருமை இயற்பெயர் என்று இயற்பெயரின் ஒரு பிரிவாகக் கொள்ள முடியாது; அது பொதுப் பெயரே ஆகும். அப்படியானால் வேறு இலக்கிய வழக்கோ, உலக வழக்கோ 'ஒருமை இயற்பெயர்' இருந்ததற்குச் சாட்சி கூறுகிறதா என்று பார்க்க வேண்டும்.

சங்க இலக்கியச் சிறப்புப் பெயர்களை மொழியியல் நோக்கில் ஆராய்ந்த சுப்பிரமணியம் (1955) தமிழர்களுக்கே உரிய சிறப்புப் பெயர்கள் பெரும்பான்மையும் இயற்கைப் பொருளான கொடிகள், மரங்கள், விலங்குகள், போன்றவற்றின் பெயர்களே என்றும் இப்படி இயற்கைப் பொருள்களின் பெயர்களை இயற்பெயர் களாகக் கொள்ளுவது முற்காலத்தில் பழங்குடி மக்களிடையே காணப்படும் முறை என்றும் குறிப்பிட்டு பல உதாரணங்களையும் தந்துள்ளார்[4].

| விலங்கின்பெயர் | | இயற்பெயர் | பால் |
|---|---|---|---|
| ஓரி (முதுநரி) | பத்து. 9. 257 | பத்து. 3. 111 | ஆண் |
| எருமை | அகம் 56. 3 | அகம் 115. 5 | ,, |
| ஏற்றை | தொல் 604 | அகம் 44:7-9 | ,, |
| மரப்பெயர் | | இயற்பெயர் | |
| அத்தி | | அகம் 376. 10 | ,, |
| மாதவி | செடிப்பெயர் சிலம்பு 13. 49 | சிலம்பு. 13. 51 | பெண் |

எனவே சங்க இலக்கியப் பயிற்சியும் பொதுப் பெயர்கள்தான் இயற்பெயர்களாக வழங்குவதற்கு ஆதரவாக உள்ளது. இதற் காக 'ஒருமை இயற்பெயர்' என்பதற்கு ஒருமைப் பொதுப்பெயர் என்று கொள்ளலாமா என்ற எண்ணம் தோன்றலாம். இங்கு ஒரு சிக்கல் உள்ளது.

தொல்காப்பியர் பெயரியலில் வேறு இடத்தில் அஃறிணை இயற்பெயர் என்று அஃறிணை பொதுப் பெயரைக் குறிப்பிட்டு இருந்தாலும் ஒரே சூத்திரத்தில் வரும் 'ஆண்மை இயற்பெயர், பெண்மை இயற்பெயர்' என்ற இரண்டு தொடர்களுக்குச் சிறப்புப் பெயர் என்றும் அதே சூத்திரத்தில் வரும் 'ஒருமை இயற் பெயர்' என்பதற்கு ஒருமை பொதுப் பெயர் என்றும் பொருள் கொள்வது பொருத்தமானதாகவோ, சிறப்பானதாகவோ கருத முடியாது. எனவே 'வழக்கு' பற்றிய வரலாற்றைத் தேடும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபடவேண்டும்.

சோழர் காலச் சிறப்புப் பெயர்களை ஆராய்ந்த நயினாரின் கருத்து (1982 : 77) குறிப்பிடத்தக்கது.

ஆட்பெயர்கள் ஊர்களுக்கு அமைவது போன்று ஊர்ப் பெயர்களும் ஆட்பெயர்களாக வருதல் உண்டு'.

என்று பொதுவாகக் குறிப்பிட்டு அதில் இரண்டு வகை இருப்பதையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

'இவ்வாறு வரும் பெயர்களில் ஊர்ப் பெயருடன் ஆட்களைக் குறிக்கும் 'அன்' அல்லது 'அள்' விகுதி ஈறாக வரும். ஆரூரன் வட்டாறன், குன்றன், உறையூரன் என இயற் பெயர்கள் அமைகின்றன, கூடல்காரி, குளத்தூர் பனையன், சந்திரன் களத்தூர், முனையன் ஆரூர். பனையன் களக்குடி, ஆனூர், கருவூர் என 'அன்' ஈறு பெறாமலும் ஊர்ப் பெயர்கள் ஆட்பெயர்களாக வரலாம். பெண்களுக்கும் இவ்வகைப் பெயர்கள் இருந்தன என்பதற்கு நக்கன் திருமாகாளம், நக்கன் ஒற்றியூர். நக்கன் கருவூர், நக்கன் காரைக்கால் போன்ற பெயர்களைக் குறிப்பிடலாம்'

இங்கு ஆண் / பெண் பால் விகுதி இல்லாமலும் ஊர்ப் பெயர் ஆட்பெயராக வருவதே சிறப்பாகக் கவனிக்கத்தக்கது. அப்படியே இன்றைய தமிழிலும் ஊர்ப்பெயர்கள் ஆண்பால் பெயர்களாகவும் (சிதம்பரம், பழனி, விருத்தாசலம் முதலியன) ஆற்றுப் பெயர்கள் பெண்பாற் பெயர்களாகவும் ('காவேரி, கங்கா, யமுனா முதலியன) வழங்குவதும் பழைய மரபின்எச்ச சொச்சங்கள் ஆகும். எப்படியாயினும் சிறப்புப் பெயர்க்குக் கொடுத்த விளக்கத்தை ஒட்டி இயற்பெயர் என்பது மனிதப் பெயர்களை மட்டும் அல்லாமல் ஊர், ஆறுபோன்ற பொருளின் பெயர்களையும் குறிப்பதாகக் கொண்டால் ஒருமை இயற்பெயர் என்பது ஊர், ஆறு, மலை முதலியவற்றின் பெயராகவும் அமையும். அவை திணை விரவி உயர்திணை இயற்பெயராக வழங்குவதும் இந்தக் கருத்துக்கு அரணாக இருக்கிறது. உரையாசிரியர்கள் இயற்பெயர் என்பதற்கு மனிதப் பெயர்களைக் குறிக்கும் பெயர்கள் என்று மட்டும் கொண்டதால்தான் அவர்களால் ஒருமை இயற்பெயர்க்குச் சரியான உதாரணத்தைக் கண்டுபிடிக்க முடியாமற் போய் விட்டது.

பன்மை இயற் பெயர் என்பதற்கு உரையாசிரியர்கள் கொடுத்த 'யானை' என்பதும் பொதுப் பெயரே. அது இயற் பெயராகக் கருத முடியாது. ஆனால் விலங்கின் பெயர்கள் மட்டு மல்லாது சில அஃறிணைப் பொதுப் பெயர்கள் திணை விரவி உயர்திணை இயற்பெயராக வருவது பற்றி முன்னரே குறிப் பிட்டோம். எனவே இங்கு இரண்டு பிரச்சனைகள் உள்ளன: 1) பன்மை இயற்பெயர்க்குச் சரியான உதாரணம் - இலக்கியச் சான்று கிடைக்க வில்லை. அதாவது இலக்கணத்துக்கு இலக்கியம் இல்லை. 2) இலக்கிய வழக்கில் அஃறிணை பொதுப்பெயர்கள் (தொல்காப்பியர் மொழியியல் கூறினால் 'அஃறிணை இயற் பெயர்கள்') திணை விரவி உயர்திணை ஆண்பால், பெண்பால் இயற்பெயர்களாக வந்துள்ளதற்கு இலக்கணம் இல்லை. அதாவது இலக்கியத்துக்கு இலக்கணம் இல்லை.

பொதுவாகத் தொல்காப்பியர் புற நிலையிலும் அக நிலை யிலும் அமைப்பு அழகில் ஓரளவு ஈடுபாடு உடையவர் என்பது புலனாகியுள்ளது. (சண்முகம் 1980 : 230-234; 1982 : 64). எனவே 'பன்மை இயற் பெயர்' என்பது அஃறிணை இயற் பெயர் போல அஃறிணைப் பொதுப் பொருளைத்தான் குறித்து நிற்கிறதா என்று எண்ணத் தோன்றுகிறது. அப்படியானால் ஒருமை இயற் பெயரில் எழுப்பிய பிரச்சனை- (ஒரே சூத்திரத்தில் 'இயற்பெயர்' இரண்டு பொருளில் கையாளப் பட்டது என்பது) இங்கும் எழுகிறது. ஆனால் இதற்கு மாறாக 1) சரியான உதாரணம் கிடைக்காதது. 2) இலக்கிய வழக்குக்கு இலக்கணம் இல்லாதது என்ற மேலே எழுப்பிய பிரச்சனைகளோடு இன்னொரு பிரச் சனையும் உள்ளது. அதாவது 3) பன்மை இயற் பெயர் மட்டும் அல்லாமல் பன்மை சுட்டிய எல்லாப் பெயரும் உயர் திணையில் ஆண், பெண் பால்களோடு அஃறிணை ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாக வரும் என்று தொல்காப்பியரே (பெ. 184) குறிப்பிட் டுள்ளார். இங்கு அஃறிணை பன்மையாகவும் வரும் என்பதே முக்கியம். வெறும் இயற்பெயராய் மட்டும் இருந்தால் பன்மை ஏற்காது. மேலும் பன்மை ஏற்றால் இயற் பெயரும் பொதுப் பெயராகி விடும். எனவே பன்மை இயற்பெயர் அஃறிணைப் பன்மைக்கும் வரும் என்பதன் சரியான விளக்கம் என்ன? இந்த

மூன்று எதிர் கேள்விகளுக்கும் பன்மை இயற் பெயர் என்பது 'அஃறிணைப் பொதுப்பெயர்' என்றால் விடை கிடைத்து விடுகிறது. ஒரே கலைச் சொல்லுக்கு ஒரே சூத்திரத்தில் இரண்டு பொருள் கொள்வதா என்ற மூல கேள்விக்குப் பதில் தொல்காப்பியர் சொல் நிலையில் அமைப்பு அழகு உண்டாகும்படி அமைத்து விட்டார் என்று வேண்டுமானால் சமாதானப்படுத்தலாம்.

உரையாசிரியர்கள் பன்மை இயற்பெயர் (பன்மை சினைப் பெயர் முதலியனவும்) எப்படி அமையும், யானை எப்படி பன்மை இயற் பெயராகும் என்ற முக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட வில்லை. சேனாவரையர் முதலில் 'பன்மை' என்பது எந்தப் பொருளில் (1 மிகுதியான எண்ணிக்கையில் (ஆண், பெண், ஒன்று, பல என்ற நான்கு பிரிவில்) வந்துள்ளது அல் து 2. பன்மையிலும் வரும் என்று ஒன்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது). கையாளப் பட்டிருக்கிறது, அதன் தொடரியல் இலக்கணம் (1. மிகுதியான எண்ணிக்கையில் வருவது என்றால பன்மை என்பது பிறிதின் இயைபு நீக்கிய விசேடனம்-அதாவது இனம் சுட்டும் அடை; 2) வது விளக்கம் என்றால் இயைபு இன்மை நீக்கிய விசேடம் அதா வது இனம் சுட்டாத அடை) என்ன என்ற பிரச்சனையை எழுப்பி இரண்டு வித்மான விடை இருப்பதைச் சுட்டிக் காட்டி ஒன்றே சரி என்று விவாதித்துள்ளார். அந்த விவாதத்தில் நச்சினார்க் கினியர் நேரடியாகவும் சங்கரநமசிவாயரும் சிவஞான முனிவரும் நன்னூல் உரை மூலமாகவும் வைத்தியநாததேசிகர் இலக்கண விளக்க உரை மூலமாகவும் கலந்துகொண்டுள்ளார்கள். எப்ப டியாயினும் முக்கிய பிரச்சனையான பொருளில் கருத்து செலுத் தாமல் 'சொல்' இலக்கணத்தில் கவனம் திருப்பப்பட்டு விட்டது. இங்கு சிவஞான முனிவரே தன்னுடைய கருத்தை நிலைநிறுத்த பெரு முயற்சி எடுத்துக் கொண்டுள்ளார்.

## 2.2. சினைப் பெயர்

இளம்பூரணர் முடவன் (ஆண்), முடத்தி (பெண்), நெடுங் கழுத்தல் (பன்மை), செவியிலி (ஒருமை) என்ற உதாரணங்களை மட்டுமே கொடுத்துள்ளார். இவைகளில் நெடுங்கழுத்தல் என்பதே சினைப் பெயர். பிற சொற்கள் எப்படி சினைப் பெய

ராகும் என்ற கேள்வி எழுகிறது. அவை உறுப்புக் குறைவு உடைய மனிதனைக் குறிக்கும் சொற்கள். எனவே இவை இரண்டு சந்தேகத்தை எழுப்புகின்றன. சினைப் பெயர் என்பது

1) சினைக் குறைவை-சினையது விகாரத்தைக் குறிக்குமா?

2) சினையை உடைய முதலை-சினை முதலை அது எப்படிச் சுட்டும்?

இளம்பூரணர் தந்த உதாரணங்களைச் சேனாவரையர் அப்படியே ஏற்றுக் கொண்டதால் அவைகளை நியாயப் படுத்த அதே அடிப்படையில் சினைப் பெயருக்குப் பொது விளக்கத்தைச் சேர்த்துள்ளார். 'சினை உடைமையாகிய நிமித்தம் பற்றி முதன் மேல் வரும் பெயர்' என்பது சேனாவரையர் வாசகம். பொது வாக அவர் உரையைப் படித்தால் நாம் மேலே எழுப்பிய பிரச்சனை சேனாவரையர் கண்ணுக்குப் படவில்லை என்றே தெரிகிறது, நச்சினார்கினியரும் சேனாவரையர் கருத்தை அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளார். தெய்வச்சிலையார் 'சினைப் பெயராவது உறுப்பின் பெயர்' என்று விளக்கி (பெ.20) மோவாய் (ஆண்), முலை (பெண்),கை(ஒருமை) தலை (பன்மை) என்ற உதாரணங்களையும் கொடுத்துள்ளது இளம்பூரணருடைய உதாரணமும் சேனாவரையருடைய விளக்கமும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதோடு அவர்களுடைய உரையில் உள்ள பிரச்சனையை உணர்ந்து கொண்டுள்ளார் என்பதையும் புலப்படுத்தி விடுகிறது, அங்கு சினைப் பெயருக்கு நேரடி பொருள் கொண்டு உதாரணமும் (பெ,23) கொடுத்தால் மேலே எழுப்பிய பிரச்சனை எழா விட்டாலும் அவர் உரையில் வேறு சில கேள்விகள் எழத்தான் செய்கின்றன. 1) மோவாய் என்பதன் பொருள் என்ன? 'வாய்க்குக் கீழுள்ள இடம்– என்ற பொருளும் ('குச்சின் இரைத்த குரூஉ மயிர் மோவாய் புறம். 257) தாடி என்ற பொருளும் உடையதாகத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகிறது. மோவாய் என்பது ஆண்மைச் சினைப் பெயர் என்பதால் 'தாடி' எனற பொருளே இங்குக் கொள்ள வேண்டியிருக்கிறது. 2) ஆணுக்கும் பெண்ணுக்கு முள்ள சிறப்பு உறுப்புகளை ஆண்மை சினைப் பெயர், பெண்மை சினைப் பெயர் என்று எப்படிக் கூறலாம் 3) கையும், தலையும் எப்படி முறையே ஒருமை சினைப்பெயர், பன்மை சினைப்பெயர் ஆகும். தெய்வச்சிலையாரே இரண்டாவது கேள்வியை நினைத்துப்

பார்த்துச் சமாதானம் சொல்லியுள்ளார், அவர் பெண்பாலைக் குறிக்க 'முலை எழுந்தாள்' என்றும் அஃறிணையைக் குறிக்க 'முலை எழுந்தது' என்று உதாரணம் தந்து விட்டு

'முலை எழுந்தது எனத் தன்வினையான் வரின் அறிஃணைப் பொருளேயாம் பிற எனின், முலைஎன்பது இருதிணைப் பொருட்கும் உள்ளதோர் உறுப்பாதலின் ஆண்டு திணை தெரியாமல் பொதுப் பட நிற்கும்: அது முதல் வினையோடு முடியினல்லது திணை விளங்காது என்க' என்று விளக்கமும் தந்துள்ளார். இதன்படி முலை என்பது சினைப்பெயராயினும் பால் உணர்த்துவது முதலுக்கு உரிய வினையோடு கூடிதான் என்பதால் சினையாகு பெயராய் முதற்பெயரைக் குறிப்பதால் உயர்திணையிலும் அஃறி ணையிலும் பயன் படுகிறது என்று ஆகிறது. எனவே 'முலை' என்பது சினைப் பெயராயினும் பால் வேறுபாடு உணர்த்த சினை முதற் பெயராக மாறி விடுகிறது.

'மோவாய்' என்ற சொல்லைப் பொறுத்தவரையில் 'மோவாய் வந்தான்' என்ற உதாாணமும் மேலே குறிப்பிட்ட வகையைச் சார்ந்தது தான்.

'குன்றியன்ன கண்ண குரூஉ மயிர் பின்றாள் வெள்ளெலி
மோவாய் ஏற்றை'

'முடங்குபுற இறவின் மோவாய் ஏற்றை'

எனவும் அஃறிணைப் பொருண்மை உணர்த்தின என்று தெய்வச்சிலையார் விளக்கியுள்ளார். ஆனால் மோவாய் என்ப தால் அஃறிணை பெறப்பட்டது அவ்வளவு சிறப்பாக இல்லை, எப்படியாயினும் சினைப் பெயர்களை ஆண்பாற் பெயர், பெண் பாற்பெயர் என்று பிரித்தது மொழி அமைப்பை ஒட்டிய பாகு பாடாகக் கொள்ளமுடியுமா என்பது சந்தேகமாக இருக்கிறது, கை என்பதைத் தனி உறுப்பாகக் கருதி ஒருமை சினைப் பெயர் என்றும்தலை என்பது கண், செவி, வாய் போன்ற பல உறுப்புகள் சேர்ந்த பகுதியானதால் பன்மை சினைப் பொயர் என்றும் கருதினரா என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஆனால் இவை மொழி அமைப்பில் எப்படி வேறு படுகின்றன என்று காட்டினால்

தான் இந்தப் பாகுபாடு சரியானதாக ஏற்றுக்கொள்ளமுடியும். எனவே சினைப்பெயரை நான்கு வகையாகப் பிரித்தது மொழியமைப்பில் உள்ள வேறுபாட்டை ஒட்டியதாகக் கருத முடியவில்லை. இந்தப் பாகுபாடு செய்வதற்கு வேறு ஏதாவது--தர்க்கரீதியாகவோ, தத்துவ ரீதியாகவோ காரணம் இருக்கிறதா என்பதைக் கண்டு பிடிக்க முயல வேண்டும். மொழி இலக்கணம் சில சமயத்தில் வெறும் மொழியமைப்பில் உள்ள வேறுபாட்டை ஒட்டி அமையாமல் வேறு அடிப்படையிலும் அமைவது உண்டு. இதற்குக் காரணம் இலக்கணம் ஆசிரியன் வழக்குகளை மட்டும் கொண்டு இலக்கணம் செய்யாமல் தன்னுடைய சிந்தனையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இலக்கணம் செய்வது உண்டு.[5]

தெய்வச்சிலையாரைப் பொறுத்தவரையில் இளம்பூரணர் சினைப் பெயருக்குக் கொடுத்த உதாரணங்களைச் சினைமுதற்பெயர்களுக்கு உரியவையாக கொண்டுள்ளார். அங்கு பன்மை சினை முதற்பெயருக்கு மட்டும் வேறு உதாரணம் கொடுத்துள்ளார். இதுபற்றி அடுத்த பிரிவில் விளக்கப்படும். மேலும் பிற்கால இலக்கண உரைகளும் இளம்பூரணர் கருத்தையே ஆதரித்து நாம் மேலே எழுப்பிய பிரச்சனைகள் பற்றிக் கவலைப்படாமல் இருந்து விட்டன. ஆனால் வைத்தியநாததேசிகர் மட்டும் இலக்கணவிளக்க உரையில் நாம் மேலே எழுப்பிய உறுப்புக்-குறைவு எப்படி சினைப் பெயராகும்என்ற கேள்வியை நினைத்துப் பார்த்து (இ,வி.185) 'முடம் என்பது சினையது விகாரம் ஆதலின் சினை ஆயிற்று' என்ற விளக்கத்தைத் தந்துள்ளார் அப்படியானால் உறுப்புக் குறைவைக் குறிக்கும் சில சொற்களே சினை என்பதையும் குறிக்கும். புறநானூற்றில் (28 1 - 3;)

'சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்
கூனும் குறளும் ஊமும் செவிடும்
மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்கு
எண் பேரெச்சம்'

என்று எட்டுவகை உறுப்புக் குறை பேசப்படுகிறது.

'கூனும் குறளும் ஊமும் செவிடும்

அழுகு மெய்யாளரும் ........ சிலம்பு 5.118

கூனும் குறளும் ஊமும் செவிடும்

மாவும் மருளும் மன்றுயிர் பெறா மணி. 12-97

என்ற வரிகளும் பழந்தமிழகத்தில் உறுப்புக் குறைவு பற்றிய எண்ணம் பரவலாக இருந்ததைக் காட்டுகின்றன. ஒன்றுக்கு மேற் பட்ட உறுப்புக் குறைவும் 'கையில் ஊமன்' (குறுந். 58.4); 'கண்ணில் ஊமன்' (புறம். 238:10) என்று இலக்கியத்தில் குறிக்கப் பெற்றுள்ளன. இப்படிப் பட்ட உறுப்புக் குறைவைச் சினைப் பெயர்கள் குறிக்கிறது என்றால் ஆண்மை சினைப்பெயர், பெண்மை சினைப்பெயர், ஒருமைச் சினைப்பெயர் போன்ற பாகு பாடு செய்தது பற்றியும் அவை திணை விரவி வருவது பற்றியும் பிரச்சனைகள் எழுகின்றன. எனவே இவை பற்றி மேலும் ஆராய வேண்டும்.

அடுத்து, தொல்காப்பியர் பிற இடங்களில் எப்படி, சினைப் பெயர் என்பதைப் பயன் படுத்தி யுள்ளார் என்று பார்ப்போம். கிளவியாக்கத்தில் (61)

கண்ணும் தோளும் முலையும் பிறவும்

பன்மை சுட்டிய சினை நிலைக் கிளவி

என்பது சினைநிலைப்பெயர்களே ஆகும். அவை இரட்டையாக இருப்பதால் தொடரியலில் ஒருமை வினைமுற்று ஏற்று வரும் என்று குறிப்பிட்டுள்ளார். பெயரியலில் உயர்திணைப் பன்மைப் பெயர் களின் பட்டியலில் 'பல்லோர் குறித்த சினைநிலைப் பெயர்' (11.4) என்று கூறுவது பலர்பால் விகுதி ஏற்ற சினைப்பெயர்களே. அதனால் இளம்பூரணரும், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடனார் ஆகியோரும் பெருங்காலர், பெருந்தோளர் என்ற உதாரணங்களையும் (அதாவது வெறும் சினைப்பெயர்களா அல்லது சினைப் பெருக்கத்தைக் குறிக்கும் பெயர்களா என்பது சந்தேகமாக இருக்கிறது). தெய்வச்சிலையார், கூனர், குருடர், முடவர்ஆகிய உதாரணங்களையும் (அதாவது சினைக் குறையைக் குறிக்கும் பெயர்களையும்) தந்துள்ளார்கள்.

பன்மை சினைப்பெயர் என்பதற்குக் கிளவியாக்க சூத்திரத்தில் குறிப்பிட்ட கண், முலை, தோள் போன்ற உறுப்புக்களைக் குறிப்பதாகக் கொள்ளலாமா என்பதும் ஆராயத்தக்கது. எப்படியாயினும் முடவன், முடத்தி, செவியிலி போன்ற சொற்களைச் சினைப் பெயர்களாகக் கொள்வது மேலே குறிப்பிட்ட பிரச்சனைகளுக்கு இடம் அளிக்கும்.

## 2. 3. சினை முதற் பெயர்

சீத்தலைச்சாத்தான், முடக்கொற்றன் (ஆண்), முடக்கொற்றி (பெண்), செவியிலி ஒருமை), பெருங்கால்யானை (பன்மை) என்று இளம்பூரணர் கொடுத்த உதாரணங்களையே சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆசியோர் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இவர்கள் 'சினை' என்பதற்கு உறுப்புக் குறைவு அல்லது உறுப்புப் பெருக்கம் (பெருங்கால் என்பது உறுப்புப் பெருக்கத்தைக் குறிக்கும்?) என்றும் முதற்பெயர் என்பது ஆண், பெண், பன்மைப்பெயர்களில் இயற்பெயரையும் ஒருமைப்பெயரில் தொழிற் கருத்தா (Agentive suffix) விகுதியையும் குறிப்பதாகக் கொண்டுள்ளார்கள். இங்கு 'முதற்பெயர்' என்பது இயற்பெயராகக் கருதப்பட்டுள்ளது. நன்னூலார் (சூ 282.1 இயற்பெயரை 'முதற் பெயர்' என்றே கூறியிருப்பதும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். சேனாவரையருடைய சினைமுதற்பெயர் விளக்கம் அதிக பட்சம் ஆண்மை, பெண்மை, பன்மை பெயர்களுக்கே பொருந்துவதாக உள்ளது,

'சீத்தலைச்சாத்தன், கொடும்புறமருதி எனச் சினைப்பெயரோடு தொடர்ந்து வரும் முதற்பெயர். சாத்தன், மருதி என்னும் முதற்பெயர் சினைப்பெயரொ தொடர்ந்தல்லது பொருள் உணர்த்தாமையின் சினைமுதற்பெயராவன,

என்பது சேனாவரையருடைய வாசகம். நச்சினார்க்கினியரும் இதே கருத்தையே சிறிது திருத்தத்தோடு கொடுத்துள்ளார்.

'சீத்தலைச் சாத்தன், கொடும்புறமருதி எனச் சினைப்பெயரோடு தொடர்ந்தல்லது பொருள் உணர்த்தாது வரும் இயற்பெயராகிய முதற்பெயர்' என்பது நச்சினார்க்கினியர் வாசகம், இவர்கள்

கருத்துப்படி செவியிலி என்பது ஒருமை சினை முதற்பெயராகக் கொள்ள முடியாது. முதற்பெயர் என்பதற்கு முதற்பெயரைக் குறிக்கும் விகுதிகள் (அன், அள், இ முதலியனவற்றைக் குறிக்கும்) என்று கொண்டால் தான் முடக்கொற்றன் முதலிய சொற்களும் செவியிலி முதலிய சொற்களும் சினைமுதற்பெயரில் அடங்கும். இதனால் முடவன், முடத்தி. போன்ற சொற்களும் கூட சினை முதற்பெயரில் சேர்க்கும் தகுதி பெறும்.

முடக்கொற்றன், முடவன் என்ற சொற்கள் சொல்லமைப்பில் வேறு பட்டவையே. முடக்கொற்றன் என்பது இரண்டு முழு பெயர் சொல் பெற்று தொகையாக உள்ளது (எனவே தொடரியலைச் சார்ந்தது) .முடவன் என்பது ஒரு முழு பெயர்ச் செல்லும் ஒரு பகுதியும் உடையது. (எனவே சொல்லியலைச் சார்ந்தது) .முடக் கொற்றன் என்பது சிறப்புப் பெயர், முடவன் என்பது பொதுப் பெயர். ஆயினும் இரண்டையுமே ஆண்மைச் சினை முதற் பெயர்களாகக் கருதலாம், சினைப் பெயரை உறுப்பு குறையைக் குறிக்கும் பெயர் என்னும்போது சினை முதற்பெயர் அதனை யொட்டிய பொதுப் பெயராக அமையலாம். அதனால் தான் தெய்வச்சிலையார் 'சினை முதற் பெயராவது சினையையும் முதலையும் உணர்த்தும் பெயர்' என்று விளக்கம் கொடுத்து முடவன் (ஆண்) ,முடத்தி (பெண்) ,செவியிலி (ஒருமை), தூங்கல் (பன்மை) ஆகிய உதாரணங்களைக் கொடுத்துள்ளார். இங்கு தூங்கல் என்பது எப்படி பன்மைச் சினைப் பெயராக ஆகும் என்பதும் ஏனயை பெயர்கள் திணை எப்படி விரவி பயன்படும் என்பதும்ஆராயத்தக்கன. தூங்கல் என்பதற்குச் சினை முதற் பொருள்உடையதாகத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடவில்லை. இவை எப்படி திணை விரவி வருகிறது என்று அடுத்தபிரிவில் விளக்கப்படும்.

## 2.4 . முறைப்பெயர்

முறைப் பெயரின் பொருள் பற்றி கருத்து வேறுபாடு இல்லை, எனினும் உரையாசிரியர்கள் தரும் விளக்கம் குறிப்பிடத்தக்கது. 'முறைப் பெயராவன தந்தை, தாய் என முறை பற்றி முறையுடைப் பொருள் மேல் வருவன. முறையாவது பிறவியான் ஒரு

வனோடு ஒருவற்கு வரும் இயைபு' என்று சேனாவரையர்கூறுவது பொருள் நிலையில் தரும் விளக்கம். மொழி அமைப்பு நிலையிலும் முறைப் பெயர் பிற உயர்திணைப் பெயர்களிலிருந்து வேறுபட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அது புறநிலையில் நான்காம் வேற்றுமை உருபேற்ற பெயரைத்தழுவி வரும். எனக்கு மகன், கண்ணனுக்குத் தந்தை எனவே முறைப் பெயரைத் தனி வகையாகக் கருதுவது இலக்கண ரீதியிலும் ஒத்துக் கொள்ளத்தக்கது.

முறைப்பெயரில் தொல்காப்பியர் ஆண், பெண் என்ற இரண்டு பாகுபாட்டை குறிப்பிட்டு பன்மை சிறப்பாக-பலர்பால் விகுதி ஏற்று வருவதைத் தனியே உயர்திணைப் பெயர்களின் பட்டியலோடு (பெ. 11.3) சேர்த்துக் கூறியுள்ளார். முறைப்பெயர்கள் அடிப்படையில் உயர்திணைப்பெயர்கள் என்பது இதனால் தெளிவாகிறது.

. திணை விரவி வரும் முறை

விரவுப் பெயர் குறித்த சொற்கள் எப்படி திணை விரவி வருகின்றன என்பதைப் பெயரியல் 25 முதல் 29 வரையுள்ள சூத்திரங்கள் வருணிக்கின்றன. இவைகளை உரையாசிரியர்கள் 'இரு திணையும் பால் உணர்த்துமாறு' என்று பொதுவாகக் குறிப்பிடுகிறார்கள். வினையியலிலும் விரவு வினை என்னென்ன என்பது ஒரு சூத்திரத்தில் தொகுத்துக் கூறப்பட்டு (சூ. 25) அடுத்த ஐந்து நூற்பாக்களில் (26-30) அவை எப்படி திணை விரவி வரும் என்பதும் விளக்கப்பட்டுள்ளன.

பெயரியலைப் பொறுத்தவரையில் விரவுப் பெயர்களின் வகையையும் தொகையையும் விரியையும் கூறிய தொல்காப்பியர் அவைகளைப் பால் அடிப்படையில் மறு பாகுபாடு செய்து கொண்டே திணை விரவி வரும் முறையை விளக்குகிறார். இயற்பெயர், சினைப்பெயர் என்று முதலில் பாகுபாடு செய்தவர் அவைகளின் விரியைப் பெண்மை சுட்டிய பெயர், ஆண்மை சுட்டிய பெயர் போன்று மறு பாகுபாடு செய்து பின்னரே இவை ஒவ்வொன்றும் எப்படி திணை விரவி வருகின்றன என்பதை விளக்குகிறார்.

### 3. 1. பெண்மை சுட்டிய பெயர்கள்

பெண்மை சுட்டிய பெயர்கள் என்று பொதுவாகக் குறிப்பிட்டதை முன்னைய சூத்திரங்களின் கருத்தை ஒட்டி இயற்பெயர், சினைப் பெயர், சினை முதற் பெயர், முறைப்பெயர் ஆகிய நான்கு வகையிலும் உண்டு என்பதை உரையாசிரியர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். அந்தப் பெயர்கள் 'ஒன்றற்கும் ஒருத்திக்கு ஒன்றிய நிலையே' (26.2) என்று தொல்காப்பியர் கூறியதை 'அஃறிணை பெண் ஒன்றற்கும் உயர்திணை ஒருத்திக்கும் உரிய' என்று இளம்பூரணர் விளக்கியுள்ளார்.

| | | அஃறிணை | உயர்திணை |
|---|---|---|---|
| இயற்பெயர்: | சாத்தி | வந்தது | வந்தாள் |
| சினைப்பெயர்: | முடத்தி | ,, | ,, |
| சினைமுதற்பெயர்: | முடக்கொற்றி | ,, | ,, |
| முறைப் பயர்: | தாய் | ,, | ,, |

இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர் ஆகிய மூன்றுக்கும் உயர்திணையிலும் அஃறிணையிலும் இலக்கியச் சான்று கண்டுபிடிக்க முடியவில்லை, தாய்/ குழவி/ ஆகிய இரண்டு முறைப்பெயர்களு திணை விரவி வந்துள்ளதற்குப் பல சான்றுகள் கிடைக்கின்றன.

சிறு தாம்பு தொடுத்தப் பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
...........
இன்னே வருகுவர் தாயர் என்போர் (முல்லை. 12-16)

என்னும்போது 'கன்றின் தாய், என்று அஃறிணையில் வந்துள்ளது

நல்லான் நடுங்கு தலைக் குழவி
தாய் காண் விருப்பின் அன்ன

என்ற குறுந்தொகைப் பாடலிலும் (132 : 4,5) 'ஆன் குழவி தாய்' என்பது அஃறிணை வழக்கே.

'புதல்வன் தாய் புறங் கவைஇயினளே' (குறுந்.359-6) என்ற வரியில் 'புதல்வன்தாய்' என்பதோடு 'தாய்...கவை இயினள்' என்பதாலும் தாய் உயர்திணை என்பது வெளிப்பட்டு விடுகிறது.

3. 2. ஆண்மை சுட்டிய பெயர்கள்

இந்தப் பெயர்களும் நான்கு வகையாகி அஃறிணை ஆண்பாலாகிய ஒன்றுக்கும் உயர்திணை ஆண்பாலுக்கு வரும்.

| | | அஃறிணை | உயர்திணை |
|---|---|---|---|
| இயற்பெயர்: | சாத்தன் | வந்தது | வந்தான் |
| சினைப்பெயர்: | முடவன் | ,, | ,, |
| சினைமுதற்பெயர்: | முடக்கொற்றன் | ,, | ,, |
| முறைப்பெயர்: | தந்தை | ,, | ,, |

அப்பூதி அடிகள் வரலாறு மூலம் திருநாவுக்கரசர் என்ற ஆண் பாற்பெயர் அவர் வீட்டில் இருந்த அளவைகள் (மரக்கால்) நிறை கோல் (தராசு), பசு, எருமை ஆகிய அஃறிணைப் பொருட்கு மட்டும் அல்லாமல் குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டன என்று அறிய முடிகிறது.

.............. மனை பால் உள்ள

அளவைகள், நிறைகோல், மக்கள், ஆவொடு, மேதி மற்றும்

உளவெல்லாம் அரசின் நாமம் சாற்றும் ஒழுகலாற்றான்

என்று பெரியபுராணமும் (1784) விளக்குகிறது,

சங்க இலக்சியத்தில் ஊமன் என்ற சினைமுதற்பெயர் உயர் திணையாக வழங்குகிறது. 'கையில் ஊமன் கண்ணிற் காக்கும்' (குறுந். 584) இங்கு ஊமன் உயர்திணைப் பெயராகவே பயன் படுத்தப்பட்டுள்ளது. குறுந்தொகையிலே (224-5) வரும் 'உயர் திணை ஊமன்போல' என்ற தொடரில் உயர்திணை என்ற அடை பயன்படுத்தப் பட்டிருப்பது ஊமன் என்ற பொதுச் சொல் (உயர்திணைக்கும்அஃறிணைக்கும்) என்பதைக் காட்டுகிறதா அல் லது உரையாசிரியர் கூறுவது போல ஊமன் (கோட்டான்) என்ற அஃறிணைச் சொல்லை நீக்குவதற்குப் பயன்படுத்தப் பட்டிரு

கிறதா என்பது தெளிய முடியவில்லை. 'ஊமை எண்கு' (பத்து. 10-501) என்ற தொடரில் ஊமை என்ற சினைப்பெயர் அஃறிணைப் பெயரோடும் வந்துள்ளது என்பது தெளிவாகிறது.

வன்பறழ் தந்தைக் கடுவன் (குறுந். 26.7,8) என்ற தொடரில் 'தந்தை' அஃறிணை ஆண்பாலையே சுட்டுகிறது. 'குறுந்தொடி தந்தை ஊரே' (குறுந். 233.7), 'சேந்தன் தந்தை' (குறுந்.25 .4) என்ற தொடர்களில் அது உயர்திணைப் பெயராகவே உள்ளது.

3.3 ஒருமை சுட்டிய பெயர்கள்

ஒருமை சுட்டிய பெயர்களில் இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர் ஆகிய மூன்றும் அடங்கும். இவை அஃறிணை ஒன்றன் பாலுக்கும் உயர்திணையில் ஆண்பால், பெண்பால் ஆகிய இரண்டுக்கும் வரும்.

ஒருமை இயற்பெயர் என்பதற்கு ஊர்ப்பெயர், ஆறுகளின் பெயர் முதலியன என்று கொண்டால் அவை எப்படி உயர் திணையில் ஆண்பால் இயற்பெயராகவும் பெண்பால் இயற்பெயராகவும் வரும் என்பது மேலே காட்டப்பட்டது.

சினைப்பெயர்களில் செவியிலி என்பதை உதாரணமாகக் கொண்டு இளம்பூரணர் உதாரணம் காட்டியுள்ளார். ஒருமை சுட்டிய சினைப்பெயரும் சினை முதற்பெயரும் எது என்பதே தடுமாற்றமாக இருப்பதால் அவை எப்படி இரண்டு திணைக்கும் வரும் என்பதும் விவாதத்துக்கு உரியது.

3. 4. பன்மை சுட்டிய பெயர்கள்

பன்மை சுட்டிய பெயர்கள் எதைக் குறிக்கின்றன என்பது தெளிவு இல்லாததால் எப்படி இரண்டு திணைக்கும் வருகின்றன என்பதும் கேள்விக்குறியே. எனினும் இவை உயர் திணையில் ஆண்பால், பெண் பாலுக்கும் அஃறிணையில் ஒன்றன் பால், பலவின் பாலுக்கும் ஆகிய நான்கு பாலுக்கும் பொதுவாக வரும் என்று கூறியுள்ளார் (பெ. 28.)

இனி விரவுப் பெயர்களாகக் கூறிய தனிப்பெயர்கள் எப்படி திணை விரவி வருகின்றன என்று பார்ப்போம்.

3.5 தான் / தாம்

தான் என்பது 'ஒருமைக்கு உரித்து' (பெ. 37) தாம் என்பது பன்மைக்குஉரித்து (பெ. 30) என்று மட்டுமே தொல்காப்பியர் கூறியுள்ளார். இளம்பூரணர்தான் அவை இரு திணைக்கும் முறையே ஒருமைக்கும் பன்மைக்கும் உரித்து என்று விளக்கி

தான் வந்தான், வந்தாள், வந்தது
தாம் வந்தார், வந்தன

என்று உதாரணங்களைக் கொடுத்துள்ளார். இதனால், தான் என்பது ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் ஆகிய மூன்று பாலுக்கும் தாம் என்பது பலர்பால், பலவின்பால் ஆகிய இரண்டு பாலுக்கும் உரியன என்ற உண்மை தெளிவாகிறது. இரண்டு சொற்களும் இரண்டு திணையிலும் வருவதால் விரவுப்பெயர் ஆயிற்று.

'அறியான் தானும்' ...... ஆண். குறுந். 74- 3
'தானே அளியளோ' ...... பெண். ,, 56. 5
'தான் வந்தன்றே ...... கார்' ஒன்று ,, 65, 3
'சேந்தனர் கொல்லோ' தாமே
(சிறப்பு ஒருமை) — பலர். ,, 79.6
'தாமே செல்ப' ,, ,, 348. 1
'நெஞ்சம் தாம் கலந்தன' பல. ,, 40.5

3. 6. எல்லாம்

'எல்லாம்' என்பது 'பல்வழி நுதலிய நிலைத்தாகும்மே' என்று (பெ. 23. 1) பொதுவாகவும் உயர்திணையில் தன்மைப் பன்மையில் வரும் என்று சிறப்பாகவும் (பெ. 33) தொல்காப்பியர் கூறியுள்ளார். ஆனால் உரையாசிரியர்கள் 'எல்லாம்' என்பது எப்படி திணை விரவி வரும் என்பதில் கருத்து மாறுபடுகிறார்கள். இதில் இளம்பூரணர் கருத்தையே சேனாவரயையார். நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோர் ஆதரித்துள்ளார்கள்; தெய்வசிலையார்

கொஞ்சம் மாறுபட்ட விளக்கமும் சுப்பிரமணிய சாஸ்திரியார் வேறு விதமான விளக்கமும் கொடுத்துள்ளார்.

3. 6. 1. இளம்பூரணர்

இவர் 'எல்லம் வந்தேம், எல்லாம் வந்தீர், எல்லாம் வந்தனர் எல்லாம் வந்தன 'என்ற உதாரணங்களைக் கொடுத்துள்ளதால் தன்மைப் பன்னை, முன்னிலைப் பன்மை, பலர்பால், பலவின் பால் ஆகிய நான்குக்கும் வரும் என்று கருதுகிறார் என்பது தெளிவாகிறது.

3,6,2, தெய்வச்சிலையார்

'எல்லாம் வந்தன, எல்லாம் வந்தீர் என்ற வழி அஃறிணைப் படர்க்கையினும் முன்னிலையினும் வந்தது. எல்லாம் வந்தேம் என்ற வழி உயர்திணை ஆயிற்று' என்று தெய்வச்சிலையார் விளக்கியதோடு உயர்திணையில் பலர்பாலில் 'எல்லாம்' என்பது வராது என்பதை வாதப் பிரதிவாதங்களோடு விளக்கியுள்ளார். அவையாவன:

1) 'உயர்திணைக்கண் எல்லாரும், எல்லீரும் என எடுத்தோதி ஆண்டுத் தன்மைப்பெயர் ஓதாமையாலும், 2) எழுத்ததிகாரத்துள் எல்லாம் என்னும் பெயர்க்கு வற்றுச் சாரியை விதித்து 'உயர் திணையாயின் நம்மிடை வரும்' (எழு. 190) என ஆண்டும் உளப்பாட்டுத் தன்மைக்கு ஏற்றசாரியை வரும் என விதித்தமையானும் இப்பெயர் உயர்திணைக்கண் உளப்பாட்டுத் தன்மைக்கே உரித்து என்பது இவ்வாசிரியர் கருத்து என்று கொள்க' என்பது தெய்வச்சிலையார் வாசகம், இங்கு இரண்டு காரணங்கள் கூறப் பட்டுள்ளன. ஒன்று எதிர்மறைக் காரணம். அதாவது உயர் திணைப்பெயர்களாகப் படர்க்கைப்பன்மையும் முன்னிலைப் பன்மையும் எடுத்து விளக்கப்பட்டுவிட்டன. எனவே உயர் திணையில் தன்மைப்பன்மை மட்டுமே இன்னும் விளக்கப்பட வேண்டியுள்ளது என்பது. அடுத்தது உடன்பாட்டுக் காரணம்: அதாவது எழுத்ததிகாரத்தில் 'எல்லாம்' என்பது தன்மைப் பன்மையாகவும் பலவின் பாலாகவும் மட்டுமே வருணிக்கப் பட்டுள்ளன. இந்தக் கருத்துகள் ஒத்துக் கொள்ளத் தக்கதுதான். ஆனால் இந்த வாதங்களின் அடிப்படையில் 'எல்லாம் வந்தீர்' என்பது எப்படி பொருந்தும் என்ற கேள்வி எழுகிறது. ஏனெனில் அவர் கருத்துப்படி எல்லீரும்

வந்தீர். எல்லாம் வந்தீர் என்று இரண்டு முன்னிலைப் பன்மை வடிவங்கள் ஏற்பட்டு விடுகின்றன அப்படியானால் உயர்திணை முன்னிலை, அஃறிணை முன்னிலை என்ற இரண்டு பன்மைகள் வருகின்றன. எனவே எல்லாம் வந்தீர் என்ற தொடர் சந்தேகத்துக்கு உரியதாக உள்ளது.

3. 6. 3. சுப்பிரமணியசாஸ்திரி

சுப்பிரமணியசாஸ்திரி (1945) 'யாம் எல்லாம் வந்தேம் அவை எல்லாம் வந்தன' என்று தன்மைப் பன்மைக்கும் அஃறிணை பன்மைக்கும் ஆக இரண்டு உதாரணங்களைக் கொடுத்திருந்தபோதிலும் இங்கு அவை பெயரடைகளாகப் பயன் படுத்தப்பட்டிருக்கின்றனவே தவிர தனிப்பெயராக அல்ல. இங்குத் தொல்காப்பியர் குறிப்பிடுவது தனிப் பெயராக வருவது தான். உரையாசிரியர்கள் அனைவரும் 'எல்லாம்' என்பது தனிப் பெயராகப் பேசுவதாலும் அதை முழுமைப் பதிலீட்டுப் பெயர் (pronouns of totality) என்று அவரும் (சுப்பிரமணியசாஸ்திரி 1934:134) பிறரும் (உ-ம் அகத்தியலிங்கம், 1979:129) கருதுவ தாலும் தனியாகப் பதிலீட்டுப் பெயராக வருவதே இங்குக் கருதப் படவேண்டும். அப்படியானால்

எல்லாம் வந்தேம் — தன்மைப் பன்மை

எல்லாம் வந்தன — பலவின்பால் (படர்க்கை)

என்ற உதாரணங்களே பொருந்துவதாகவும், பல்வழி நுதலிய நிலைத்தாகும்மே' என்பது பன்மைப்பொருளில் தன்மைப் பன்மை, பலவின்பால் ஆகிய இரண்டில் மட்டுமே வரும் என்று சுட்டுவதாக வும் கொள்ளவேண்டும். இலக்கிய வழக்கும் இந்தக் கருத்துக்கு அரண் செய்கிறது.

எல்லாம் பாடுகம் (வம்மினோ, பரிசின்மாக்கள்) — புறம் 32.1 -தன்மைப்பன்மை

எல்லாம் எவனோ (பதடிவைகல்). குறுந் 321.1 - பலவின் பால்

இவை அல்லாமல் 'எல்லாம்' என்பது தொடரல் உரு பனாக (Discontinuous morpheme) பெயருக்கு முன்னால் (இடமுன்) வரும்.

எல்லா மனையும் — புறம் 296. 3.

இந்தப் பெயரடையே பெயருக்குப் பின்னால் (குஞ்சரம் எல்லாம். புறம் 308. 11) வருவதும் உண்டு தொல்காப்பியர் பெயரடையாக - பெயர்க்கு பின்னால் வருவதுபற்றிப் பேசவே இல்லை. பெயர்க்குப்பின்னால் வரும் பெயரடை பற்றி உரையாசிரியர்களிடையே உள்ள கருத்து வேறுபாடு தனி ஆராய்ச்சிக்கு உரியது.

3. 7. முன்னிலை

முன்னிலைப் பெயர்களோடு முன்னிலை வினையும் எப்படி திணை விரவி வருகின்றன என்பதில் கருத்து வேறுபாடு இருப்பதால் இரண்டையும் சேர்த்தே பார்க்க வேண்டியிருக்கிறது.

3. 7 1. தொல்காப்பியர்

நீ, நீயிர் என்ற இரண்டு பெயர்களும் 'பால் தெரிபில உடன் மொழிப்பொருளே' (பெ. 34, 2) என்று தொல்காப்பியர் கூறுவது அவை பால் காட்டவில்லை என்பதைத் தெளிவாக்குகிறது. ஆனால் அவரே நான்கு சூத்திரம் தாண்டி 'முன்னம் சேர்த்தி முறையின் உணர்தல்' (37.2) என்று அவை பால் உணர்த்தும் முறையைக் கூறியுள்ளார். மேலும் இரண்டு சூத்திரங்களில் நீ என்பது ஒருமைக்கும் நீயிர் என்பது பன்மைக்கும் உரியதாக விளக்கியுள்ளார். வினையியலிலேயே முன்னிலை ஒருமை வினை முற்று 'ஒருவர்க்கும் (உயர்திணையில் ஆண்பாலுக்கும் பெண் பாலுக்கும்) ஒன்றற்கும் (ஒன்றன் பாலுக்கும்) ஒப்பத்தோன்றும்' (வி. 26. 3) என்றும் அப்படியே முன்னிலைப்பன்மை வினை முற்று பலர்பாலுக்கும் பலவின்பாலுக்கும் 'சொல்லோர் அனைய' (வி. 27. 3) என்றும் விளக்கியுள்ளார். இவற்றால் தொல்காப்பியத்தில் படிப்படியாகத்தான் திணை விரவிவரும் முறை விளக்கப் பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. ஏனெனில் முதலில் பால் காட்டாது; 'எண்' மட்டும் காட்டும் என்று கூறிப் பின்னர் குறிப்பால் பால் உணர்த்தும் (இதுவிரிவாக பின்னால் விளக்கப்படும்) என்றும் வினையியலில் இரண்டு திணைக்கும் பொதுவாக வரும் என்றும் கூறுகிறார். ஆனாலும் உண்டனை போன்ற முன்னிலை வினை முற்று எப்படி மூன்று பால் பெயர்களுக்கு பொதுவாகவரும் என்பதும்

சந்தேகப்படவேண்டி யிருக்கிறது. எனவே உரையாசிரியர்கள் எப்படி விளக்குகிறார்கள் என்பதை முதலில் பார்த்து, பிறகு உண்மை என்ன என்று அறிய முயலுவோம்.

3.7.2. இளம்பூரணர்

'பால்தெரிபிலவே உடன் மொழிப் பொருள' என்பதை இளம்பூரணர் 'திணைப் பகுதி தெரிய நில்லா; இருதிணையும் உடன் தோன்றும்' என்று பொழிப்புரை எழுதி 'நீயிர் வந்தீர், நீ வந்தாய் என இருதிணைக்கும் பொதுவாய் நின்றவாறு கண்டு கொள்க'

என்று (பெ.34. விளக்கவுரை) விளக்கம் எழுதி வாசகர்மேல் பாரத்தைப் போட்டுவிட்டுப் போய்விட்டார். நீ என்பது 'ஒருமைக்கு உரித்தே' (பெ. 35) என்பதையும் ஒருவன், ஒருத்தி, ஒன்று என்பனவற்றிற் கெல்லாம் பொதுவாகிய ஒருமை' என்று விளக்கி விட்டு, 'நீ வந்தாய்' எனக் கண்டு கொள்க' என்று அதே பாணியில் கூறி விட்டார். பெயரியல் 36 ஆம் சூத்திரத்திலும் 'நீயிர் என்பது பன்மைக்கு உரித்தே' என்று அதே முறையில் விளக்கம் தந்துள்ளார். ஆனால் வினையியலில் வினை முற்று எப்படி இரண்டு திணைக்கும் பொதுவாக வரும் என்பது பற்றி எந்தவித விளக்கமும் தராமல் போய் விட்டார்.

3.7.2. சேனாவரையர்

இளம்பூரணரை விட மேலே ஒரு படி சென்று 'இரு திணைக்கும் உரிய பெயரெல்லாம் தத்தம் மரபின் வினையொடு வந்து திணை விளக்குமன்றே; இவற்றிற்கு அன்ன மரபின் வினை யின்மையின் ஒருவாற்றானும் திணை விளக்கா 'என்று ஆணித் தரமாக சொல்லி விட்டார். தொல்காப்பியரே 'முன்னத்தால்' அவை பால் உணர்த்தும் என்பதால் இவ்வளவு அழுத்தம் அவருக்கு உடன்பாடாக இருக்காது என்றே நினைக்க வேண்டி யிருக்கிறது. எப்படியாயினும் இவரும் முன்னிலைச் சொற்கள் (முன்னிலை வினையும் உட்படத்தான்) எப்படி திணை விரவி வருகின்றன என்று விளக்கவில்லை; கல்லாடனாரும் சேனாவரையரின் கட்சியே. நச்சினார்க்கினியர் 'நீயிர் வந்தீர், நீ வந்தாய் என

வினையானும் திணை தெரியாமை காண்க' என்னும் போது உண்மையை எடுத்துக் காட்டுவதோடு நின்று விட்டார். அதாவது இளம்பூரணர் போல் நம்மிடம் எந்தப் பொறுப்பையும் ஒப்புவிக்க வில்லை; சேனாவரையர் போல் வினைமுற்றும் பால் காட்டாது என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறவும் இல்லை. அதே சமயத் தில் பொழிப்புரையில் சொன்ன உண்மையை விளக்க வுரையில் நிருபிக்க அவர்முன்வரவு மில்லை. காரணம் முன்னிலைச் சொற்கள் உண்மையில் அப்படி அமையாதது தான்.

3.7.4. தெய்வச்சிலையார்

தெய்வச்சிலையாரும் தொல்காப்பியர் கருத்தைப் பொழிப் புரையாக எழுதியதோடு வேறு ஒரு செய்தியும் குறிப்பிட வில்லை. ஆனால் முன்னிலைப் பெயர்கள் பால் உணர்த்தும் விதத்தை 'முன்னம் சேர்த்து முறையின் உணர்தல்' என்றுசொன்னதில் 'முறை' என்பது உலக முறைப்படி என்ற பொருளில் பிற உரையாசிரியர்கள் கொள்ள, தெய்வச்சிலையார் மட்டும் 'பின்வரும்சொல்' என்று பொழிப்புரையில் பொருள் எழுதி

'நீ அரசன், நீ குயத்தி, நீ கடல் என்பன முறைவந்த சொல் லினால் பால் விளங்கின, நீயிர் என்பதற்கும் இவ்வாறே உதாரணம் வந்தவழிக் கொள்க' என்று விளக்கமும் கொடுத்துள்ளார். இதனால் வினையியலிலும் இதே முறையில் (வி. 26 வரை)

'உண்டாயோ மகனே, உண்டாயோ மகளே என்ற வழி உயர் திணை உணரப் பட்டது; உண்டாயோ குயிலே என்றவழி அஃறிணை உணரப்பட்டது; உண்டீரோ மக்காள் என்றவழி உயர்திணை உண ரப்பட்டது; உண்டீரோ கிளிகாள் என்ற வழி அஃறிணை உணரப் பட்டது. உண்டீரோ மக்காள் என்றவழி ஆண்பன்மை, பெண் பன்மை, விளங்கல் வேண்டின் அதனோடு தொடர்ந்த சொல்லான் உணர்க' என்று விளக்கியுள்ளார். அதாவது தெய்வச்சிலையார் இரண்டு திணைக்கும் பெயர் விரவிவரும் என்பதை ஓரளவு நிருபித்துள்ளார். எனவே இதனுடைய வன்மை மென்மைகளைப் பார்ப்போம். முன்னிலை படர்க்கைப் பெயரை ஏற்ற வாக்கியங்கள் இலக்கிய வழக்கிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

(வருந்தினை போலு) நீ மாதவி (சிலம்பு 13. 51) என்பதில் அஃறிணைப் பெயர் (மாதவி) முன்னிலை ஏற்று வந்திருக்கிறது. இது புறநிலையில் சரியான வாக்கியமே. புதைநிலையில் வேறு விதமாக விளக்க வேண்டியிருக்கும் என்பது சுட்டிக் காட்டத் தக்கது. ஆயினும் முன்னிலைச் சொற்கள் பிற விரவுத்திணைச் சொற்களிலிருந்து வேறுபடுகின்றன. அதாவது ஏனைய விரவுப் பெயர்கள் படர்க்கையில் திணை, பால் விகுதி ஏற்று வந்த வினை முற்றுகளைக் கொண்டு முடிந்தால் அந்தச் சொல்லின் சரியான திணை, பால் உணர்ந்து கொள்ள முடியும். இதைத்தான் தொல் காப்பியர் 'தத்தம் வினையொடு அல்லது பால் தெரிபிலவே' (பெ. 18, 3, 4) என்று விளக்கியுள்ளார். அதுபோல முன்னிலை ஒழிந்த விரவுவினைகள் அவை ஏற்கும் எழுவாய்ப் பெயரால் சரியான திணை, பாலைத் தெரிந்து கொள்ள முடியும். 'அவன் வாழ்க, அது வாழ்க). ஆனால் முன்னிலைச் சொற்களால் அதாவது முன்னிலைப்பெயர் அது ஏற்கும் வினைமுற்றாலோ, முன்னிலை வினைமுற்று அது ஏற்கும் எழுவாய்ப் பெயராலோ சரியான திணை, பால் பாகுபாட்டைப் புரிந்து கொள்ள முடியாது. முன்னிலை 'இடம்' என்பதையும் எண்ணையும் (ஒருமை, பன்மை) மட்டுமே தெரிந்து கொள்ள முடியும். எனவே தெய்வச்சிலையார் காட்டிய உதாரணங்களும் இலக்கிய மேற்கோள்களும் புறநிலையில் ஒத்துக்கொள்ள முடியுமாயினும் புதைநிலையில் வேறுவிதமாகவே விளக்கப்படும். அப்படியே அவருடைய வினைமுற்று உதாரணங் களின் இலக்கண விளக்கமும் முன்னிலை திணை பால் காட்டுகிறது என்பது விவாதத்திற்குரியது. தெய்வச்சிலையார் காட்டியது போன்ற உதாரணங்கள் இலக்கிய வழக்கிலும் காணப் படுகின்றன. அதாவது முன்னிலை வினைமுற்று (வம்மின்) படர்க்கை பெயரை (பரிசின் மாக்கள்) கொண்டு முடிந்துள்ளது.

'வம்மினோ பரிசின் மாக்கள்' (புறம் 32). முதலில் இந்த வாக்கியங்களில் எழுவாயாகக் கருதப்படுகிற பெயர்கள் விளிப் பெயர்கள். தெய்வச்சிலையார் காட்டிய பெயர்கள் எகார விகுதி (மகனே) ஏற்றிருப்பதாலேயே விளிப் பெயர்கள் என்பது தெளி வாகிறது. பரிசின்மாக்கள் என்பது உயர்திணையில் அண்மை

விளிச் சொல்லாக இருப்பதால்தான் விளிவிகுதி பெறவில்லை. மேலும் நன்னூலார் கூறியபடி (303) விளி என்பது

............ படர்க்கையோரைத்
தன்முகமாகத் தான் அழைப்பதுவே.

ஆகையால் படர்க்கைப்பெயர் (மகன்) விளிவிகுதி பெற்று (மகனே) முன்னிலை ஆக்கப்பட்டிருக்கின்றன. அதனால் திணை, பால் காட்டும் பெயர்கள் விளியின் அடிப்படையாக உள்ளனவே தவிர அதன் விளிவிகுதியில் திணை, பாலுக்குரிய விகுதி சேர்ந்து வரவில்லை. படர்க்கைப்பெயர் விளிப்பெயரானதும் அதன் திணை, பால் விகுதி முக்கியத்துவம் இழந்து முன்னிலை என்ற பண்பே ஆதிக்கம் பெறுகிறது. அதனால்தான் முன்னிலை வினை முற்றைப் பெறுகிறது.

மாற்றிலக்கண மொழியியலார் விளியை வாக்கியத்தின் அக உறுப்பாகக் கருதாது புற உறுப்பு என்று கூறி விளிவேற்றுமைக்கும் அது கொண்டு முடியும் வினைச்சொல்லுக்கும் எந்த விதமான பொருள் தொடர்பும் கிடையாது என்றும் கூறுவார்கள் (உ.ம் அகத்தியலிங்கம் 1979: 258). 'மகனே உண்டாயோ' என்பதில் மகனே என்பதைத் தனி உறுப்பாகவும் (வாக்கியமாகவும்) உண்டாயோ என்பதைத் தனி வாக்கியமாகவும் கருதுவார்கள். (உண்டாயோ என்பது வினாவாக்கியம், ஓகார வினா இடைச்சொல் ஏற்று வந்திருக்கிறது. அதனுடைய எழுவாய் 'நீ' என்பதுதான். அதாவது 'மகனே! நீ உண்டாயோ' என்பது போலத்தான் புதைநிலையில் அமையும். எனவே இங்கும் முன்னிலை திணை, பால்உணர்த்துகிறது என்பது அவ்வளவு பொருத்தமாக இல்லை. எனவே முன்னிலைச் சொற்கள் ஏனைய விரவுத்திணைச் சொற்களிலிருந்து மாறுபட்டவை தான். முன்னரே குறிப்பிட்டது போல (சண்முகம், 1982) தொல்காப்பியர் திணை, பால் பாகுபாட்டில் அடங்காத சொற்களையும் அடக்க முயற்சித்ததன விளைவு இது. தெய்வச்சிலையார் ஒழிந்த உரையாசிரியர்கள் முன்னிலைச் சொற்கள் எப்படி திணை விரவி வருகின்றன என்று காட்ட முனையவில்லை. தெய்வச்சிலையார் தமிழ்மொழியின் அமைப்பைக் கொஞ்சம் ஊன்றிக் கவனித்ததால் சில வாக்கியங்கள் சாதகமானவை போல அமைந்திருப்பதைக்

கண்டுபிடித்துவிட்டார். ஆனால் அவை புறநிலையில் சரியான வாக்கியமாக இருந்தும் புதைநிலையில் அதாவது இலக்கணத்தை விளக்கும் முறையில் மாறுபட்டவை. எனவே அவை சாதகமான உதாரணங்கள் அல்ல.

### 3. 8. பிற விரவுவினைகள்

தொல்காப்பியரே
எஞ்சிய கிளவி இடத்தொரு சிவணி
ஐம்பாற்கும் உரிய தோன்றலரரே

என்ற சூத்திரத்தின் மூலம் எல்லா 'இடத்' துக்கும் திணை-பாலுக்கும் வரும் என்று தெளிவாகவே கூறிச்சென்றுள்ளார், இது ஒரு பொதுநிலையில் அமைந்தது. அடுத்த இரண்டு சூத்திரங்களில் சில விரவுவினைகள் அதாவது வியங்கோள், செய்யும் என்னும் முற்று இரண்டும் சில சிறப்புக்கட்டுப்பாடுகள் கொண்டுள்ளன என்று விவரித்துள்ளார். அந்த நிலையிலும் அவை ஒன்றுக்கு மேற்பட்ட திணை – பாலில் வருவதால் விரவு வினையாகவே உள்ளன.

## 4. இலக்கண அடிப்படை

நாம் மேலே விரவுவினைச் சொற்களின் விளக்கத்தையும் அவை திணை விரவி வரும் முறையையும் பார்த்தோம். இப்படி சில வகைச் சொற்கள் இரண்டு திணையிலும் விரவி வருவதற்கு மொழி அமைப்பு நிலையில் ஏதாவது காரணம் இருக்கிறதா என்று அறிய முற்பட வேண்டும். ஏனெனில் அதுதான் விரவுத்திணையின் இலக்கண அடிப்படையைப் புலப்படுத்தி அதன் ஆழத்தைக் காட்டும்.

தொல்காப்பியர் நேரடியாக விரவுத்திணையின் இலக்கண அடிப்படையைப் பற்றி விவரிக்கவில்லை. விரவுத்திணையை வருணிக்கும்போது அவர் பயன்படுத்திய சில சொற்களும், சொற்றொடர்களும் இலக்கண அடிப்படையைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. ஆனால் உரையாசிரியர்கள் அந்த முறையில் நோக்காது உரைவிளக்கங்களில் இலக்கண அடிப்படைபற்றி சில

கருத்துகளைத் தெரிவித்துள்ளார்கள். ஆயினும் இலக்கண அடிப் படையைப்பற்றித் தனியே நினைத்துப் பார்க்காததால் முழு நிலையில் அடிப்படை பொருந்தும் விதம் பற்றியோ, எல்லாச் சொற்களுக்குரிய அடிப்படை பற்றியோ தொல்காப்பியர் கூறவும் இல்லை; உரையாசிரியர்கள் விவாதிக்கவும் இல்லை.

## 4.1. இலக்கணமும் உலகப்பொருளும்

நச்சினார்க்கினியர் விரவுவினையை விளக்கும்போது (வி. 25) விரவுத்திணை பற்றி ஒரு அடிப்படையான கேள்வியை எழுப்பிப் பதில் சொல்லியிருப்பது இலக்கண ஆராய்ச்சியில் ஒரு புதிய கோணத்தைப் புலப்படுத்துவதாய் உள்ளதால் அது முதலில் குறிப் பிடத் தகுந்தது.

'இரு திணைக்கும் பொதுவாயதோர் பொருள் இன்மையான் அதனால் நிகழும் விரவுத் தொழில் ஒன்று இன்றால் எனின் ...... அவ்வினைமுதற் பொருண்மையால் நிகழும் விரவுத் தொழிலும் உளவாயின.'

என்பது நச்சினார்க்கினியர் வாசகம். இங்கு எழுப்பியுள்ள பிரச்சனையைப் பொதுவாகக் கூறினால் உலகப்பொருளுக்கும் இலக் கணக்கூறுக்கும் உள்ள உறவு பற்றியது என்று பொதுமைப்படுத் தலாம். இது மொழியின் மெய்ப்பொருளியல் (philosophy of language) எனப்படும். நச்சினார்க்கினியர் கருத்துப்படி விரவுப் பொருள் அதாவது இரண்டு திணைக்கும் பொதுவான பொருள் இல்லாவிட்டாலும் விரவுவினை உண்டு என்பதே. அவர் விரவுப் பெயர் இருப்பதை ஒத்துக்கொள்வதால் விரவுப்பொருள் இல்லாமல் விரவுப்பெயரும் விரவுவினையும் உண்டு என்று கருதுகிறார் என லாம். உண்மையில் சிலஇலக்கணக் கூறுக்கு இணையான உலகப் பொருள் உண்டு; வேறு சில இலக்கணக் கூறுக்கு இணையான உலகப்பொருள் இல்லை. உதாரணமாக, ஆண்பால், பெண்பால் என்ற இலக்கணக்கூறுக்கு இணையாகவும் காலம், இடம் போன்ற இலக்கணக்கூறுக்கு நேராகவும் உலகப்பொருள் உண்டு. ஆனால்

இடை/ உரி, எச்சம்/ முற்று ஆகியவற்றுக்கு இணையாக உலகப் பொருள் இல்லை. எனவே இலக்கணம் மொழி அமைப்பில் உள்ள வேறுபாட்டை ஒட்டி அமைக்கப்படுவதே தவிர இணையான உலகப் பொருள்உண்டா? இல்லையா எனபதைப்பற்றிக் கவலைப்படாதது. உலக அமைப்பு வேறு; மொழிஅமைப்பு வேறு என்ற பொது உண்மையும் நச்கினார்க்கினியர் விளக்கத்தால் தெளிவாகிறது.

### 4. 2. உரையாசிரியர்கள்

இளம்பூரணர், சேனாவரையர் ஆகியோரின் கருத்துத் தழுவலாகவே ஏனையோர் உரை அமைந்துள்ளது. ஆயினும் இளம்பூரணரும், சேனாவரையரும் கருத்து மாறுபடுகிறார்கள். மேலும் இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர், முறைப்பெயர் ஆகியவற்றின் அடிப்படை வேறு வேறாகவும், பிறவற்றின் அடிப்படைவேறாகவும், இருபப்தால் இவை ஒவ்வொன்றின் அடிப்படையைத் தனித்தனியே பார்ப்பது நல்லது.

### 4.2.1. இயற்பெயர் முதலியன

இங்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் கல்லாடனார் ஆகியோர் கருத்தில் அதிக மாற்றம் இல்லை. எனவே இவர்கள் கருத்தெல்லாம் இளம்பூணரர் கருத்துத் தழுவலாகவே கொள்ளலாம்.

### 4. 2. 1. 1. இளம்பூரணர்

இளம்பூரணர் 'பெண்மை சுட்டிய பெயர்' என்ற சூத்திர உரையில் 'பெண்மை பற்றிவரும் நான்குபெயரும் அஃறிணைப் பெண் ஒன்றற்கும் உயர்திணை ஒருத்திக்கும் உரிய' என்று பொழிப்புரை எழுதிவிட்டு 'சாத்தி வந்தது, சாத்தி வந்தாள் ...... முறையானே அஃறிணைப் பெண் ஒன்றற்கும் உயர்திணைப் பெயர் ஒருத்திக்கும் (உரியவாய்) [8] வந்தவாறு கண்டு கொள்க'

என்று உதாரணமும் விளக்கமும் கொடுத்துள்ளார். இப்படியே ஆண்மை சுட்டியபெயர், ஒருமை சுட்டியபெயர், பன்மை சுட்டிய பெயர் ।ஆகிய மூன்றுக்கும் மொழிப்புரையும், உதாரணமும்

விளக்கமும் கொடுத்துள்ளதால் இயற்பெயர் முதலிய நான்கும் 'இரண்டு திணைக்கும் உரிய சொல்' என்பது அவருடைய கருத்தாகக் கொள்ளலாம்.

நச்சினார்க்கினியரின் பொழிப்புரையில் சூத்திரவாசகத்தை ஒட்டி சிறிது வேறுபாடு இருப்பினும் 'அஃறிணைப் பெண் ஒன்றற்கும் உயர்திணை ஒருத்திக்கும் பொருந்திய நிலைமையை உடையன; 'மூன்று பாற்கும் ஒரு தன்மைய' என்ற பொழிப்புரைகள் இளம்பூரணர் கருத்திலிருந்து வேறுபட்டதல்ல. கல்லாடனார் உரை நச்சினார்க்கினியரைப் பெரிதும் தழுவியது.

தெய்வச்சிலையாரும் பொழிப்புரையில் 'உயர்திணைக்கும் அஃறிணைக்கும் ஒத்த நிலைமைய' என்று எழுதி 26 ஆம் சூத்திரத்தில்

> 'இவையும் உயர்திணை வினை கொண்ட வழி உயர்திணை எனவும் அஃறிணை வினை கொண்ட வழி அஃறிணை எனவும் கொள்க. இவ்வுரை வருகின்ற சூத்திரங்கட்கும் ஒக்கும்'

என்ற பொது விளக்கமும் கொடுத்துள்ளார். இவையெல்லாம் அதிகப் பொருள் வேறுபாடு உடையன அல்ல. எனவே இளம்பூரணர் 'இரு திணைக்கும் உரிய' என்பதை அடிப்படையாகக் கொண்டு இயற்பெயர் முதலியவற்றின் அடிப்படையை அறிந்துகொள்வோம். இளம்பூரணரின் தொடர் ஒரு சொல் பல பொருட்கும் உரிமை தோன்றினும் 'என்ற தொல்காப்பிய உரியியல் தொடரை (1.4) நினைவுபடுத்துவதாக உள்ளது. அப்படியானால் இவர்கள் 'இயற்பெயர் முதலியன 'பலபொருள் ஒருசொல்' என்ற கருத்துடையவர்கள்; அதாவது இயற்பெயர் முதலியன பலபொருள் ஒரு சொல்லாக இருப்பதனால் விரவுத்திணையாக அமைந்துள்ளன என்ற கருத்துடையவர்கள் என்று கருதலாமோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

### 4.2.1.2. சேனாவரையர்

சேனாவரையர் விரவுப்பெயர்கள் பலபொருள் ஒருசொல் இல்லை என்பதை வன்மையாக மறுத்துள்ளார். மேலே குறிப்

பிட்டபடி அவருக்குப் பின்னால் வந்த உரையாசிரியர்கள் இந்தக் கருத்தை ஆதரிக்கவுமில்லை; மறுக்கவும் இல்லை. நச்சினார்க் கினியர் சொல்லதிகாரத்தில் இது பற்றி ஒன்றும் பேசாவிட்டாலும் எழுத்ததிகார உரையில் இந்தக்கருத்தை ஆதரிப்பது போல் ஒரு விளக்கம் கொடுத்துள்ளார். சேனாவரையர் பெயரியல் 20-ஆம் சூத்திரஉரையில்

> 'ஒரு நிமித்தத்தான் இரண்டு திணைப்பொருள் உணர்த்து தலின் விரவுப்பெயர் பொருள்தோறும் நிமித்த வேறுபாடு உடைய பலபொருள் ஒரு சொல் அன்மை அறிக'

என்று கூறியதால் விரவுப்பெயர்கள் ஏன் பலபொருள்ஒரு சொல் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்; அதாவது பலபொருள்ஒருசொல், பலப்பலபொருளைவேறுவேறு காரணத் தால் (நிமித்த வேறுபாடு) உணர்த்துவது; ஆனால் விரவுப் பெயர் ஒரு குறிப்பிட்ட காரணத்துக்காக இன்னொரு திணையின் பொருளை உணர்த்துவது என்பது சேனாவரையர் கருத்து.

சேனாவரையர் இதே காரணத்தினால் உலகம் என்ற சொல் 'இடம், மக்கள் தொகுதி' என்ற இரண்டு பொருள் உணர்த்து வது பல பொருள் ஒரு சொல்லாகக் கருதவேண்டும் என்று இன்னொரு சூத்திர உரையில் (கிளவி. 57 உரை விளக்கம்) வாதாடியபோதும் பலபொருள்ஒருசொல் இல்லாமல் இன்னொரு வகையான ஒரு சொல் இருப்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

> 'உலகம் என்பது இடத்தையும் ஆகுபெயரான் இடத்து நிகழ் பொருளாகிய மக்கள் தொகுதியையும் உணர்த்தும் ஆகலான் இருதிணைக்கண்ணும் சென்றது அன்றோ எனின் : அற்றன்று: வடநூலுள் உலகம் என்பது இரு பொருட்கும் உரித்தாக ஓதப்பட்டமையின் மக்கள் தொகுதி யையும் உணர்த்தும் வழியும் உரிய பெயரே ஆகலின் ஆகுபெயரன்று; அதனால் ஒரு சொல் இரு பொருட்

> கண்ணும் சென்றதெனப்படாது இருபொருட்கும் உரிமை யான் இரண்டு சொல் எனவேபடும் என்பது. வேறு பொருள் உணர்த்துதலின் வேறு சொல்லாதலே துணிவாயினும் பல பொருள் ஒரு சொல் என்புழி எழுத்தொப்புமை பற்றி ஒரு சொல் என்றார்'.

என்பது சேனாவரையர் வாசகம். இங்கு உலகம் என்ற சொல்லின் இரண்டு பொருளும் எப்படி அமைந்தது என்பதை ஒட்டியுள்ள இரண்டுவித கருத்துகளுக்கு ஏற்ப இரண்டு வகை யான விளக்கம் தருவது சொற்பொருளியல் ஆய்வில் சேனா வரையர் காட்டும் நுட்பமாகும். 1) ஆகுபெயராய் 'ஒரு சொல்லின் பொருள் இன்னொரு பொருளை உணர்த்துவது' ஒரு சொல் இரண்டு பொருட்கண்ணும் செல்வது எனப்படுவது. இது பலபொருள் ஒரு சொல் அல்ல. அப்படியில்லாமல் 2) ஒரு சொல் இரண்டு பொருட்கும் உரியது; அவை வெவ்வேறு சொற்கள், வடிவ ஒப்புமையால் மட்டுமே ஒரு சொல்லாகக் கருதப்படுவது என்பது. இதுவே பலபொருள் ஒரு சொல். சேனாவரையரின் இந்த நுண்ணிய கருத்து இலக்கண உலகில் பாராட்டப்படாமலே போய்விட்டது.

நச்சினார்க்கினியர் எழுத்ததிகாரத்தில் வரும் 'அஃறிணை விரவுப்பெயர்' (சூ. 155) என்ற தொடருக்குத் தரும் விளக்கத்தில் சேனாவரையரின் கருத்தின் சாயல் தென்படுகிறது.

> 'உயர்திணைப் பெயரோடு அஃறினை சென்று விரவிற்று என்றது என்னை'.

என்ற கேள்வியைக் கேட்டுக் கூறிய சமாதானம் விரவுப் பெயர் ஒரு சொல் இரண்டு பொருட்கும் உரியது பெயரல்ல, ஒரு சொல் இரண்டு திணைக்கண்ணும் சென்ற பெயர் என்பது போல விளக்குகிறார்.

> 'சாத்தன், சாந்தி, முடவன், முடத்தி என்னும் விரவுப் பெயர்க்கண் உயர்திணை இரு பாலும் உணர்த்தும் ஈறுகள் நின்றே அஃறினை ஆண்பாலையும் பெண்பாலை

யும் உணர்த்துதலின் அஃறிணை உயர்திணையோடு சென்று விரவிற்று என்று அவற்றின் உண்மைத் தன்மைத் தோற்றம் கூறுவான் ஈண்டுக் கூறினார்'.

என்பது நச்சினார்க்கினியர் வாசகம்.

எனவே நாம் ஒரு சொல் பல பொருளுக்கும் உரியதாய் வருவதைப் பல பொருள் ஒரு சொல் என்று அழைப்பதுபோல ஒரு நிமித்தத்தால் இரண்டு பொருட்கண்ணும் செல்வதைத் தனிப்பெயர் இட்டு அழைக்கவேண்டும். அதை நாம் பல்பொருள் ஒரு சொல் என்று குறிப்போம். இயற்பெயர் முதலிய விரவுப் பெயர் எப்படி ஒரு நிமித்தத்தால் பலபொருளை விளக்குகிறது என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

'பழந்தமிழர் ஆவையும் எருதையும் அவற்றின் பயன்பாடும் உழைப்பும் பற்றி அருமையாய்ப் பேணி அவற்றுக்குச் சாத்தன், சாத்தி என்னும் மக்கள் பெயரையே இட்டு அழைத்து வந்திருக்கின்றனர். விரவுத்திணைப் பெயர்களில் பெரும்பாலன மாடுகளுக்கு மனிதப் பெயர் வைத்தமையால் ஏற்பட்டவையே'

என்ற வேலுப்பிள்ளையின் வாசகம் (1966 : 130) உயர் திணைச்சொல் அஃறிணையில் விரவி வருவதற்கான சமூகக் காரணத்தைப் புலப்படுத்துகிறது. ஆனால் இயற்பெயர்களில் ஆண்மை இயற்பெயர், பெண்மை இயற்பெயர் என்ற இரண்டு மட்டுமே விரவுப்பெயராவதற்கான காரணம் இங்குச் சுட்டப் பட்டிருக்கிறது. சிவதம்பி (1982 : 83) இன்னும் கொஞ்சம் பொதுமைப்படுத்தி

'இயற்கையோடு இயைந்த வாழ்வு எனப் பழந் தமிழ் இலக்கியம் பற்றி எடுத்துக்கூறப்படும் பண்பின் ஓர் அம்சம் இது. உழைப்பு அடிப்படையில் தம்முடன் இயைந்து தமக்கு உதவியாக நின்ற மாடு, எருமைகளை மனித உறவுடன் நோக்கும் தன்மை இதிலே தென்படுவதை நோக்கவேண்டும்.'

என்று கூறும்போது முறைப்பெயரும் விரவுப்பெயராக அமைவதற்குரிய சமூகக் காரணம் விளக்கப்பட்டுவிடுகிறது.

அப்படியே ஒருமை இயற்பெயராகவும் பன்மை இயற்பெயராகவும் இருக்கும் அஃறிணைப் பெயர்கள் உயர்திணை இயற்பெயராய் வழங்கும் வழக்கம் இயற்கையோடு இயைந்த வாழ்வின் இன்னொரு பக்கத்தையும் புலப்படுத்திவிடுகிறது என்று கொள்ளலாம். அதாவது உயர்திணைப் பெயர்கள், அஃறிணைக்கு ஆகி வந்தது போல அஃறிணைப் பெயர்களும் உயர்திணை இயற்பெயராய் ஆகி விரவி வருகிறது என்பதே.

சேனாவரையர் விரவுப்பெயர் பொதுவாக பலபொருள் ஒரு சொல் அல்ல என்றது சிறப்பாக இயற்பெயர் ஆகிய நான்கு வகைக்கே பொருந்தும். அவரே நீ, நீயிர், போன்றவற்றை வேறுவிதமாகக் கொண்டிருக்கிறார் என்பது பின்னால் விளக்கப் படும்.

இனிச் சேனாவரையர் விரவுப்பெயர் பலபொருள் ஒரு சொல் அல்ல;பல் பொருள்சொல் என்று அழைத்ததன் சிறப்பை அறிந்துகொள்ளச் சொற்பொருளியல் வரலாறும், சொற்பொருளியலார் தரும் விளக்கமும் காணவேண்டும்.

உல்மன் என்ற சொற்பொருளியல் அறிஞரின் கூற்று இங்கே குறிப்பிடத்தக்கது (1962 : 159)[2]

> 'ஒரு வடிவம் பல பொருளைக் குறித்து வழங்கும்போது அவைகளை இரண்டு விதமாகப் பாகுபடுத்தலாம். ஒரே சொல் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேறு பொருளை உடையதாயிருக்கலாம். இது பிரெய்ல் காலத்திலிருந்து (அதாவது 1900-ஆம் ஆண்டிலிருந்து) பாலிசெமி (Poiysemy) என்று அழைக்கப்படுகிறது. ... இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் ஒலியில் (அதாவது வடிவத்தில்) ஒத்திருக்கலாம். அதுவே ஹோமொனெமி (Homonymy) எனப்படும்... ... பாலிசெமிக்கும் ஹோமொனெமிக்கும் இடையே உள்ள வரம்புக்கோடு மெல்லியதாய் இருந்தாலும் அந்த இரண்டும் வெவ்வேறு வகையாகக் கருதத்தக்க அளவுக்கு வேறுபட்டவை'

என்பது அவருடைய கருத்து. இங்கு ஹோமொனெமி என்பது பல பொருள் ஒரு சொல். இதற்குச் சேனாவரையர் கொடுத்த விளக்கமும் ('வேறு பொருள் உணர்த்தலின் வேறு சொல்லாதலே துணிவாயினும் பல பொருள் ஒரு சொல் என்புழி எழுத்து ஒற்றுமை பற்றி ஒரு சொல் என்றார்') மிகவும் பொருந்துகிறது. பாலிசெமி என்பது பல்பொருள் சொல்தான், உல்மன் ஒரு சொல் இரண்டுக்கு மேற்பட்ட பொருளை உடையது பாலிசெமி என்று முதலில் கூறிப் பிட்டு பின்னர் அது ஐந்து காரணங்களால் [ (1) மாற்றி உரைத்தல் (shifts in application) (2) ஒரு குறிப்பிட்ட சூழலில் ஒரு பொதுச் சொல் சிறப்புப் பொருளைப் பெறுதல் (specialisation in a social Milieu) (3) அலங்கார மொழி (figurative language) இதில் உருவகம், ஆகுபெயர் முதலியன அடங்கும். (4) பலபொருள் ஒரு சொல் புதுவிளக்கம் பெறுதல் (Homonymy reinterpreted) (5) பிற மொழிச் செல்வாக்கு (foreign influence) ] உண்டாகும் என்று விரிவாக (1962 : 109—167) விளக்கியுள்ளார். சேனாவரையர் 'ஒரு நிமித்தத்தால் இரண்டு பொருள் உணர்த்துவது என்று பெயரியலில் பொதுவாகக் குறிப்பிட்டாலும் கிளவியாக்கத்தில் ஆகுபெயர் ஒரு காரணமாகக் கூறியிருப்பது பாராட்டத்தக்கது. எனவே சேனாவரையர் விரவுப்பெயருக்கு இலக்கண அடிப்படை கூறுமுகமாகக் கூறிய விளக்கம் (பலபொருள் ஒருசொல் வேறு பல் பொருள் ஒரு சொல்வேறு என்பது) சொற்பொருளியலில் குறிப்பிடத்தக்க புதிய கருத்தாக அமைந்திருப்பது அறிந்து மகிழலாம்.

### 4,2.2. தான் / தாம்

இரண்டும் 'உயர்திணைக்கும் அஃறிணைக்கும் உரித்து' என்று மட்டுமே கூறியுள்ளார். அப்படியானால் பலபொருள் ஒரு சொல் ஆகக் கருதவேண்டுமா என்ற சந்தேகம் வருகிறது. எல்லா உரையாசிரியர்களும் இந்த முறையிலேயே உரை எழுதியுள்ளார்கள். ஆயினும் இந்தச் சொற்களைப் பல பொருள் ஒரு சொல் என்று கூற முடியாது. இவை திணை-பால் பாகுபாட்டுக்குள் அடங்கி ஒன்றுக்கு மேற்பட்டவற்றிற்குப் பொதுவாய் வருவது. யார் என்ற சொல் உயர்திணை மூன்று பாலுக்கும் பொதுவாக வருவது போல எண் அடிப்படையில் இரண்டு திணையிலும் ஒருமைக்கும்

பன்மைக்கும் வருவன இவை. இரண்டு திணையிலும் வருவதால் விரவுப்பெயராகக் கருதப்பட்டிருக்கிறது. இவைகளைப் பலபொருள் ஒரு சொல்லாகக் கொள்ள முடியாது. ஏனெனில் இவை இரண்டு திணையிலும் வரும்போது பொருள் மாறுபடுவதில்லை. அப்படியே பல்பொருள் ஒரு சொல்லாகவும் கருத முடியாது. ஏனெனில் எல்லா இடத்திலும் படர்க்கை ஒருமை பதிலீட்டுப்பெயர் என்றும், படர்க்கைப் பன்மைப் பதிலீட்டுப் பெயர் என்றும் பொதுப் பொருளே உடையன.

4.2.3. எல்லாம்

இளம்பூரணர் முதலானோர் கருத்துப்படி இது எல்லாப் பன்மைக்கும் பொதுவாக வந்து எங்கும் முழுமைப் பதிலீட்டுப் பெயராகப் பயன்படுவதால் தான் / தாம் என்பது போலப் பொதுவானது. வேறு வேறு பன்மைக்கு ஏற்ப வேறு வேறு வடிவம் இல்லாததால் ஒரு வகையில் சமனாக்கப் பட்ட சொல் (neutralisation) என்று கொள்ளலாம். ஒலியனியலில் அடிநிலை ஒலியன் (archisegment இவையும் உருபனியலில் அடிநிலை உருபனாகவும் கொள்ளலாம் (Paramasivam 1980 : 91 பார்க்கவும்.)

தெய்வச்சிலையார் பலர்பாலுக்கு மட்டும் வராது என்று கூறினாலும் இதுவும் அடிப்படையில் பொதுச் சொல்லாகவே கொள்ளப்பட வேண்டும். வேண்டுமானால் கொஞ்சம் பொதுமை குறைந்ததாகக் கருதலாம்.

மேலே நாம் விளக்கியபடி தன்மைப் பன்மைக்கும் பலவின் பாலுக்கும் மட்டும் வருவதாகக் கொள்ளும்போது வேறு பல முழுமை பதிலீட்டுப் பெயர்கள் (எல்லாரும், எல்லீரும்) இருப்பதால் பகுத்துப் பார்க்கும் எண்ணம் ஏற்படுகிறது. அந்த முயற்சியில் வேறு பலரும் இறங்கியுள்ளார்கள். சேனாவரையர்தான் முதன் முதலில் ஓரளவு பகுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார். அவர் எல்லாரும். எல்லீரும் என்புழிப் படர்க்கைப் பன்மை உணர்த்தும் 'ஆர்' உம் முன்னிலைப் பன்மை உணர்த்தும்' ஈர்' உம் 'உம்'மை அடுத்து வருவதாக (பெ. 10. உரை) விளக்கியுள்ளார். அடுத்து கால்டுவெல் (1875 : 408)

எல்லாம் என்பதில் இறுதியிலுள்ள 'ம்' என்பது உம் என்பதன் சுருக்கமாக உள்ளது என்றும் எல்லாரும் என்பதில் உம் என்பதை முற்றும்மை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். அப்படியே எலாம் என்பது தமிழ் இலக்கியத்தில் தன்மைப் பன்மையாகக் கூறப்பட்டிருக் கிறது என்று சுட்டி அங்கு 'ஆம்' என்பதே 'தன்மைப் பன்மை' என்று பொருள்படும் என்று குறிப்பிட்டுள்ளார். கேரளப் பல்கலைக் கழகத்தார் வினைமுற்றில் இடம் (தன்மை, முன்னிலை, படர்க்கை', எண்/பால் என்ற இரண்டு உருபன்கள் இருப்பதாகக் கருதுவதை யொட்டி (உ-ம் சுப்பிரமணியன் சா, வே. 1965: 46-49) இஸ்ரேலும் (1973 : 41) 'எல்லாம்' என்பதில் எல்-என்பதை முழுமைப் பதிலீட்டுப் பெயர்ப் பகுதியாகவும் /அ/ வை தன்மை அல்லது படர்க்கை விகுதியாகவும் /ம்/ என்பதைப் பன்மை விகுதி யாகவும், மற்றொரு இடத்தில் (ப.43) எல்லீரும் என்பதில் /ஈ/ யை முன்னிலை விகுதியாகவும் /ர்/ பன்மை விகுதியாகவும் /உம்/ மை முற்றும்மையாகவும் விளக்கியுள்ளார். எனவே எல்லீரும், எல்லாரும், எல்லாம் ஆகிய பதிலீட்டுச் சொற்கள் பகுக்கக் கூடியன என்பது தெளிவாகிறது, தமிழ் இலக்கண மரபுப் படி இடத்தையும் பாலையும் சேர்த்து ஒரு உருபனாகக் கொண்டால் எல்லாரும், எல்லீரும், எல்லாம் ஆகிய மூன்று சொற்களுக்கும் 'எல்' என்பது முழுமைப் பதிலீட்டுப் பெயர்ப் பகுதியாகும். ஆர் என்பதை பலர்பால் விகுதியாகவும், ஈர் என்பதை முன்னிலைப்பன்மை விகுதியாகவும் ஆம் என்பதைத் தன்மைப்பன்மை/பலவின்பால் விகுதியாகவும் உம் என்பதை முற்றும்மையாகவும் கொள்ளலாம். அப்படியானால் இங்கு இரண்டு சிக்கல்கள் எழுகின்றன. 1) பலர்பாலிலும் முன்னிலைப் பன்மையிலும் மூன்று உருபன்கள் இருக்கத் தன்மைப்பன்மைக்கும் பலவின்பாலுக்கும் பொதுவாய் இருக்கும் சொல்லில் மட்டும் (அதாவது 'எல்லாம்' என்பதில்) இரண்டு உருபன்கள் இருப்பா னேன்? 2) ஆம் என்ற விகுதியைத் தன்மைப்பன்மை விகுதி என்றும் பலவின்பால் விகுதி என்றும் குறிப்பிட வேறு ஆதாரம் ஏதாவது உண்டா? ஏனெனில் ஆர், ஈர் என்ற விகுதிகள் அதே பொருளில் வினைமுற்றிலும் வருகின்றன.

முதல் கேள்விக்குப் பதிலாகப் பொதுவாக மொழியின் அமைப்பு எங்கும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை என்று கூறலாம். உதாரணமாக செய்யும், செய்த எனும் இரண்டு பெயரெச்சமும் ஒரேவித அமைப்பு உடையதில்லை. செய்த என்பது வினைப்பகுதி + கால விகுதி + பெயரெச்ச விகுதி என்று மூன்று உருபன்களைச் கொண்டிருக்கச் செய்யும் என்பது வினைப்பகுதி + விகுதி (இது கால விகுதியாக மொழியியலாள ரால் கருதப்படுகிறது) என்ற இரண்டு உருபன்களையே புறநிலை யில் கொண்டிருக்கிறது. அமைப்பு ஒழுங்குக்காக பெயரெச்ச விகுதியாக சூனியமாற்றுருபு இருப்பதாகக் கருதப்படுகிறது. (உ-ம். சுப்பிரமணியன், சா. வே. 1965-44) அப்படியானால் எல்லாம் என்பதிலும் முற்றும்மை சூனிய மாற்றுருபு உடைய தாகவோ (எல் + ஆம் + $\phi$) புணர்ந்து கெட்டதாகவோ கருத லாம். எல்லாம் என்பது வேற்றுமை உருபு ஏற்கும்போது வேற்றுமை உருபிற்குப் பிறகு 'உம்' தோன்றுகிறது. உதாரண மாக இரண்டாம் வேற்றுமை ஏற்ற வடிவம்.

தன்மைபன்மை : எல்லாநம்மையும் (எல்+ஆம் + நம் + ஐ+உம்

பலவின் பால் : எல்லாவற்றையும் (எல்+ஆம் + வற்று + ஐ+உம்)

இங்கு 'நம்' மும் 'வற்று' ம் சாரியைகள். இந்த வடிவங்களோடு பலர்பால் முழுமை பதிலீட்டுப் பெயரான எல்லாரும் என்பதன் வேற்றுமை ஏற்ற வடிவமான எல்லார்க்கும்' (எல்+ஆர்-க்க-உம்) என்பதை ஒப்பிட்டு நோக்கினால் இறுதியில் வேற்றுமை உருபுக்குப் பிறகு 'உம்' வருவது தெளிவாகும். எனவே முழுமை பதிலீட்டுப் பெயராக 'எல்லாம்' என்று வரும்போது 'உம்' புணர்ந்து கெட்டது; அதனால்தான் வேற்றுமை உருபு ஏற்குப்போது வெளிப்படுகிறது என்று கூறிவிடலாம்.

திருவாசகத்தில் எல்லோமும் (திருவெம்பாவை 28.3) என்று வந்திருப்பதும் பரிபாடலில் (10. 118) (வழக்கம்) எல்லாமும் என்ற

வடிவம் வழங்குவதும் அறியத்தக்கன. எனவே எல்லாம் என்ற சொல்லில் புறநிலையில் இரண்டு உருபன்கள் இருப்பதால் பகுக்காமல் இருக்கவேண்டியதில்லை.

இரண்டாவது கேள்வியான ஆம் என்பதற்குத் தன்மைப் பன்மைப் பொருளும் பலவின்பால் பொருளும் இருந்ததற்கு ஆதாரத்தைப் பார்ப்போம். தொல்காப்பியரே ஆம் என்பதைத் தன்மை விகுதியாக வருணித்துள்ளார் 'அம் ஆம் ... பன்மை உரைக்குந் தன்மைச் சொல்லே' (பெ. சூ. 5). மேலும் தன்மைப் பன்மை முழுமைப் பதிலீட்டுப் பெயர் இருந்ததற்கு இன்னொரு சான்று கிடைக்கிறது. சங்ககாலத்தில் ஆம் என்பது. தன்மைப் பன்மை விகுதியாக இருந்ததால் தன்மைப் பன்மை முழுமைப் பதிலீட்டுப் பெயரும் 'எல்லாம்' என்று இருந்தது. சங்க மருவிய காலத்திலும் (அறிதோம் சிலம்பு 7-5-2) இடைக் காலத்திலும் (நின்றோம் அப்பர் தேவாரம் 965-4) ஓம் என்பது தன்மைப் பன்மை விகுதியாக வழங்கியதற்கு ஒப்ப முழுமைப் பதிலீட்டுப்பெயரும் 'எல்லோம்' (திருவாசகம், திருவெம்பாவை 3) என வழங்கியுள்ளது. எனவே எல்லாம் என்பதைத் தன்மை முழுமைப் பதிலீட்டுப் பெயர் என்பதும் அதில் ஆம் என்பது தன்மைப் பன்மை விகுதி என்பதும் உறுதிப்படுகின்றன.

ஆம் என்பதைப் பலவின்பால் விகுதியாகக் கருதுவதற்குரிய சான்று இலக்கண நூல்களில் காணப்படவில்லை. எனவே தொன்மை வழக்காக அருகி சில சொற்களிலாவது வழங்கியிருக்கிறதா என்று பார்க்கவேண்டும்.

தொல்காப்பியர் பல, சில என்ற பலவின்பால் பெயர்களின் மாற்றுவடிவமாகச் செய்யுளில் இறுதி அகரம் நீண்டு வரும் என்று ஒரு சூத்திரத்தில் (எழுத்து. 213) குறிப்பிடுகிறார்.

பலவற்று இறுதி நீடுமொழி தொடர்மொழியான
செய்யுள் கண்ணிய தொடர்மொழியான

என்ற அந்தச் சூத்திரத்துக்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் பலா அம், சிலா அம் என்ற உதாரணங்களைத் தந்துள்ளார்கள். இங்குள்ள ஆ (அ)ம் என்ற விகுதியைப் பலவின்பால் விகுதியாகக்

கருதலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. இது பழைய வழக்கின் எச்ச சொச்சமாகும். மேலும் தென்திராவிட மொழிகளில் ஒன்றான தோடா மொழியில் ஆம் என்பது பன்மைவிகுதியாக பலர்பாலுக்கும் பலவின்பாலுக்கும் வழங்குகிறது. (சண்முகம், 1971: 150)

மொஹ் + ஆம் → மொஹாம் 'பையன்கள்'

கூஹ் + ஆம் → கூஹாம் 'பெண்கள்'

ஈர் + ஆம் → ஈராம் 'எருமைகள்'

பூஃவ் + ஆம் → பூஃவாம் 'பூக்கள்'

முதலியன. மேலும் தோடா மொழியில் படர்க்கையில் ஒருமை பன்மை வேறுபாடு ('அஃத்' என்பது அவன், அவள், அது என்ற மூன்றையும் 'அஃதாம்' என்பது அவர், அவை என்ற இரண்டையும் குறிக்கும். (சண்முகம், 1971:2) மட்டுமே உள்ளது என அறிந்து கொள்ள வேண்டும். எனவே ஆம் என்ற பன்மை விகுதி தமிழில் பலவின்பால் விகுதியாக மட்டும் அருகிய வழக்காகப் பயன் பட்டிருக்கிறது என்று கொள்ளலாம்.

அப்படியானால் 'ஆம்' விகுதி தன்மைப் பன்மையையும் பலவின்பாலையும் உணர்த்துகிறது என்று ஆகிறது. எனவே எல்லாம் விரவுப்பெயராக வருவதற்குக் காரணம் ஒரு விகுதி இரண்டுவிதப் பன்மையை (தன்மைப்பன்மை, பலவின்பால்) உணர்த்துவதுதான். அதாவது விகுதி நிலையில் இது பல பொருள் ஒரு சொல்லாக அமைந்ததால் விரவுப் பெயராகக் கருதப்பட்டிருக்கிறது.

### 4-2-4. நீ,நீயிர்

இளம்பூரணர் 'நீ என் ஒருமைக்கு உரித்தே (பெ.35.1) என்பதற்கு ஒருமையாவது: ஒருவன், ஒருத்தி. ஒன்று என்பவற்றிற்குப் பொதுமையாகிய ஒருமை என்றும், 'நீயிர் பன்மைக்கு உரித்தே' என்பதைப் பன்மையாவது; பல்லோர்க்கும் பலவற்றிற்கும் பொதுவாகிய பன்மை' என்றும் விளக்கியுள்ளார்

எனவே இவை 'பொதுச்சொல்' என்று இளம்பூரணரும் அவரைத்தழுவிப் பிற உரையாசிரியர்களும் கருதுகிறார்கள் என்று கொள்ளலாம்.

மேலே தான், தாம் என்பவையும் பொதுச்சொல் என்று விளக்கப் பட்டது. ஆனால் வினைமுற்று ஏற்று வந்தால் அதன் சரியான திணை, பாலை உணர்ந்து கொள்ளமுடியும். ஆனால் முன்னிலைச் சொற்கள் அப்படிப்பட்டதல்ல.முன்னரே குறிப்பிட்டபடி திணை-பால் பாகுபாட்டுக்குள் அடங்காத சொற்களை அவற்றுள் அடக்கியதைப் பற்றி ஒன்றும் கூறாமல் உரையாசிரியர்கள் தொல்காப்பியத்தை நியாயப்படுத்த 'பொதுச்சொல்' என்று மட்டும் கூறிவிட்டார்கள். இதைத் திணை-பால் பாகுபாட்டுக்குப் புறம்பான பொதுமை என்று விதந்து குறிப்பிடவேண்டும்.

4-2-5. விரவுவினைகள்

தொல்காப்பியர் விரவுவினைகளின் பெயர்களைத் தொகுத்துக் கூறும்போது

'பிரிவுவேறுபடூஉம் செய்திய' (வி.23.5)

என்று கூறுவதால் இளம்பூரணர்

'உயர்திணைக்கண் வரின் உயர்திணைக்கே உரிய என்றும் அஃறிணைக்கண் வரின் அஃறிணைக்கே உரிய என்றும் பிரித்துச் செய்யப்படும்'

என்று பொதுவாகவும் முன்னிலை வினைகள் 'இரண்டு திணைக்கும் ஒப்ப உரிய' என்றும் ஏனைய விரவுவினைகள் 'மூன்றிடத்துக்கும் இருதிணை ஐம்பாற்கும் உரிய' என்றும் பொழிப்புரை எழுதியுள்ளதால் விரவுவினைச் சொற்கள் 'பல பொருள் ஒரு சொல் என்று கருதுகிறாரோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

சேனவேரையர் 'திரிபு வேறுபடூஉம் செய்திய' என்ற பாடம் கொண்டாலும் பொதுமையிற் ஒருகாற் பிரிந்து ஒருகால் உயர்திணை உயர்த்தியும் ஒருகால் அஃறிணை உணர்த்தியும்

வேறுபடும் தொழிலை உடையவாய் இருதிணை சொல்லாதற்கு ஒத்த உரிமைய' என்று பொழிப்புரை எழுதியுள்ளார். இங்கு பொதுச் சொல் என்ற கருத்தும் பலபொருள் ஒரு சொல் என்ற கருத்தும் தொனிக்கின்றன ஆனால் விளக்க உரையில் வேறு வேறு உணர்த்தின் அல்லது ஒரு சொற் சொல்லுதற் கண்ணே இரு திணையும் உணர்த்தாமை பெறுதும்' என்று கூறும்போது பல பொருள் ஒரு சொல்லாகக் கருதுவதற்குத் தயங்குகிறாரோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

ஏனைய உரையாசிரியர்களின் கருத்து இளம்பூரணரின் கருத்துத் தழுவலாகவே உள்ளது. எப்படியாயினும் விரவு வினை யின் இலக்கண அடிப்படை பொதுச்சொல் என்பதா, பலபொருள் ஒருசொல் என்பதா என்பது உரையாசிரியர்களால் தெளிவுபடுத்தப் படவில்லை.

முன்னிலை வினை, முன்னிலைப் பெயரைப் போல திணை-பால் பாகுபாட்டுக்குப் புறம்பானதை அதில் அடக்க முயற்சித்த தால் பொதுச்சொல் என்று வேண்டுமானால் கருதலாம்.

பெயரெச்சம், வினையெச்சம் ஆகிய இரண்டும் கூட திணை-பால் விகுதி இல்லாதவை. எனவே அவைகளைத் திணை-பால் பாகுபாட்டுக்குள் அடக்கவேண்டியதில்லை. அப்படியானால் அவைகளைத் தனிப்பிரிவாக விவாதிக்க வேண்டும். வியங்கோள், செய்யும் என்னும் முற்று போன்றவையும் திணை-பால் விகுதி களைப் பெற்றிருக்கவில்லை. எனவே எல்லாவற்றையும் ஒரே இடத்தில் வருணித்ததன் மூலம் இலக்கணம் எளிமைப் பட்டு விட்டது. ஆயினும் விரவுவினையின் இலக்கண அடிப்படை வேறு பட்டது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

வியங்கோள், செய்யும், செய்ம்மன வாய்பாட்டு வினைமுற்று கள், வேறு, இல்லை ஆகிய விரவுவினைகள் தொல்காப்பியர் பொதுவாகக் கூறியபடி எல்லா இடத்துக்கும், திணை-பாலுக்கும் உரிய பெயர்களை எழுவாயாக ஏற்றுவரும். இவைகளே உண்மை

யான விரவுவினைகள். அதாவது பெயர்களில் தான், தாம் என்பதுபோல பொதுவாக வருபவை. இவைகளைத் திணை-பால் விகுதியில்லாத முற்றுச்சொற்கள் என்று கூட வருணிக்கலாம். அப்படி வருணித்தால் அவை எப்படிப்பட்ட பெயர்களை எழுவா யாக ஏற்கும் என்பது பற்றித் தனியே விளக்க வேண்டும். விரவு வினை என்று கூறி அவை எல்லா இடத்தும், திணை-பாலுக்கும் வரும் என்று சொன்னதன் மூலம் அவை ஏற்கும் எழுவாய் பற்றிப் பேசவேண்டிய அவசியம் இல்லாமல் போய் விட்டது. இது ஒரு சிறப்பே ஆகும்.

பெயரெச்சமும் வினையெச்சமும் முன்னிலை போல திணை-பால் பாகுபாட்டுக்குப் புறம்பானவை. ஆனால் அவை அடிப்படை யாக வினை வடிவம் என்பதால் அந்தத் தொழிலைச் செய்யும் கருத்தா இருப்பது அவசியம். எனவே அவைகளை வரவுவினை யில் சேர்த்ததன் மூலம் எல்லா திணை-பாலையும் கருத்தாவாக ஏற்கும் என்பது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே இங்கும் ஒரு குறை வேறொரு வகையில் நிறையாக ஆகிவிட்டது.

## 4. 3. தொல்காப்பியர்

திணை-பாகுபாட்டைப் பற்றிப் பெயரியலிலும் வினை யியலிலும் முதலில் வருணிக்கும்போது உயர்திணை, அஃறிணை விரவுத்திணை ('ஆயிருதிணைக்கும் ஓரன்ன உரிமைய') என்ற பாகுபாட்டை

'அம்மூவுருபின தோன்றலாறே'

என்று தான் பெயரியலிலும் (6. 5), வினையியலிலும் (4. 5) குறிப்பிடுகிறார். இங்கு நச்சினார்க்கினியர் 'உருபு' என்பதற்கு 'உருவு' என்று பாடம் கொண்டுள்ளார். இந்த பாடவேறுபாடு - அதுவும் பகர மெய் வகரமாக மாறியது-பிற்கால பேச்சு மொழியின் செல்வாக்கை-அதாவது இரண்டு உயிர்களுக்கு இடையே வரும் பகரமெய் வகரமாதலைக் காட்டுகிறதே தவிர வேறு எந்த சிறப்பையும் உடையதல்ல.எனினும்இந்தச்சொல்லே திணையை மூன்றாகப் பிரித்ததற்கு உரிய காரணத்தை-பிரிப்பின் அடிப் படையைப் புலப்படுத்துகிறது. ஆனால் உரையாசிரியர்கள்

'உருபு' என்பது சிறப்புடையதாகக் கருதாததால் அதற்கு ஏற்ற படி உரை எழுதவில்லை.

| | பெயரியல் | வினையியல் |
|---|---|---|
| இளம். | வாய்பாடு | கூற்று |
| சேனா.&நச்சர் | வேறுபாடு | கூற்று |
| கல்லாடர் | கூற்று | கூற்று |
| தெய்வ. | வடிவு | வேறுபாடு |

வாய்பாடு, வேறுபாடு, கூற்று என்ற மூன்று பொருளும் உணர்த்துகின்றன. பொதுவாக உருபு என்பதற்குச் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி 1) வடிவம் 2) நிறம் 3) வேற்றுமைமுதலியவற்றைக் காட்டும் இடைச்சொல், என்ற மூன்று பொருள்களையே தந்துள்ளது. எனவே 'வடிவு, (வடிவம்) என்பதே இங்கு பொருத்தமாக இருக்கும். தெய்வச்சிலையார் பெயரியலில் மட்டுமாவது இந்தப் பொருளைக் குறிப்பிட்டிருப்பதும் பாலசுப்பிரமணியனும் (1981) தன்னுடைய அகராதியில் வடிவு (form) என்றே மேலே குறிப்பிட்ட இரண்டு இடத்திலும் பொருள் எழுதியிருப்பதும் உருபு என்ற சொல்லுக்கு மேலே குறிப்பிட்ட இரண்டு சூத்திரத்திலும் 'வடிவு' என்று பொருள் கொள்வதற்கு ஆதாரமாக அமைகின்றன. அதாவது 'அம்மூவுருபின' என்பதற்கு உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை என்ற அந்த மூன்று வகையான வடிவங்கள் உடையன என்ற பொருள். இதனுடைய சிறப்பு என்ன?

சொல் என்பது வடிவமும் பொருளும் உடையது என்பதைப்

பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர்

(பெ. 2)

என்று தொல்காப்பியரே குறிப்பிடுகிறார். (முழு விளக்கத்துக்கு சண்முகம். 1978 பார்க்கவும்) பெரும்பான்மையான சொற்கள் தனித் தனி வடிவமும் பொருளும் உடையன. சில வடிவங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களும் (பல பொருள் ஒரு சொல்) சில வடிவங்கள் ஒரே பொருளையும் (ஒரு பொருட்

பன்மொழி) உடையன. இதையும் தொல்காப்பியர் உணர்ந்திருந் தார் என்பதை

ஒரு சொற் பல பொருட்கு உரிமை தோன்றினும்
பல சொல் ஒரு பொருட்கு உரிமை தோன்றினும்
(உரி. 1.5.6)

என்ற வரிகள் காட்டுகின்றன. எனவே இங்கு ஒரேவடிவு இரண்டு திணையில் வந்து இரண்டு பொருளை உடையதாகி பெயர்ச் சொற் களையும் வினைச் சொற்களையும் மூன்று விதமாகப் பிரிப்பதற்கு அடிப்படையாக அமைகிறது என்பதே ஆகும். இதைச் சொற் பொருளியலார் பெயருக்கும் (name) பொருளுக்கும் (sense) உள்ள உறவு பற்றியது (Referential definition of meaning) என்று குறிப் பிடுகிறார்கள் (உல்மன் 1962 : 62) என்பதும் சுட்டிக் காட்டத் தக்கது. ஆகவே விரவுத்திணை என்று கூறியதற்கு இலக்கண அடிப்படை வடிவுதான். அதாவது ஒரே வடிவு ஒன்றுக்கு மேற் பட்ட பொருளைக் குறித்துவருகிற தன்மையை ஒட்டியது என்பதே.

அடுத்து தொல்காப்பியர் சொற்களை மூன்று திணையாக ஏன் பிரித்துள்ளார் என்ற கேள்வி எழுகிறது ஒரே வடிவுடைய சொற்கள் இரண்டு திணைக்கும் வரும்போது ஒரே வடிவத்தை இரண்டு திணையிலும் சேர்ப்பதற்குப் பதிலாக அவைகளை ஒரு தனிப் பிரிவாக அமைத்து விட்டார். அதற்காக அவைகளிடையே உள்ள சில பொதுமைகளைக் கண்டு விரவுப் பெயர்களின் வகையும் தொகையுமாகப் பெயரியலில் ஒரு சூத்திரமும் வினையியலில் அதே போல மற்றொரு சூத்திரமும் செய்து விட்டார். இதனால் இலக்கண வருணனையில் எளிமை ஏற்பட்டுள்ளது. அதாவது இரண்டு திணை என்பது சொல்லியலையும் தொடரியலையும் மட்டுமே ஒட்டியது. மூன்று வகை என்பது அவைகளோடு எழுத்தியலையும் அடிப்படையாகக் கொண்டது. மேலும் இந்த திணை மூன்று என்றது இலக்கண வருணனையை எளிமையாக்க சொல்லிணக் கத்தில் எழுத்தை அடிப்படையாக் கொண்டு இலக்கண ஆசிரியன் அமைத்துக்கொண்டது என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இனி ஒரே வடிவம் இரண்டு திணைக்கும் பொதுவாக அமையும்போது அந்தப் பொருள்களுக்கிடையே உள்ள உறவு என்ன? என்னென்ன உறவுகள் இருக்கின்றன என்பதை

யும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதுபற்றி விரவுத்திணை சொற்களை ஒட்டிய தொல்காப்பிய சிந்தனையை முதலில் அறிந்து கொள்ள முயல்வோம்.

தொல்காப்பியர் விரவுத்திணையை விளக்கும்போதும் அவற்றைக் குறிப்பிடும் போதும் பயன்படுத்தியுள்ள தொடர்கள் கவனிக்கத்தக்கன. விரவுத்திணையை 'ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமைய' (பெ. 6.4, 18.1, வி. 4.3, 25.6) என்றே குறிப்பிட்டது முன்னரே எடுத்துக்காட்டியது தான். 'இரண்டு திணைக்கும் ஒத்த உரிமைய' என்று கூறியது விரவுத்திணை சொற்கள் தெளிவாகப் பல பொருள் ஒரு சொற்கள் என்பதே ஆகும். இது சேனாவரையர் கூறிய 'பொருள் தோறும் நிமித்த வேறுபாடு உடைய பல பொருள்' ஒரு சொல் என்பதிலும் சந்தேகம் இல்லை.

விரவுச் சொற்களை வருணிக்கும்போது பயன்படுத்திய பிற தொடர்களும் இதே கருத்தை வலியுறுத்துவதாகவே அமைந்துள்ளன.

(ஒன்றற்கும் ஒருத்திக்கும்) ஒன்றிய நிலையே' (பெ. 26-1)
(இப்பாற்கும்) 'ஓரன்னவ்வே' (பெ. 28-1)
'ஒப்பத்தோன்றும் (ஒருவற்கும் ஒன்றற்கும்)' (வி. 24-3)
'சொல் ஓர் அனைய' (வி. 25-3;)
' ஐம்பாற்கும்) உரிய' (வி. 26-2)

என்ற தொடர்களும் அதே பொருளை உணர்த்தி அவையெல்லாம் பல பொருள் ஒரு சொல் என்ற கருத்துக்கே ஆதரவாக உள்ளன. அப்படியானால் தொல்காப்பியர் ஒரே வடிவம் இரண்டு வேறு பொருள்களை உணர்த்தும் பல பொருள் ஒரு சொல்லாக விரவுத்திணைச் சொற்களைக் கொண்டார் என்றே நினைக்கவேண்டியிருக்கிறது. ஆனால் அது முழு உண்மையில்லை என்று மேலே பார்த்தோம். இந்த சந்தேகம் தொல்காப்பியர் விரவுத்திணைச் சொற்களைச் சிறப்பாக விரவுப் பெயர்

களைச் சிறு உட்பிரிவுகளாகப் பிரித்துப் பேசியிருப்பதாலும் வலுப்பெறுகிறது.

விரவுப்பெயர்களை இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற் பெயர், முறைப்பெயர் என்று நான்கு பெரும் பிரிவாகப் பிரித்த பிறகு அவை உயர்திணை ஆண்பாலுக்கும், பெண்பாலுக்கும், ஒன்றன்பாலுக்கும் உரிய என்று விளக்கியிருக்கலாம். அப்படிச் செய்யாமல் அந்தப் பெயர்களில் இயற்பெயர், சினைப்பெயர், சினைப்பெயர் ஆகியவற்றை ஆண்மைப்பெயர், பெண்மைப் பெயர், ஒருமைப் பெயர், பன்மைப் பெயர் என்று நான்காகவும் முறைப்பெயரை ஆண்மைப்பெயர், பெண்மைப் பெயர் என இரண்டாகவும் பிரித்துப் பேசியதன் அர்த்தம் என்ன?

சேனாவரையர் ஆண்மைப் பெயர், பெண்மைப் பெயர் என்ற இரண்டு பெயர்களும் ஒருமை உணர்த்திய போதும் ஒருமைப் பெயர் என்ற மற்றொரு பிரிவு செய்வானேன் என்ற கேள்வியைக் கேட்டுச் சமாதானம் சொல்லியுள்ளார்.

> 'பெண்மைப் பெயரும் ஆண்மைப் பெயரும் ஒருமை உணர்த்துமாயினும் இவை பெண்மை, ஆண்மை என்றும் வேறுபாடு உணர்த்தாது ஒருமை உணர்த்துதலான் இவற்றை ஒருமைப் பெயர் என்றார்.

என்ற சேனாவரையருடைய வாசகம் (பெ.29 விளக்கவுரை). விரவுப் பெயர்களில் ஆண்பாலுக்கே உரிய பெயர்கள், பெண்பாலுக்கே உரிய பெயர்கள், ஒன்றன் பாலுக்கே உரிய பெயர்கள் இருக்கின்றன. அவைதான் திணைவிரவி வருகின்றன என்பதையே சுட்டுகிறது. இந்தக் கருத்தையே நச்சினார்க்கினியரின் எழுத்ததிகார விளக்கமும் (ஆண்மைப் பெயரையும், பெண்மைப் பெயரையும் பொறுத்தவரையில் 'உயர்திணை இருபாலும் உணர்த்தும் ஈறுகள் நின்றே அஃறிணை ஆண்பாலையும் பெண்பாலையும் உணர்த்துதலின், என்பது) விளக்குகிறது அப்படியானால் தொல்காப்பியர் ஆண்மை சுட்டிய பெயர், பெண்மை சுட்டிய பெயர் என்று பாகுபடுத்தியதன் நுட்பமே ஒரு பாலுக்குரிய

பெயர்கள் சேனாவரையார் சொன்னது போல 'ஒரு நிமித்தத் தான் இன்னொருபாலிலும் விரவி வருவது என்பதே. அதாவது இயற்பெயர், முறைப்பெயர் முதலியன பல பொருள் ஒரு சொல் அல்ல; பல்பொருள் சொல் (pol, semy) என்பதுதான். ஆனால் துரதிருஷ்டவசமாகத் தொல்காப்பியர் தான் செய்த பாகுபாட்டின் அடிப்படை நுட்பப்படி அந்தச் சொற்களின் திணை விரவி வரும் முறையை வருணிக்கவில்லை. அதாவது பெண்மைச் சுட்டிய பெயர்கள் அடிப்படையாக உயர்திணைக்கு உரியது என்றால் திணை வரவி வரும் முறையை வருணிக்கும் போது அந்தப் பெயர்கள் ஒன்றன் பாலுக்கும் வரும் என்று மட்டுமே சொல்லிச் சென்றால் போதுமானது; பெண்மை சுட்டியபெயர் 'ஒருத்திக்கும் ஒன்றற்கும் ஒன்றிய நிலையே' என்று விளக்கியிருக்க வேண்டியதில்லை. ஏனென்றால் பெண்மை சுட்டிய பெயரே ஒருத்திக்கு உரியதால் அதையும் சேர்த்துச் சொன்னது அனாவசியமாகி விடுகிறது. எனவே, 'ஒன்றற்கும் இயலும் வழக்கத்தான' என்பது போலவே இறுதி வரி அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படியே ஆண்மை சுட்டிய பெயர்களை வருணிக்கும் போதும் 'ஒன்றற்கும் ஒருவற்கும் உரிய நிலையே' என்று கூறிய தற்குப் பதிலாக 'உரிமையும் உடைத்தே ஒருவற்கென்ப' என்பது போன்ற வாசகம் அமைந்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் ஆண்மைப்பெயர், பெண்மைப்பெயர் என்ற பாகுபாடு சிறப்புடையதாக அமையும். அப்படியானால் ஏன் தொல்காப்பியர் அந்த முறையில் வருணிக்கவில்லை என்ற கேள்வி எழுகிறது. ஒரே வடிவம் இரண்டு பொருள் உணர்த்துதலில் இரண்டு வகை இருக்கிறது என்பது இன்று நமக்குத் தெளிவாகப் புலனாகிறது. ஒன்று: பல பொருள் ஒரு சொல்லாய் இரண்டு வேறு பொருளைத் தொடர்பும் காரணமும் இல்லாமல் உணர்த்துவது. இன்னொன்று: ஆகுபெயர் போல தனக்குரிய பொருளையும் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளையும் உணர்த்துவது. இரண்டாவது வகையில்தான் இயற்பெயர் முதலியன அடங்கும். ஏனெனில் ஆண்மைப்பெயர், பெண்மைப்பெயர் முதலியன அடிப்படையாய் ஆண்பால், பெண்பால் இயற்பெயர்களாய் இருந்தே அஃறிணைப் பொருளின் இயற்பெயர்களையும் உணர்த்துகின்றன. இந்த வேறு

ாடுகளை முழுவதும் மனதில் கொள்ளாததால் – வேறுவிதமாகச் சொன்னால் – பலபொருள் ஒருசொல், பல்பொருள் சொல் என்ற இரண்டு வகையாகப் பொருள் உணர்த்தலாம் என்பதைத் தெளிவாக உணராததால் பெயர்ச்சொற்கள் திணை விரவி வரும் முறையை வருணிக்கும் போது நாம் எதிர்பார்ப்பது போல (அஃறிணைக்கும் வரும் என்று' பல்பொருல் ஒருசொல் என்பதாக தொல்காப்பியர் விளக்கவில்லை; பலபொருள் ஒருசொல்போல வருணித்துவிட்டார்.

இங்கு இரண்டு பொது உண்மைகளை வற்புறுத்துவது தொல்காப்பியம் பற்றியும். தொல்காப்பியர் அல்லது நூலாசிரியர் கருத்து பற்றியும் நாம் மேலே விளக்கிய முறையில் ஏற்படக் கூடிய ஐயத்தைப் போக்கும். 1) தொல்காப்பிய சூத்திரம் இப்படி இருந்தால் கோட்பாட்டு நிலையில் முரண் இல்லாமல் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளதே தவிர சூத்திரத்தைத் திருத்த வேண்டும் என்று கூறப்படவில்லை. எனினும் இந்த முறை விஞ்ஞான ஆராய்ச்சியில் கடைபிடிக்கும் முறைதான். முன் நூலில் காணப்படும் நுட்பத்தை முழுவதும் ஏற்றுக்கொண்டு அதற்கேற்பப் பழைய கருத்தைத் திருத்தி அமைத்துக்கொள்வது. மொழியியல் ஆய்விலும் 'இந்த முறை காணப்படுகிறது. மொழியியல் வரலாற்றை அறிவுவளர்ச்சி வரலாறாகப் பார்க்கும்போது தான் இது புலப்படுகிறது. 2) தொல்காப்பியர் போன்ற சிறந்த நூலாசிரியர்களின் நூலில் கருத்துத் தெளிவின்மையோ அல்லது முரணோ எப்படி ஏற்படும் என்ற ஐயம் எழலாம். எப்பொழுதுமே எல்லாக் கருத்துகளும் ஒரே காலத்தில் புலப்படுவதில்லை; ஒரே ஆசிரியரால் புலப்படுத்தப்படுவதும் இல்லை. சிறந்த ஆசிரியர்கள் சில கருத்துகளை மிகவும் தெளிவாகச் சொல்லிச் சென்றிருக்கும் சமயத்தில் வேறு சிலவற்றைத் தெளிவாகப் புலப்படுத்தாது சென்று விடுவதும் உண்டு; அப்படிப்பட்ட கருத்துகளையே பிற்கால அறிஞர்கள் தெளிவுபடுத்தித் தனிப்பெயர் கொடுத்து எல்லோருக்கும் தெரிகிற கருத்தாக மாற்றிவிடுவார்கள். உதாரணமாக மொழியியல் வரலாற்றில் பிளூம்பீல்டு விளக்கிய ஒலியனியல் கோட்பாட்டுக்கும் அவர் வருணனையில் அதாவது மொழியாய்வில் மேற்கொண்ட கோட்பாட்

டுக்கும் இடையே உள்ள முரண்பாட்டைச் சுட்டிக்காட்டி அவர் மொழி ஆராய்ச்சியில் மேற்கொண்ட கோட்பாட்டை ஒட்டியே பிற் காலத்தில் விதிமுறை ஒலியனியல் (Systematic phonology) என்ற புதியகோட்பாடு வளர்த்துள்ளார்கள்.

மேலைநாட்டு மொழியியல் வரலாற்றிலும் பல பொருள் ஒரு சொல், பல்பொருள் சொல் என்ற வேறுபாடு இருபதாம் நூற் றாண்டின் ஆரம்பத்திலேதான் தெளிவுபடுத்தப்பட்டதாக மேலே குறிப்பிட்டோம். தமிழைப் பொறுத்தவரையில் தொல்காப்பியரின் உள்ளத்தைச் சேனாவரையர் புரிந்து கொண்டு இரண்டையும் சரியாக வேறுபடுத்திக் காட்டியிருப்பதும் மேலே விளக்கப்பட்டது. ஆயினும் சேனாவரையர் தன்னுடைய கருத்துக்கு ஆதரவாகத் தொல்காப்பிய வருணனையிலிருந்து சான்று காட்டி விளக்காது தனியே தன் உள்ளத்தில் தோன்றிய கருத்துபோலக் கூறி தொல்காப்பிய வருணனையில் உள்ள குறையை எடுத்துக் காட்டாமல் போய்விட்டார். மேலும் எல்லா விரவுப் பெயர் களுக்கும் பொருந்துவது போல சேனாவரையர் கூறியதும் பொருந்தாது போய்விட்டது. எனினும் அவருக்குப் பின்வந்த உரையாசிரியர்கள் சேனாவரையருடைய கருத்தை ஏற்று குறையை நிறை செய்யாமல் முழுவதும் புறக்கணித்ததற்கு அந்தக் கருத்தின் சிறப்பை அவர்கள் உணராததே காரணம்.

சுருக்கமாக விரவுப்பெயர்களின் இலக்கண அடிப்படையாகக் கீழ்க்கண்டவற்றைச் சொல்லலாம். 1) விரவுத்திணை என்பது சொல்லியல் விளக்கத்தில் எழுத்தியல் அடிப்படை கொண்டது. அதுதான் ஒரே வடிவுடைய சொற்களை இரண்டு திணை யிலும் சேர்ப்பதற்குப் பதிலாகத் தனிப் பிரிவு ஏற்படுத்தியதன் மூலம் இலக்கண வருணனையை எளிமைப் படுத்துவதற்காக அமைக்கப்பட்டது. 2) இப்படி அமைக்கப்பட்ட விரவுத்திணைச் சொற்களில் அ) இயற்பெயரும் உறவுப்பெயரும் பல்பொருள் சொல் என்ற அடிப்படையில் அமைந்தது. சினைப்பெயர், சினை முதற்பெயர் ஆகியன எவைகளைக் குறிக்கின்றன என்பதே விவாதத்துக்கு உரியதாக இருப்பதால் அவை எப்படி விரவுத்

திணையாக ஆகிறது என்பதும் சந்தேகத்துக்கு உரியதாக உள்ளது.
ஆ) எல்லாம் என்பது விகுதிநிலையில் பல பொருள் ஒரு சொல்
இ) தான், தாம், ஒருவர், வியங்கோள், செய்யும், செய்ம்மன போன்ற வினைமுற்றுகள் திணை-பால் பாகுபாட்டுக்குள் அடங்கிய பொதுச் சொற்கள். இதை மேலே குறிப்பிட்டபடி உருபன் சமனாதல் அல்லது அடிநிலை உருபன் என்று குறிப்பிடலாம்.

5. வடிவ அடிப்படையில் இலக்கணக் கூறுகள்

தொல்காப்பியர் விரவுத்திணையை வடிவ ஒற்றுமை அடிப்படையில் ஒரு தனிப்பிரிவாகக் கருதியது போல வேறு இலக்கணக் கூறுகளை வருணிக்கும்போது புதிய பாகுபாடுகளை அமைத்துள்ளாரா என்று பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் இலக்கண வருணனைக்கான அடிப்படை எங்கும் ஒரு மாதிரியாகக் கையாளப் பட்டிருக்கிற உண்மையை அறிந்து கொள்ள முடியும்.

தொல்காப்பியர் விரவுத்திணை அமைந்தது போல வேறு எந்த இலக்கணக்கூறுக்கும் விரவுவகை அமைக்கவில்லை. அப்படியானால் தமிழ்மொழி அமைப்பில் அப்படிப்பட்ட வகை பிற இலக்கணக் கூறுகளில் அமைக்கப்படவேண்டிய அவசியம் இல்லை போலிருக்கிறது என நாம் எண்ணலாம். ஆனால் அதன் உண்மையைத் தெரிந்து கொள்ள பிற இலக்கண ஆசிரியர்களோ ஆராய்ச்சியாளர்களோ அப்படிப்பட்ட விரவுவகையைப் பற்றிப் பேசியுள்ளார்களா என்று பார்க்க வேண்டும்.

இலக்கணக்கொத்தில் சாமிநாத தேசிகர் (பதினேழாம் நூற்றாண்டு) வினைச்சொல் அமைப்பில் வடிவ ஒற்றுமை அடிப்படையில் பல பொதுச்சொற்களைக் கூறியுள்ளார். (சூ. 66, 67)

1) முதல்நிலைத் தனிவினையைச் செயப்படுபொருள் குன்றா வினை, செயப்படுபொருள் குன்றிய வினை, பொதுவினை என்ற மூன்று வகையைக் குறிப்பிட்டு முடி, மடி, கெடு போன்றவற்றைப் பொதுவினை உதாரணங்களாகத் தந்துள்ளார், (66.8)

2) தொடர் வினையில் (பகுபதச் சொற்கள்) 1) தன்வினை,

பிறவினை, பொதுவினை என்றும் ii, விதிவினை (உடன்பாட்டு வினை), மறைவினை (எதிர்மறை), பொதுவினை என்றும் iii) செய்வினை, செயப்பாட்டுவினை, (6,8-19) பொதுவினை என்றும் பல இலக்கணக்கூறுகளில் பொதுச்சொற்களை அமைத்துள்ளார். தொடர்வினைகளைப் பொதுவாகப் பகுக்கும் முறையால் வேறு படுத்தலாம். எனவே அவைகளையெல்லாம் வெறும் வடிவ ஒற்றுமை கொண்டு பொதுப்பிரிவு ஏற்படுத்த வேண்டியதில்லை. முதல்நிலைத் தனிவினை என்பது பகாப்பதம் ஆனதால் அந்தப் பாகுபாடு ஏற்றுக்கொள்ளத் தகுந்ததே. தொல்காப்பியர் வினைச் சொற்களைச் செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படு பொருள் குன்றாவினை என்று பாகுபாடே செய்ததால் அங்கு பொதுவினை அமைக்கவில்லை என்று ஒருவர் வாதிடலாம்.

கால்டுவெல் திராவிட மொழிகளில் அடிச்சொற்களைப் பாகுபடுத்தும்போது பெயரடிகள், வினையடிகள், பெயருக்கும் வினைக்கும் பொதுவான அடிகள் (பொது அடிகள்) என்று மூன்றாகப் பிரிக்கலாம் என்று குறிப்பிடுகிறார் (1875 : 192) இந்த அடிப்படையில் தமிழ் அடிச்சொற்களையும் மாணிக்கம் (1971 : 10)[12] அதே மூன்று விதமாகப் பிரித்துள்ளார். அவர் பொது அடிச் சொற்களை 1) வடிவமும் பொருளும் ஒத்தவை (அணி 'நகை' (பெயர்|) அணிதல் (வினை) ; 2) வடிவம் ஒத்து பொருள் ஒவ்வாதவை. வில் 'அம்பு' (பெயர்) விற்றல் (வினை) ; ஓடு 'வீட்டுக்கூரை மேல் போடுவது' (பெயர்), ஓடுதல் (வினை) என இரண்டாகப் பிரித்ததோடு,

> வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது
> நினையும் காலை காலமொடு தோன்றும்

என்ற சூத்திரத்தில் (வி.1) தொல்காப்பியர் 'வேற்றுமை கொள்ளாது' என்று சொன்னதற்குக் காரணம் பொது அடிச் சொற்கள் இருப்பதே என்றும் விளக்கியுள்ளார். 'வேற்றுமை கொள்ளாது' என்று எதிர்மறை விளக்கமாகச் சொன்னது சில அடிச்சொற்கள் (Roots) வேற்றுமையும் ஏற்கும் என்று நாம் எடுத்துக்கொள்ளமுடியாது. இது உரையாசிரியர்களுடைய வேலை போன்றது. நமக்குத் தெரிந்த கருத்தை நூலாசிரியர் மேல்

ஏற்றிக் கூறுவது. ஆயினும் தமிழ்மொழி அமைப்பில் சொல் வகைப்பாட்டில் அடிப்படையாகப் பெயர், வினை என்ற இரண்டு வகை இருப்பதாகக் கொண்டுள்ளதால் வடிவ ஒற்றுமை அடிப் படையில் பெயர், வினை, பொது அடிச்சொல் என மூன்றுவகை இருப்பதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் தொல்காப்பியர் பெயரியலில் 'சொல்லெனப்படும் பெயரே வினையென்று; ஆயிரண்டென்ப' (சூ. 4) என்று சொல்லியல்–தொடரியல் அடிப் படையில் கூறியவர் வடிவு அடிப்படையில் பெயர், வினை, பொது (பெயர்-வினை) என்ற மூன்று வகைப்படுத்தலாம் என்று கூற வில்லை. தொல்காப்பியர், முன்னரே குறிப்பிட்டது போல திணை-பால் பாகுபாடு மிக முக்கியமான இலக்கணக்கூறாகக் கருதிவிட்டதால் அதை முழுமையாகச் சொல்லியல், தொடரியல் அமைப்பு நிலையில் மட்டுமில்லாது எழுத்து அமைப்பு நிலை யிலும் பார்த்து விரவுத்திணை என்ற பாகுபாடு செய்துவிட்டார். ஆனால் வேறு எந்த இலக்கணக் கூறுக்கும், சிறப்பாகப் பெயர், வினை பாகுபாட்டுக்கு எழுத்து நோக்கில் அவைகளின் வடிவத் தைப் பார்த்து விரவுச்சொல் அமைக்காமல் போய் விட்டார்.

பொதுவாக இலக்கணக்கொத்திலும் பிற இலக்கண நூல் களிலும் வடிவ ஒற்றுமை அடிப்படையில் இலக்கணக் கூறுகளைப் பாகுபாடு செய்யும்போது ஒரு நிமித்தம் பற்றி இரு பொருளை உடைய பல்பொருள் ஒரு சொற்களைச் சேர்த்துக் கொள்ளாது பொருள் முழுவதும் வேறுபட்டு வரும் பலபொருள் ஒரு சொல்லாக வருவனவற்றையே பாகுபாடு செய்துள்ளார்கள். தொல்காப்பி யத்தில் 'எல்லாம்' என்ற ஒரு சொல் மட்டுமே பலபொருள் ஒரு சொல் என்ற பிரிவில் அடங்குகிறது. இயற்பெயர் போன்ற பல்பொருள் சொற்களையும் தொல்காப்பியர் விரவுத்திணையில் அடக்கியது போலப் பிறர் அடக்கவில்லை; அடக்கவும் மாட்டார் கள். ஆயினும் தொல்காப்பியர் வருணனை குறை உடையதாகக் கருத வேண்டியதில்லை. ஏனெனில் இயற்பெயர், முறைப்பெயர் போன்ற பெயர்ச்சொற்களின் சில பாகுபாடுகள் இங்கே விளக்க முடிந்துவிட்டதும் இலக்கண வருணனையில் பொதுமையும் எளிமையும் ஏற்பட்டுள்ளதும் நன்மையாகக் கருதலாம். எனவே

ஒரு வகையில் குறை உடையதாயினும் அதில் சில நிறைகள் அமைந்து விட்டன.

## 6. வழக்கும் இலக்கணமும்

தொல்காப்பியப் பாயிரமே

'வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் பொருளும் சொல்லும் நாடி'

என்ற இலக்கணத்தின் அடிப்படையைக் குறிப்பிடுகிறது. எனவே இலக்கண ஆராய்ச்சியில் இலக்கண உண்மைகள் எப்படி இலக்கியத்தில் பயின்று வந்திருக்கின்றன என்று பார்ப்பது ஒருமுறை; இதுவே பரவலாகவும் காணப்படுகிறது. இன்னொரு முறை இலக்கிய வழக்குகள் எப்படி இலக்கணம் ஆக்கப் பட்டிருக்கின்றன என்று பார்ப்பது. பொதுவாக இந்த முறை தொல்காப்பியத்தைப் பொறுத்தவரை கால ஆராய்ச்சிக்கே பயன் படுத்தப்பட்டு வந்திருக்கிறது. சமீப காலத்தில் இலக்கியக் கிளை மொழி பற்றிய உண்மையும் – அதாவது அக்காலத்தில் வழங்கிய பிற கிளைமொழிகள் பற்றி எதிர்மறையான அறிவும் - புலப்படுத்து வதாகவும் விளக்கப்பட்டிருக்கிறது (சண்முகம். 1971 a, 1971 b); மேலும் கிடைத்த வழக்குகளைக் கொண்டு இலக்கணம் எப்படி உருவாக்கப்பட்டிருக்கிறது? கிடைக்கும் வழக்குகளையும் – வழக்கில் உள்ளவற்றின் மொழி அமைப்பு உண்மைகளையும் விளக்கும் முறையில் இலக்கணம் உள்ளதா? இலக்கணத்தில் கூறப்பட்டுள்ள பொதுமை, புதிய வழக்குகளுக்கு இடமளிக்கிறதா? என்றெல் லாம் ஆராய்ந்தால் இலக்கண ஆசிரியனின் இலக்கண அமைக் குந் திறனை அறிந்துகொள்ள முடியும். இந்த நோக்கில் விரவுத் திணைச் சொற்களின் இலக்கணத்துக்கும் வழக்குக்கும் உள்ள தொடர்பை இங்கு புரிந்துகொள்ள முயலுவோம்.

### 6. 1. இயற்பெயர்

ஆண்மை இயற்பெயரும், பெண்மை இயற்பெயரும், அஃறிணை இயற்பெயர்களாக வரும் என்பதற்குச் சான்றுகள் சங்ககால இலக்கியத்தில் இல்லை. எனவே உலகவழக்கை

யொட்டியே தொல்காப்பியர் இலக்கணம் அமைந்திருக்கவேண்டும் என்று எண்ணவேண்டியிருக்கிறது. இடைக்காலத்தில்தான் ஆண்மை இயற்பெயர் ஒன்று பிற உயர்திணைக்கும்[18] அஃறிணைக்கும் வழங்கப்பட்டதற்கு மேலே இலக்கியச்சான்று தரப்பட்டது. பெண்மை இயற்பெயர் அஃறிணைப் பொருளின் இலக்கிய வழக்குக்குச் சான்று காணவேண்டும்.

தொல்காப்பியர் எல்லாவகையான இயற்பெயர்களும் இரண்டு திணையிலும் வரும் என்று கூறியுள்ளார். ஆனால் உலக வழக்கு அப்படி அமையவில்லை. இதில் இரண்டு விதத்திலும் கட்டுப்பாடு காணப்படுகிறது. 1) எல்லா உயர்திணை இயற்பெயர்களும் அஃறிணை இயற்பெயர்களாக வழங்கினவா? என்பது அறிய வேண்டும். அப்படி வழங்கியிருக்க முடியாது என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. அப்படியானால் எந்தெந்த இயற்பெயர்கள் பிற திணையில் இயற் பெயர்களாக வழங்கின என்பதை ஆராயவேண்டும் 2) உயர்திணைப்பெயர்கள் அஃறிணைக்கு இயற்பெயராக வழங்கும்போது கூட எல்லா அஃறிணை பெயர்களுக்கும் இயற்பெயர்கள் இட்டு வழங்கப்பட்டனவா என்று ஆராய்ந்தால் அதற்கும் இல்லை என்றே பதில் சொல்ல வேண்டியிருக்கும். ஏனெனில் மரம், செடி, புழு, பூச்சி போன்றவற்றிற்கெல்லாம் இயற்பெயர் இட்டு அழைத்திருக்க முடியாது.

தமிழகத்தில் நூற்றுக்கணக்கான உயர்திணை இயற்பெயர்கள் வழங்கியிருக்க வேண்டும். அவையெல்லாம் அஃறிணை இயற்பெயர்களாக வழங்கியிருக்க முடியாது. எனவே என்னென்ன உயர்திணை இயற்பெயர்களாக வழங்குகின்றன. அவைகளிடையே காணப்படும் பொதுமை என்ன என்பதைக் காண வேண்டும். குறிப்பிட்ட சில உயர்திணை இயற்பெயர்களே அஃறிணை இயற்பெயர்களாக சங்ககாலத்திலும் வழங்கியிருக்கவேண்டும் என்று ஊகிப்பது சரியாகவே இருக்கும். ஆனால் தொல்காப்பியம் எல்லா உயர்திணைப் பெயர்களும் அஃறிணை இயற்பெயர்களாக வரும் என்று கூறியதால் சங்ககாலத்தில் அப்படிப்பட்ட வழக்கு இருந்திருக்கவேண்டும்; பிற்காலத்தில்தான் மாறிவிட்டது என்று கொள்ளமுடியாது. அப்படியானால் தொல்காப்பியர் ஏன் இப்படி

இலக்கணம் அமைத்தார் என்ற கேள்வி எழுகிறது. இலக்கண ஆசிரியர் செய்யக்கூடிய 'பொதுமை உண்டாக்கல்' என்ற உத்தியைப் பின்பற்றி அப்படிச் சொல்லியிருக்கக் கூடுமே தவிர வேறு காரணம் இருக்கமுடியாது.

எல்லா உயர்திணை இயற்பெயர்களும் திணை விரவி வராததைப் போலவே உயர்திணை இயற்பெயர்கள் அஃறிணையில் வரும்போது எல்லா அஃறிணைப் பொருளுக்கும் உயர்திணை இயற்பெயர் சூட்டப்படுவதில்லை. மாடுகளுக்கு மட்டுமே இயற்பெயர் இட்டு வழங்கியிருக்கவேண்டும் என்ற வேலுப்பிள்ளை கருத்து மேலே குறிப்பிடப்பட்டது. அதாவது அஃறிணையில் மாட்டுக்கு மட்டும் பொருந்துவதாக அவர் கருதுகிறார். இங்கும் எல்லா மாடுகளும் மனிதப்பெயர் இட்டு அழைக்கப்பட்டனவா என்பது கூட சந்தேகமே. வீட்டில் இருக்கும் மாடுகளுக்கு - இன்றும் பொதுவாகச்சொன்னால் செல்லமாக வளர்க்கும் விலங்குகள், பறவைகளுக்கு மட்டுமே மனிதப் பெயர் இட்டு அழைத்திருக்கலாமே தவிர எல்லா அஃறிணைப் பொருளுக்கும் உயர்திணை இயற்பெயர் வைத்து அழைத்திருக்க வாய்ப்புஇல்லை. அதாவது உயர்திணை இயற்பெயர்கள் குறிப்பிட்ட சிலவகை அஃறிணைப் பொருள்களுக்கு மட்டுமே விரவி வந்தாலும் தொல்காப்பியர் எல்லா அஃறிணைப்பொருளுக்கும் பொருந்துவது போல இலக்கண அமைத்தது 'பொதுமைப்படுத்துதல், என்ற உத்தியை ஒட்டியே தவிர அவர்கால வழக்கை ஒட்டி அல்ல. ஆகவே உலக வழக்கை ஒட்டி இலக்கணத்தை நோக்கும் போது இல்க்கண ஆசிரியன் கையாண்ட உத்தி புலப்பட்டு விடுகிறது.

ஒருமை இயற்பெயர் என்பது நாடு, நகரம், ஆறு, மலை ஆகியவற்றின் குறிப்பிட்ட பொருளின் பெயர் என்று மேலே பார்த்தோம். இங்கும் எல்லா ஒருமை இயற்பெயர்களும் உயர்திணை இயற்பெயர்களாக அமையாது; அவைகளில் சில பெயர்களே உயர்திணை இயற்பெயர்களாக உலகவழக்கில் அமையும். ஆனால் தொல்காப்பியர் அந்தக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தே பொதுமைப்படுத்தியுள்ளார்.

இப்படியே பன்மை இயற்பெயர்களிலும் உயர்திணை இயற் பெயர்களாக சிலவே வந்திருக்கமுடியும். இப்படி திணைவிரவி உலகவழக்கில் வருவதற்கு இருக்கும் கட்டுப்பாடுகளை அலட் சியப்படுத்தியே தொல்காப்பியர் எல்லாப்பன்மை இயற்பெயர்களும் உயர்திணையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இயற்பெயர்களாக அமையும் என்று இலக்கணம் அமைத்துவிட்டார்.

இயற்பெயர்கள் திணை விரவி வரும் என்று தொல்காப்பியர் கூறியது வெறும் வழக்கை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கூறியதல்ல; பல புதிய வழக்குகளுக்கு இடம் அளிக்கக்கூடிய வகையில் பொதுமைப்படுத்திக் கூறியது என்று உணர்ந்து கொள்ளவேண்டும். இது மொழியியல் நோக்கிப் வருணனை நிறைவு (Descriptive adequacy) என்று அழைக்கப்படுகிறது. சண்முகம் (1980, 64, 89)

6. 2. முறைப்பெயர்

முறைப்பெயர்களையும் ஆண்மை சுட்டிய பெயர், பெண்மை சுட்டிய பெயர் என்று பகுத்ததால் அவை அடிப்படையில் உயர் திணைக்குரியதாய் அஃறிணையில் துணைநிலையாய் பயன்படும் என்று கூறியுள்ளார். இங்கும் உயர்திணையில் வழங்கும் எத்தனை பெயர்கள் அஃறிணையில் எந்த எந்தப் பொருட்கு உரியது என்ப தையும் வழக்கையொட்டி அறியவேண்டும்.

மருகன், நாத்தூண் (நாத்தனார்), மைத்துனன் ஆகிய சொற் கள் அஃறிணைப் பொருள்களிடையே வழங்குவதற்கு வாய்ப்பே இல்லை. அப்படியே அஃறிணைப் பொருள்களிடையே வீட்டில் வாழும் விலங்குகளுக்கு மட்டுமே ஓரளவு பொருந்தும். இயற் பெயரைப் போலவே இரண்டு நிலையிலும் (எல்லாமுறைப்பெயர் களும் அஃறிணைக்கு வழங்குவதிலும் அஃறிணைக்குள்ளே பொருந்தும் பெயர்களிலும்) கட்டுப்பாடு வழக்கில் இருப்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை என்றால் அது பண்பாட்டு ஆய்வாள ணின் கடமையாய்க் கருதித் தொல்காப்பியர் மொழியமைப்பில் பொதுமையாய் விளக்கிவிட்டார் என்றே கருதவேண்டும்.

தொல்காப்பியர் கூறிய முறைப்பெயர்கள் உயர்திணைப் பொருள்களுக்கு இடையேயும் அஃறிணைப் பொருள்களுக்குள்ளே யும் வழங்குவதே ஆகும். ஆனால் இலக்கிய வழக்கில் உயர் திணைக்கும் அஃறிணைக்கும் இடையேயும் முறைப்பெயர் பயன்படுத்தப் பட்டுள்ளது. ஒரு செடியை 'அக்கா' என்று உறவு கொண்டாடும் தலைவியை நற்றிணை காட்டுகிறது. (172. 3-5

நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று

அன்னை கூறினள் புன்னையது சிறப்பே

இங்கு புன்னைமரத்தை நுவ்வை (அக்கா) என்று தலைவி கூறுகி றாள். அதுபோல இராமாயணத்தில் குரங்குகளுக்கிடையே உறவுச் சொற்கள் விரிவாகவே பயன்படுத்தப்படுவதும் மனித னுக்கும் குரங்குக்கும் உறவு கற்பிக்கப்படுவதும் பலரும் அறிந் ததே. இராமன் சுக்கிரீவனைத் தம்பியாக ஏற்றுக்கொள்வது உயர்திணைக்கும் அஃறிணைக்கும் இடையே காணப்படும் உற வாகும்.

'நீ என்னுயிர்த் துணைவர் என்றான் (4.8.27.4) என்று 'நண்பன்' ஆக முதலில் ஏற்றுக்கொண்டாலும் பின்னர்

..........குன்று சூழ்வான்,

மகனொடும் அறுவரானோம் .........

..............................

புகலருங் கானந் தந்து புதல்வராற்

பொலிந்தான் நுந்தை 6. 452

என்று இராமன் கூறும்போது 'தம்பி' உறவு வெளிப்பட்டு விடுகிறது எனவே உயர்திணைக்கும் அஃறிணைக்கும் இடையே காணப்படும் உறவு முறை பண்பாட்டின் சிறப்பு அம்சமாகும். இது மொழியின் சாதாரணப் பயன்பாட்டிலிருந்து மாறுபட்ட வழக்கு. ஆதலால் இலக்கண ஆசிரியன் கவலைப்பட வில்லை போலும். பண்பாட்டு ஆய்வாளன் சிறப்பாகக் குறித்துக் கொள்ளத்தக்க வழக்குகள் என்று இலக்கண ஆசிரியர் ஒதுக்கியிருக்க வேண்டும்.

வழக்கு நோக்கில் இலக்கணத்தைப் பார்க்கும்போது வழக்கை

இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு இலக்கணம் அமைக்காமல் விஞ் ஞானிக்குள்ள பரந்துபட்ட நோக்கோடு பொதுமைப்படுத்திக் கூறுதலும் சில வழக்குகளை இலக்கணத்துக்குள் கொண்டு வராது ஒதுக்கிவிடுதலும் அறிந்துகொள்ள முடிகிறது. முன்னது பொதுமைப் படுத்துதல் என்ற (இலக்கண உத்தியையும்,) பின்னது சில வழக்குகளை (ஒதுக்குவது) இலக்கணத்தின் வரம்பையும் புலப்படுத்துகிறது.

## 6. 3. சினைப்பெயர்

வழக்கில் மனித உறுப்புகளும் அஃறிணைப் பொருளின் உறுப்புகளும் ஒரே பெயரை உடையனவாக தலை, கண், கால், மூக்கு முதலியன அமைந்துள்ளன. எனவேதான் சினைப் பெயர் களை விரவுப் பெயர்களாகத் தொல்காப்பியர் கருதியிருக்கலாம். அந்தப் பெயர்களில் ஆணுக்கும், பெண்ணுக்கும் உயர்திணையில் சிறப்பாக அமைந்த உறுப்புகளும் அஃறிணை பொருளுக்குச் சிறப்பாக அமைந்த உறுப்புகளும் (கொம்பு, வால் போல்வன) அடங்கும் ஆயினும் சிறப்பாக அமைந்த உறுப்புகளைக் கொண்டு ஆண்மை, பெண்மை, ஒருமை, பன்மை என்ற பாகுபாடு செய்தது பொருந்துமா என்ற கேள்வி முன்னமே எழுப்பப் பட்டது. ஏனெனில் எல்லாச் சினைப்பெயர்களுமே அஃறிணை யைச் சேர்ந்தனவே. ஆகவே இந்தப் பாகுபாடு (சினைப் பெயர்களை ஆண், பெண், ஒன்று, பல என்று பிரித்தது) மொழி அமைப்பு அடிப்படை என்று கொள்ள முடியாது. இதனால் இவை திணை விரவிவரும் என்பதும் பொருந்தாது போய் விடு கிறது. அப்படியானால் தொல்காப்பியர் இப்படி இலக்கணம் அமைத்ததற்குக் காரணம் என்ன? அதாவது மொழிஅமைப்பு அல்லாமல் வேறு எதோ இருக்கவேண்டும் என்று எண்ண வேண்டியிருக்கிறது.

## 6. 4. சினை முதற்பெயர்

உறுப்புகளின் பெயர் பொதுவாகவும் சிறப்பாகவும் இருப்பதால் அவைகளை ஒட்டிய முதற்பெயர்கள் வழக்கில் இருந்திருக்க வேண்டும். அப்படி என்னென்ன பெயர்கள் இலக்கியங்களில் வழங்குகின்றன என்று ஆராயவேண்டும். மேலும் அவை திணை,

விரவி வழங்கினவா என்பதையும் பார்க்க வேண்டும். மனி இயற்பெயர்களை ஒட்டிய சினை முதற்பெயர்கள் (முடக்கொற்றன் போலவோ ஆண், பெண்பால் விகுதி சேர்ந்த சினை முதற் பெயர்கள்) முடவன், முடத்தி முதலியன (போலவோ அஃறிணை ஒட்டிய சினை முதற்பெயர்கள் வழங்கியிருக்க முடியுமா? என்பது சந்தேகமே. மேலும் அவை விரவுப்பெயர்களாக ஆளப்பட் டிருக்குமா என்பதும் பெரிய கேள்விக்குறியே. அப்படியானால் தொல்காப்பியர் எப்படி பொதுமைப் படுத்தி இலக்கணம் செய்தாரா என்ற கேள்வி வழக்கு நோக்கிலிருந்து பார்க்கும் போது எழத்தான் செய்கிறது. எவ்வளவு தூரம் தொல்காப்பியர் அமைப்பு அழகை (Neatness of pattern) மனதில் கொண்டு இலக்கணம் அமைந் தார்? எவ்வளவு தூரம் எதாவது புறச் செல்வாக்குக்கு உட்பட்டு இப்படி இலக்கணம் அமைத்தார் என்ற முறையிலேயே பதில் அமைய முடியும். இந்த இரண்டு சமாதானமும் நாம் இன்றைய நோக்கில் தருபவையாக இருந்தாலும் பாயிரமும் இவற்றிற்குத் துணை செய்வனபோல அமைந்திருக்கிறது என்பதும் சுட்டிக் காட்டத்தக்கது. உண்மையில் தொல்காப்பிய ஆராய்ச்சிக்குச் சிறப்பாகவும் இலக்கண ஆராய்ச்சிக்குப் பொதுவாகவும் பல கோட்பாடுகளை பாயிரம் குறிப்பிட்டுள்ளது. அவைகளில் 1) இலக் கணம் இலக்கிய வழக்கையும் ('செய்யுள்') உலக வழக்கையும் வழக்கு அடிப்படையாகக் கொண்டது என்பதோடு 2) 'முறைப்பட எண்'ணுதல் 3) முந்துநூல் காணுதல்' என்ற மேலும் இரண்டு அடிப்படைகளையும் சேர்த்துக் கூறியது சிறப்பு மிக்கது. அமைப்பு அழகு என்று இன்று பேசப்படுவதுதான் 'முறைப்பட எண்ணுதல் என்பதன் வளர்ச்சி என்றும் புறச்செல்வாக்கு என்பது 'முந்துநூல் காணுதல்' என்றும் கூறுவது பொருத்தமாக இருக்கும். எனவே வழக்கு நோக்கில் இலக்கணத்தை நோக்கும் போது இலக் கணம் உருவாகும் முறையும் உருவாக்கும் முறையும் தெளி வாகின்றன.

அடிக்குறிப்பு

1. The essential difference between common nouns and propernouns lies in their function: the former are

meaningful units; the latter where identifiica tion marks. Ulman. 1962 : 77

2. Proper nouns have unique reference and do not have the charactristics of common nouns என்று முதலில் கூறி விட்டு அடுத்து proper nouns can be classified as commonnouns in which case they assume the characte ristic of count nouns Shakespeare (the auther), a Shakespeare (an auther like Shakespeare). என்று கூறியுள்ளார்.

Qurik etal. 1972: 16. இங்கு ஒரு ஷேக்ஸ்பியர் என்பது ஷேக்ஸ்பியர் போன்ற ஒரு ஆசிரியர் என்ற பொருள் படும்.

These cases must be distinguished from the plural of proper names as common nouns. I saw several Tanners (paintings by Tanner) in the gallery

Ulman, 1962 : 77. இங்கு டேனர்கள் என்பது .டேனர் எழுதிய ஓவியங்கள் என்ற பொருள்படும்.

4. The indigeneons names of the Tamils are mostly the names of the natural objects like plants, trees and animals etc. This practice of giving the names of natural objects is common in the pinitive and ancient societies Subramaniam V.I, 1955 16

5. சங்கத் தமிழில் இறப்பு, இறப்பல்காலம் (Non past tense) என இரண்டுதான் இருந்தாலும் இறந்த காலம் 'நிகழ் காலம், எதிர்காலம் என்று மூன்று கூறியது நேரக் கிளவி என்று சமாதானம் சொல்வார்கள். இதற்கும் காரணம் பொதுச் சிந்தனையே தவிர மொழி அமைப்பை ஒட்டிய சிந்தனை அல்ல என்பதுதான். இதற்குக் காரணம் நெருநல் (நேற்று) இன்று, நாளை என்ற நேர வேறு பாடும் காரணமாகலாம்.

6. பலர் பால் ஆண்-பெண் வேறுபாடு இல்லாதது; உயர் திணைப் பன்மை என்ற பண்பையே வெளிப்படுத்தும் என்று

விளக்கம் கூறப்படுகிறது. தலைவி என்ற பெண் பாற் பெயர் பன்மை ஏற்று தலைவியர் என்று கூறும் போது பெண்மை பன்மை என்று உணர்ந்தாலும் பெண்பன்மை என்பது மொழி அமைப்பு நிலையில் அல்லது இலக்கண நிலையில் எடுத்துக் கொள்ளப் படுவதில்லை, அதற்குக் காரணம் பதிலீட்டுப் பெயரான அவர் என்பதும் வினை முற்றில் வரும் ஆர் என்ற விகுதியும் பெண் பன்மை என்பதைச் சுட்டாது உயர்திணைப் பன்மை மட்டுமே சுட்டுவாகவே கொள்ளப் படுகிறது.

7. 'வந்தேன் அஞ்சல் மணிமேகலை யான்' (சிலம்பு. 15–33) என்ற தொடரில் மணிமேகலை என்ற படர்க்கைப் பெயர் யான் என்ற தன்மைச் சொல்லை கொண்டு முடிந்திருக்கிறது.

8. இளம் பூரணர் உரையில் (கழகப்பதிப்பு, 1963) பெயரியல் 26 ஆம் சூத்திர உரையில் மட்டும்.
'அஃறிணைப் பெண் ஒன்றற்கும் உயர்திணைப் பெண் ஒன்றற்கும் வந்த வாறு கண்டு கொள்க' என்ற வாசகமே உள்ளது. ஆனால் அடுத்த மூன்று சூத்திரங்களிலும், 'அஃறிணை ஒன்றற்கும் உயர்திணை ஆண்பாற்கும் உரிய வாய் வந்தவாறு கண்டு கொள்க' என்று இருப்பதால் அஃறிணை ஒருமைக்கும் அஃறிணைப் பன்மைக்கும் உயர் திணை ஒருமைக்கும் (உரியவாய்) வந்தவாறு கண்டு கொள்க; போன்ற தொடர்கள் காணப்படுவதால் (உரிய வாய்) என்ற சொல் இருக்கவேண்டும் என்று கருதி அடைப்புக்குறிகள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

9. The same word may have two or more different meanings This situation has been known since Breal as '*Polysemy* ...... two or more words may be identical in sound (homonymy') ......... Although, as will be seen the border line between polysemy and homonymy is some time fluid. The types are so distinct

that they will have to be considered separately' Ulman, 1962 : 119

இந்தக் கருத்தை லயன்சும் (1968:406) ஒத்துக் கொண்டுள்ளார்.

We have ...... in addition synonymy and homonymy what has come to be called in the more recent developmnet of traditional semantics Multiple meaning (some times called polysemy). The distinction between homonymy and multiple meaning is evident in the organisation of the dictionaries we customarily use: what the lexicographer has classifiied as homonymes will be listed as different words, whereas multiple meanings will be given under one entry.

இங்கு அகராதியில் பல பொருள் ஒரு சொல் வேறு வேறு சொற்களாகக் கொடுக்கப்படும்; பல் பொருள் சொல் ஒரே சொல்லாகக் கொடுக்கப்படும் என்ற வேற்றுமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

10. In the same manner *um* in annexed as an anxiliary to some affirmative universals for the purpose of widening their application-e.g, *ellā-v-um*, Malayalam all, literally 'all and-' from *ellāvā*, all and *um* and This from is abbreviated in Tamil into *ella:m*; which is regarded and treated by grammariams as a neuter plural. The corresponding epicene plural is *ellār-um*, all persons. In Tamil poetry *elām* is regarded as a plural of the first person, meaning all we, in which *a:m* probably represents *a:m*, we

Caldwell (1956:408)

11. Is his actual practice and to some extent in hi theoretical writings, Bloomfield deviated in two principal ways from this concept of the phoneme. இதன்

முழு விளக்கத்துக்கும் Anderson (1974 : 226) பார்க்கவும்.

12. 'Dravidian roots... may be arranged in three classes என்று குறிப்பிட்டு இரண்டு பிரிவுகளைக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவர் விள்க்கத்திலிருந்து 1) வினை, 2) வினை-பெயருக்கும் பொதுவானவை 3) பெயர் என்ற மூன்று இருப்பது புலானகிறது.

Caldwell (1956 : 192)

It is generally said that there are three kinds of roots in Tamil, viz., verbal roots, nominal roots and the roots common to both noun and verb.

Manickam, 1972:10

13. அப்பூதியடிகள் வரலாறு இன்னொரு உண்மையையும் புலப்படுத்துகிறது. உயர்ந்தோரின் பெயர்களைப் பிற மனிதர்க்கும் இடுவது என்பதே அது. வான்மீகியார் போன்ற சங்ககால புலவர் இயற்பெயர்கள் இந்தப் பழக்கம் முன்னாளிலேயே துவங்கி விட்டதைக் காட்டுகிறது. இன்றும் லெனின், காந்தி, நேரு, அண்ணாதுரை என்ற பெயர்கள் வழங்குவதும் அந்த உண்மையைப் புலப் படுத்தும். ஆனால் இது இயற்பெயர்களைப் பண்பாட்டு நோக்கில் பார்ப்பவர்களுக்கு மட்டுமே சிறப்பானது; மொழியியல் நோக்கில் உயர்திணைப் பெயர்களே பிற உயர்திணைப் பொருட்டு வருவதால் சிறப்பு எதுவும் இல்லை. இதைப் போலவே தெய்வப் பெயர்கள் இயற் பெயர்களாக பரவலாக வழங்கப்படுவதும் மொழியியல் நோக்கில் சிறப்பில்லாததால் இலக்கணங்களில் குறிப் பிடப் படுவதில்லை.

## துணை நூல்கள்

அகத்தியலிங்கம், ச. 1979. சொல்லியல், பெயரியல், அண்ணாமலைநகர்.

சண்முகம், செ. வை. 1971a. 'சங்க இலக்கிய மொழி அமைப்பு' ஆராய்ச்சி–2, 326-34.

1971b. 'Some Problems of Old Tamil Phonology *IIJ* 3.30-43

1972. *Dravidian Nouns* Annamalainagar.

1978. 'தொல்காப்பியரின் சொல்லியல் கோட்பாடு,' மொழியியல் 2. 1. 75-100,

1980. எழுத்திலக்கணக் கோட்பாடு அண்ணாமலைநகர்.

1982. 'திணை-பால் பாகுபாடு' மொழியியல் 6–1

சிவதம்பி, கா. 1982. இலக்கணமும் சமூக உறவுகளும், சென்னை.

சிவலிங்கனார், ஆ. (பதிப்பு) 1982. தொல்காப்பிய உரைவளம்: சொல்லதிகாரம் கிளவியாக்கம், சென்னை.

நயினார், நா. 1982. பேரும் பெருமையும், நாகர்கோவில்.

பூவராகம் பிள்ளை, 1974. சொல்லதிகாரம் சேனாவரையம், விளக்கவுரை, (சேனாவரையர் கழகப்பதிப்புடன் இணைந்தது), சென்னை, 1974.

வேலுப்பிள்ளை, ஆ. 1966. தமிழ் வரலாற்று இலக்கணம், சென்னை.

இலக்கணக் கொத்து, சுவாமிநாத தேசிகர் ஆறுமுகநாவலர் பதிப்பு, சென்னை, 1956

இலக்கண, விளக்கம் வைத்தியநாத தேசிகர் கழகப் பதிப்பு, சென்னை, 1973,

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரை, கழகப் பதிப்பு. 1972

தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியர் உரை கழகப் பதிப்பு. 1966

தொல்காப்பியம் – சொல்லதிகாரம். இளம்பூரணர் உரை கழகப் பதிப்பு, 1973

,, நச்சினார்க்கினியர் உரை, கழகப் பதிப்பு, 1962

,, சேனாவரையர்உரை, கழகப் பதிப்பு, 1974

,, தெய்வச்சிலையர் உரை, கழகப் பதிப்பு, 1963

,, கல்லாடர் உரை, கழகப் பதிப்பு, 1964

நன்னூல்-சிவஞான முனிவர் விருத்தியுரை, கழகப் பதிப்பு, சென்னை, 1974

Anderson, R.A. 1974 *The organisation of phonology* New York.

Balasubramaniyan, K. 1981 *A Descriptive grammar of Tolka:ppiyam Appendix-Dictionary* (Manuscript), Annamalainagar

Caldwell, R. 1856 *A Conparative grammar of the Dravidian or South Indian family of languages, Reprinted*, Madras.

Hockett, C.F. 1956 *A Course in Modern Linguistics*, New York.

Isreal, M. 1973 *The Teatment of Morphology in Tolka:-ppiyam, Madurai University*, Madurai.

Lyons, J. 1968 *An Introduction to* Th*eoretical Linguistics*, Cambridge.

Manickam, V. SP. 1972 *A Stuty of Tamil verbs*, Annamalainagar.

Paramasivam, K. 1980 '*A neutralisation is Progress*' A *Festschtift for prof. M. Shanmugam Pillai*, Madurai.

Subramoniam S. V. 1955 *Descriptive grammar of Cilappatika:ram with Index*, Madras.

Subrahmaniya, V. I. 1955 'Personal names in Sangam literature' *Indian Linguistics*, 16. 170-8

Subrahmoniya Sastri, P. S. 1945 *Tolka:ppiyam Collatika:ram* English Translation) 2nd Edition, 1979, Annamalainagar

Ullman, S. 1962 *Semantics: An Introduction to the science of meaning*, Oxford.

Quirk, R. et al. 1972 *A grammar of contemporary English* London

*Index des mots de la literature tamoule anciene*, Vols I to III, Pondicherry, 1967

*Tamil Lexicon*, Published under the authority of University of Madras,

## மொழியில் புதுமையாக்கம்

உலக மொழிகளை மொழிப்பயன்பாட்டில் ஆற்றல் மிக்க மொழிகள் என்றும், தன்னிறைவு பெறாத - ஆற்றல் குறைந்த மொழிகள் என்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதாவது மொழிப்பயன்பாட்டினை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்த மொழிகள் (developed languages) என்றும், வளர்ச்சி அடைந்து வரும் மொழிகள் (developing languages) என்றும் பிரிக்கலாம்.

ஒரு சமுதாயத்தில் வழக்கிலிருக்கும் மொழிக்கூறுகள் எந்தெந்த சமுதாயச் சூழலில் பயன்படுத்தப்படுகின்றன என்பதை விளக்க முற்படும் போது அம்மொழிக் கூறுகளின் சமுதாயச் சிறப்புகள் (social values) நமக்குத் தெரியவருகின்றன. இத்தகைய சிறப்புக்களைப் பெற்றுள்ள மொழிக் கூறுகளைப் பற்றிய விளக்கத்தினைச் சமுதாய மொழியியல் விளக்கம் (sociolinguistic description) நமக்குத் தருகிறது. மேலும் இவ்விளக்கங்கள் மொழிப்பயன்பாட்டில் தோன்றியுள்ள தோன்றி வரும் மாற்றங்களையும் அவற்றிற்கான காரணங்களையும் எடுத்துச் சொல்வதைக் காண்கிறோம். இவ்வாறு காலந்தோறும் மொழிகளில் தோன்றிவந்துள்ள மாற்றங்களை ஒப்பவைத்து நோக்கும் போது புதுமையாக்கமோ அல்லது புதுமையாதிக்கமோ அப்படி ஒன்றும் புதிய கோட்பாடு அல்ல என்பதை நம்மால் எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது.

மொழி பேசுவோர் பல்வேறு பிறமொழிச் சொற்களை கருத்துப் பரிமாற்றம் காரணமாக பயன்படுத்துவதை காண்கிறோம். மொழிப்பயன்பாட்டில் எளிமையும், ஆற்றலும் ஏற்பட வேண்டியதன் இன்றியமையாமை, நமக்கு இதன் மூலம் தெளிவாகிறது. இதனால்தான் மொழித்திட்டமிடுதலில் புதுமையாக்கம் என்ற ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டு இதன் வாயிலாக மொழிப்பயன்பாட்டிலும், மொழியிலும் வளர்ச்சிப் பணிகள் உலகின் பல் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டாக்டர் கி. கருணாகரன்
மொழி வளர்ச்சி
மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

மொழியியல் 6.1 (1983

# கலைக்களஞ்சிய உருவாக்கம் சில அடிப்படைக் குறிப்புகள்

து. மூர்த்தி,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

1. 1. 'கலைக் களஞ்சியம்' பற்றிய ஆய்வு மிகப் பெரிய நூலாக விரிவடையக் கூடியதாகும். உருவான கலைக்களஞ்சியங்களை மதிப்பிடுதல் அல்லது கலைக்களஞ்சிய உருவாக்கத்திற்கான ஆய்வுகள் என்பனவும் அத்தன்மையனவே. காரணம், தொகுப்புப் பணி வரலாற்றில் குறிப்பிடத்தக்க மைல் கல்லாக அமைவது 'கலைக்களஞ்சியமாகும்', 'உடனடி ஒப்புநோக்கீட்டு நூலகமாகவும்', 'கருத்து விளக்கக் காப்பகமாகவும்', நூலக அலமாரிகளில் வைக்கப்படும் கைகொள் ஆய்வுக்கூடமாகவும் விளங்கும் தன்மையது. ஒரு மிகப்பெரிய பல்கலைக் கழகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் பயன்படுவதும் அதே சமயத்தில் தனித்துறையாக வளர்ந்துவருவதுமான 'கலைக்களஞ்சியம்' பற்றிச் சுருங்கக் கூறுவது அவ்வளவு எளிதான வேலையன்று.

1. 1. 1. கலைக்களஞ்சியத் தோற்றம், வளர்ச்சி, வரலாறு, வகைப்பாட்டு விளக்கம் ஆகியன இக்கட்டுரையில் இடம் பெற வில்லை. இக்கட்டுரை அல்லது (தெளிவாகச் சொல்லப்போனால்) அறிக்கையின் நோக்கம் கலைக்களஞ்சியம் பற்றி ஆய்வு செய்வதும் அன்று. புதிதாக உருவாக்கப்படக்கூடிய ஒரு கலைக்களஞ்சியத் திற்குப் பயன்படும் வகையில், சில அடிப்படைக் குறிப்புகளை முறைப்படுத்தலாகும்.

1. 1. 1. 1. 'பொதுவாக அனைவர்க்கும் விளங்கும்படியான நடையில், கல்லூரியில் உயர்தரப்பட்டம் பெற்றவர்களுடைய அறிவுத்தரத்திற்குக் குறையாமல், அறிவுத்துறைகள் பலவற்றையும் இது விளக்கிக் காட்டும்' என்று 12. 12. 1948 - இலேயே, தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்ட முன்மாதிரி கலைக்களஞ்சியப் படிவத்தில் தி. சு. அவினாசிலிங்கம் குறிப்பிட்டிருப்பதற்தேற்ப,[1] கலைக்களஞ்சியம் ஓர் மாணவனுக்கு உள்ளுக்கியாகவும், ஓர் உயர்தரப் பட்டப்படிப்பு மாணவனுக்கு வழிகாட்டு நூலாகவும் விளங்கவேண்டும். எனவே இது அறிவையும் உழைப்பையும் முதலீடு செய்து நடத்தப்பட வேண்டிய 24 மணி நேர ஆய்வுத் தொழிலாகும்.

1. 1. 1. 2. கலைக்களஞ்சியத்தைப் பயன்படுத்துவோர் பரப்பு இன்னது என்று தீர்மானமான ஒரு முடிவுக்கு வர இயலாது. பிரித்தானியக் கலைக்களஞ்சியம், கலைக்களஞ்சியங்களைப் பயன் படுத்துவோரைக் கீழ்க்கண்ட மூன்று வகையினராகப் பிரிக் கின்றது.[2]

1. எதையாவது புதிதாகத் தெரிந்து கொள்ள வேண்டும் அல்லது படிக்க வேண்டும் என்ற மனப்பான்மையினர்.

2. ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றி மட்டும் மிக விரிவாகத் தெரிந்து கொள்ள விழைவோர்.

3. ஒரு துறை அறிவை விளக்கமாக அதாவது ஒரு பொருளின் திட்ப நுட்பங்களை மிக ஆழ்ந்து அறிய மற்றும் ஆராய-விரும்புவோர்.

பிரித்தானியக் கலைக்களஞ்சியத்தின் இப்பகுப்புப் பொதுவாக ஏற்றுக் கொள்ளக்கூடியது என்றாலும், தமிழ் நாட்டின் நுகர்வோர் பரப்பு, தன்மை, தேவை ஆகியனவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். உயர் ஆய்வுகள் மேலோங்கியுள்ள நாடுகளுக்கும் உயர் கல்வி வளரத் தொடங்கியுள்ள நாடுகளுக்கும் வேறுபாடுகள் உள. தமிழகத்தைப் பொறுத்தவரை பொது அறிவு, துறையறிவு, அறிவு வளர்ச்சியின் தொடர்ந்த தேவைகள் ஆகியன படிப்போர் முன் நிற்கின்றன.

1. 1. 1. 3. ஒப்புநோக்கீட்டு நூல்கள் நூலகங்களில் மட்டுமே பெரிதும் காணப்படக்கூடியன. ஒப்பு நோக்கீட்டு நூல்களைப் படிப்போர்க்கு அறிமுகப்படுத்துவதில் நூலகரின் பங்கும் பெரியது. ஒரு நல்ல நூலகர் மட்டுமே, பல்வேறு வகையான ஒப்புநோக்கீட்டு நூல்களில், படிப்போர்க்குத் தேவையான நூலை அறிமுகப்படுத்த முடியும்.

1. 1. 2. புதிய கலைக்களஞ்சிய உருவாக்கத்திற்கு உந்துதலாக, உருவான கலைக்களஞ்சியங்களிலிருந்து குறிப்புகள்சேர்த்தல் அல்லது ஒரு கலைக்களஞ்சியத்தை உருவாக்கும் பதிப்புக்குழு, பயன்படுத்தும் நுகர்வோன், மற்றும் அறிமுகப்படுத்தும் நல்ல நூலகன் என்ற மூன்று நிலைகளிலிருந்து உருவான கண்ணோட்டத்துடன் ஆராயும் போதுதான் கலைக்களஞ்சியப் பணி வெற்றி பெற்றதாகின்றது. இத்தன்மையிலேயே சில குறிப்புகள் இக் கட்டுரையில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

1. 1. 2. 1. மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று நிலையினருள், இரண்டாம் நிலையினரான பயன்படுத்தும் நுகர்வோரே அடிப்படையில் முக்கியமானவர். இவரோடு, பதிப்புக்குழு நேரடியாகத் தொடர்பு கொண்டாலும், மறைமுகமாக முக்கியப் பங்கேற்பவர் கட்டுரையாளரே ஆவார். கலைக்களஞ்சிய உருவாக்கத்தில் கட்டுரை என்பதே கவனம் செலுத்தப்படவேண்டியமையமாகும்.

2. கலைக்களஞ்சிய உருவாக்கம் பற்றிய அடிப்படை குறிப்புகளைக் கீழ்க்கண்ட மூன்று பெரும் பிரிவுகளாகப்

பிரிக்கலாம். இப்பிரிவுகள் தனித்து இயங்கக் கூடியன என்பதல்ல; ஒன்றோடொன்று இயைந்தே இயங்குவன. குறிப்பிட்ட சில செய்திகள் மூன்று பிரிவுகளிலும் நோக்கத்தக்கன.

அ. பொதுச் செய்திகள்: கலைக்களஞ்சியம் பதிப்பாக்கம் பற்றியன

ஆ. சிறப்புச் செய்திகள்: கட்டுரையாக்கம் பற்றியன

இ. வடிவச் செய்திகள்; உருவ அமைப்பு பற்றியன

பொதுச் செய்திகள் : கலைக்களஞ்சியப் பதிப்பாக்கம்

2. 1. ஒரு கலைக்களஞ்சியத்தைப் படிக்கும்போதோ அல்லது வாங்கும் போதோ அதன் உரிதிறன் அமைவே முதலில் நோக்கப் படுகின்றது. 'பிரித்தானிகா' என்ற சொல்லே உரிதிறன் அமைவின் சான்றுச் சொல்லாக அமைந்து விட்டதல்லவா? இவ்வுரிதிறன்அமைவு அ) வெளியிடுவோர், ஆ) பதிப்பாசிரியர்/பதிப்புக்குழு, மற்றும் இ) கட்டுரையாளர் என்ற மூன்று நிலைகளில் சோதித்து அறியப்படும்.

2. 1. 1. வெளியிடுவோர்: கலைக்களஞ்சியம் போன்ற நுண்மான் நுழைபுலத்தொகுப்பை - படைப்பை - வெளியிடுதல், ஒரு நாடு தன் அயல் நாட்டுக் கொள்கை அல்லது வரவு செலவுத் திட்டத்தை வெளியிடுவதற்கு ஒப்பானது. எனவே மிக விழிப்பான, கூர்மையான இப்பணி, கொள்கைப் பதிவுடைய நிறுவனங்களாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். காரணம், படிப்போர் குறிப்பிட்ட இன்னார்தம் வெளியீடு என்னும் போது, நம்பி, தம் ஆய்வின் வழிகாட்டியாக மேற்கொள்வதைக் காண்கின்றோம். எனவே i) கலைக்களஞ்சியப் பதிப்புக் குழுவினர் பணியானாலும் ii) கட்டுரைக் கொடையாளர்தம் பணியானாலும் அவர்தம் உரிதிறன் நன்கு சோதித்து அறியப்பட வேண்டும்.

2. 1. 2. பதிப்பாசிரியர்/பதிப்புக்குழு: கலைக்களஞ்சியப் பதிப்புப் பணி" கட்டுரையாளர் அனுப்பிய கட்டுரைகளைத் தொகுத்து,

அகர நிரல்படி இருக்கிறதா என வெறும் மேற்பார்வை செய்து வெளியிடும் சாதாரண எளிய பணியன்று. ஒரு கட்டுரையின் பொறுப்பை தனியொரு கட்டுரையாளர் ஏற்றாலும், ஒட்டு மொத்தமாக அனைத்துக் கட்டுரைகளின் குறை நிறைகளை ஏற்க வேண்டிய பொறுப்புப் பதிப்புக் குழுவையே சாரும். எனவே, கலைக்களஞ்சிய ஆக்கத்தின் ஒவ்வொரு கட்டத்திலும், நிலையிலும் பங்கேற்க வேண்டிய பொறுப்பு, பதிப்புக் குழுவிற்கு உண்டு. கலைக்களஞ்சியம் வெறும் மெய்மைகளின் தொகுப்பு நூலன்று. வெறும் மெய்மைகள் மட்டுமே ஒரு கருத்தைப் புரிய வைத்து விடும் என்று கூற முடியாது. மிகுதியான செய்திகளைக் கூறிவிடுதல் மட்டுமே கல்வியுமாகாது.[3] எனவே, மெய்மைகளின் வழி, படிப்போரை உண்மைக்கு இட்டுச் செல்வதும், அவ்வுண்மைகளும் - இதுதான் இறுதியான உண்மை என்று இல்லாமல் - படிப்போனின் ஆய்வை கூர்மைப் படுத்துவனவாக அமைவதும், கல்வியின் - கலைக்களஞ்சியப் படிப்பின் - பயன் ஆகும்.

கலைக்களஞ்சியம் வெறும் கடந்த கால வளர்ச்சிகளின் தொகுப்பன்று. அது, உலகில் அவ்வப்போது உருவாகும் அனைத்துத் துறைகளையும் ஏற்றுக் கொள்ளும்; 'இப்பி' முதல் 'வானமண்டல வாழ்வாய்வு' வரை விளக்கமுடையதாக இருக்கும்.

பதிப்புக் குழுவின் தொடர்ந்த மேற்பார்வைக்குரிய, ஒரே சமமான நிலையான திட்டப்போக்குடைய கலைக்களஞ்சியப் பதிப்புப் பணி கீழ்க்கண்ட நான்கு முக்கிய நிலைகளில் வளரக் கூடியதாகும்.

1. கலைக்களஞ்சிய வகை அல்லது படிப்போர் நிலை
2. பதிப்பு விழிப்புணர்வு
3. கட்டுரைத் துணை உறுப்புகள்
4. அமைப்பு

**2. 1. 2. 1. கலைக்களஞ்சிய வகை அல்லது படிப்போர் நிலை:** கலைக்களஞ்சியம் எந்த வகையைச்சார்ந்தது அல்லது

எத்தன்மையான படிப்போரை உடையது என்பது முதலிலேயே தெளிவு படுத்தப்பட வேண்டும். கலைக்களஞ்சியங்களைப் புல அடிப்படையிலும், செயற்பாட்டு அடிப்படையிலும் பகுக்கலாம்.

1. புல அடிப்படை

1. கலையியல் கலைக்களஞ்சியம்
2. சமூக அறிவியல் கலைக்களஞ்சியம்
3. அறிவியல் கலைக்களஞ்சியம்

(அல்லது)

1. அறிவியல் கலைக்களஞ்சியம்
2. சமூக அறிவியல் (கலையியலை உள்ளடக்கி) கலைக் களஞ்சியம்

2. செயற்பாட்டு அடிப்படை

அ) உலூயிசு சோரியின் பகுப்பு[4]

1. Comprehensive adult
2. Popular adult
3. Adult in one volume
4. School alphabetical and classified
5. Foreign

ஆ) பிரித்தானிகாவின் பகுப்பு[5]

1. General Encyclopaedia
2 Encyclopaedia Dictionary
3. The Modern Encyclopaedia
4 Encyclopaedias for Special interest
5. Children Encyclopaedia
6. Specialized Encyclopaedia
7. Encyclopaedia of Countries and Regions

இ) வ. செயதேவன பகுப்பு[6]

1. General Encyclopaedia

    1. Thesaurus Encyclopaedias

    2. Propagandist Encyclopaedias

2. Restricted or Special Encyclopaedias

    1. Thesaurus Encyclopaedias.

    2. Propagandist Encyclopaedias

கலைக்களஞ்சிய வகைப்பாட்டில் மேற்கண்ட தெளிவு இருக்கும் போது மட்டுமே, கட்டுரை தொகுத்தல் பணி செம்மையுறும்; முழுமையுறும்.

2.1.2.2. பதிப்பு விழிப்புணர்வு

பதிப்பு விழிப்புணர்வு என்பது ஒரு பொதுமையான சொல் லாகும். தமிழைப் பொறுத்தவரை, மிகுதியான கலைக்களஞ்சி யங்கள் முன்பே வெளியிடப்படவில்லையென்றாலும், இதுவரை வெளிவந்துள்ள கலைக்களஞ்சியங்கள் பற்றிய ஆய்வு தேவைப் படுகின்றது. அந்நிலையிலேயே பழைய கலைக்களஞ்சியங்களின் சிறப்பைப் புதிய கலைக்களஞ்சியங்கள் உள்ளடக்கி வருவதோடு பழைய தவறுகள் தவிர்க்கப்பட முடியும்[7].

1. தெளிவு: ஆர்வமும் மதிநுட்பமும் அதே சமயத்தில் ஒரு துறையில் வல்லுநராக இல்லாத தன்மையிலும் உள்ள ஒருவர், விரும்பிப் பயன்படுத்தக்கூடிய வகையில் அமையவேண்டும் என்பதே 'தெளிவு' என்பதன் கருத்தாகும். கலைக்களஞ்சியம், துறைவல்லான் ஒருவனின் முழுத் தேவையையும் நிறைவு செய்யாது; அதே சமயம், ஒரு தலைப்பில் அதன் பொதுவான செய்திகளைத் தருவதோடு, அதன் முழுத் தேவைகளை நிறைவு செய்யும் வழியை ஆற்றுப்படுத்தும். விளக்கப்படாத பல மெய்மைகளுக்குப் பதிலாக, விளக்கப்பட்ட சில மெய்மைகளைக் கொண்டிருக்கும் ஒரு நுட்பமான 'தலைப்பு' என்றாலும் அது

அத்துறை வல்லானுக்கு மட்டுமே முழுதும் புரியும் என்றாலும் பொது வாசகனுக்கு உட்கருத்தாவது புரியத்தக்க வகையில் அமைந்திருக்கும்.

2. உள்ளொழுங்கமைவும் தொடர் ஒருங்கமைவும்: அறிவு வட்டத்தின் முழுமையைப் படைக்கவேண்டிய கலைக்களஞ்சியம், தான் பெற்றிருக்கும் கட்டுரைகளின் தன்மை அடிப்படையில் நிலைத்த மதிப்பு உடையதாகவும் படிப்போனுக்குத் தொடர்ந்து கட்டுரைகளைப் படிக்க வேண்டும் என்ற உணர்ச்சி ஏற்படும் படியாகவும் ஒவ்வொரு கட்டுரையும் அதன் செய்திகளால் பொருத்தம் உடையதாகவும் அமைய வேண்டும். உறவுடைய தலைப்புகளின் ஒவ்வொரு பகுதியும் முழுமையாக விளக்கப்படுவ தோடு இத்தலைப்புகளின் உறவு, படிப்போனுக்குத் தெளிவாக விளங்கும்படியும் கட்டுரைகள் அமைய வேண்டும்.

3. கூறியவை கூறலும் கூறியவை சிதைவும்: ஒரு குறிப்பிட்ட தலைப்பு, பல்வேறு சூழ்நிலைகளில் அல்லது இடங்களில் விளக்கப் படவேண்டி வரும் போது கூறியவை கூறலாக இல்லாமல் அதே சமயத்தில் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு செய்தி எனச் சிதை வுறாமல் இருக்க வேண்டும். மேலும் ஏதேனும் ஒரு இடத்தில் அதன் தலைமைச் செய்திகள் விளக்கப்பட்டு பிற இடங்களில் அதன் துணைக் கூறுகள் விளக்கப்படலாம். தலைப்புகளின் பொருள் தொடர்பும் எல்லையும் பற்றிய முன் கூட்டிய திட்டம் இக்குறையைத் தவிர்க்கக்கூடும்.

4. புறவயம் மற்றும் நடுநிலைமை: இவ்வுணர்வு பதிப் பாளர்க்கு வேண்டிய இன்றியமையா உணர்வாகும். ஒரு குறிப் பிட்ட தலைப்பை ஒரு கல்வியியலாளன் எழுதுவதற்கும் ஒரு அரசி யல்வாதி எழுதுவதற்கும் வேறுபாடு உண்டு[8]. மேலும், நாட்டுக்கு நாடு, ஒரு நாட்டுக்குள்ளேயே சார்புக்குச் சார்பு வேறுபாடுகள் உள. அண்மைக்கால ஆப்கானிஸ்தான் வரலாற்றைக் குறிப்பிட்டு எழுத வரும் போது ரஷிய, அமெரிக்க ஆசிரியர்கள் தம் கருத்து ஒன்றாயிருக்க முடியாது. ஏன், ஆப்கானிய ஆசிரியர்களுக் குள்ளேயேகூட ஒருமை இருக்க முடியாது. இதில் நடுநிலைமை

வகிக்க பதிப்புக் குழு முனைய வேண்டும். நடுநிலைமை என்பது செய்திகளைப் புறக்கணிப்பதல்ல. புறவயத்தன்மையோடு செயல் படுவது.

5. உலகக் கண்ணோட்டம்; ஒரு கலைக் களஞ்சியம் ஒரு குறிப் பிட்ட பகுதிக்கான மொழியில் உருவாக்கப்பட்டாலும் அதன் பண்பு உலகம் தழுவியதாக அமைய வேண்டும். வாழும் அல்லது இறந்த மனிதர்கள், தலைமை தாங்கும் அல்லது தலைமையற்ற கொள் கைகள் மற்றும் தன் விருப்பங்கள் என்ற அடிப்படையில் இல்லாமல் 'உலகன்' என்ற ஒருவனுக்கு, அவன் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் எழுதப்படுகிறது என்ற உணர்வோடு உருவாக்கப்பட வேண்டும்.

6. சிறந்தோர் வரலாறு, இடப்பெயர் மற்றும் ஆள் பெயர்: கலைக்களஞ்சியத்தில் சிறந்தோர் வரலாறு இடம் பெற வேண்டுமா என்பது முதலில் தீர்க்கப்பட்டாக வேண்டும். சிறந்தோர் வரலரற்றுக் கலைக்களஞ்சியம் என்ற ஒன்று வெளியிடப் படுவதுதேவையா என்பதும், அந்நிலையில் பொதுக்களஞ்சியத்தில் சிறந்தோர் வரலாறு இடம் பெற வேண்டுமா என்பதும் முதலி லேயே திட்டமிடப்படவேண்டும்[9]. சிறந்தோர் என்பதற்கான வரையறைகளும் திட்டமிடப்படவேண்டும். இவ்வகையிலேயே இடப்பெயர் மற்றும் ஆள் பெயர்களைக் குறிப்பிடுவது தொடர் பான முன்திட்டம் தேவை. அவ்வந்நாடுகளில் வழங்குவது போல கையாள்வதா அல்லது வேறு எவ்வகையில் கையாள்வது என்பது திட்டமிடப் படவேண்டும்.

7. மொழி பெயர்ப்பு மற்றும் ஒலி பெயர்ப்பு: இது மொழித் தொடர்பான சிக்கல்.

8. மொழி: எந்த மொழியில் கலைக்களஞ்சியம் வெளியிடுகி றோம் என்பது அடிப்படைச்சிக்கல்களுள் ஒன்றாகும். தமிழ்க் கலைக்களஞ்சியத் தொகுப்பின்போது முதல் ஐந்தாண்டுக்காலம்

கலைச் சொல்லாக்கம், தமிழில் கருத்துக்களைச் சொல்லுதல், மொழி&ஒலி பெயர்ப்பு முறைகள் போன்றவையே கருதப்பட்டமை கருதத்தக்கது.[10]

9. நடை: இதுவும் மொழியை ஒட்டிய சிக்கலாகும். குறிப்பிட்ட வகையைச் சார்ந்த கலைக்களஞ்சியம் நடை, மற்றொன்றினின்று வேறுபட்டே அமையும். ஆனால், ஒரு பொதுவான கலைக் களஞ்சியத்தின் நடை எப்படியிருக்க வேண்டும் என்பதே வினா. பல புலங்களைச் சார்ந்த பல அறிஞர்கள் எழுதும் கட்டுரைகள் உறுதியாக நடையால் வேறுபட்டே இருக்கும் என்றாலும், ஒரு பொதுத்தன்மைக்கு உட்பட்டும் இருக்க முடியும். அப்பொதுத் தன்மைகள் யாவை என்பதை விளக்கும் வகையில் 'களஞ்சிய நடை, உருவாக்கப்பட வேண்டும் அறிவியல் கட்டுரைகளின் நடை பிறவற்றினின்று வேறுபட்டே இருக்கும் என்றாலும், கலைக் களஞ்சியக் கட்டுரையாக வரும்போது, அது சில பொதுக் கூறுகளுக்கு உட்பட்டும் இருக்க முடியும், தமிழைப் பொறுத்தவரை எல்லோர்க்கும் புரியக்கூடிய, கொச்சையற்ற, மிகப்பழமைசாராத, இக்கால, மேம்படுத்தப்பட்ட தமிழ்நடையை உருவாக்க முடியும்; பின்பற்றமுடியும்.

10. முழுமை: அறிவுவட்டத்தின் 360 புள்ளிகளும் இன்றியமையாதன. கலைக்களஞ்சியத்தின் ஒவ்வொரு கட்டுரையும் சிறப்பின. களஞ்சியத்தின் ஏதேனும் ஒரு இடத்தில் அறிவின் கூறுகள் விளக்கப்படுவதோடு ஓரிடத்திலாவது முழுமையாக விளக்கப்பட வேண்டும்; ஒரே ஒரு இடத்தில் மட்டுமே, ஒரு பொருளின் தலைமைக் கூறு முழுமையாக விளக்கப்பட்டிருக்க வேண்டும்; ஒவ்வொரு கூறும் சம அளவில் விளக்கப்பட்டிருக்க வேண்டும்.

11. புதுப்பித்தலும் இக்காலத்தன்மையும்: தொடர்ந்து புதுப்பித்தலின் மூலம் மட்டுமே கலைக்களஞ்சியத்தின் இக்காலத்தன்மை காப்பாற்றப்பட முடியும். இணைப்புகள், ஆண்டுத் தொகுப்புகள், துண்டுத்தாள் இணைப்புகள் என பலவகைப் புதுப்பித்தல் முறைகள்

திட்டமிடப்பட வேண்டும். கலைக்களஞ்சியம் வெளியிடப்பட்ட பிறகு புதுப்பித்தல் பணி தொடங்கப்படுவது அன்று; தொடங்கப் பட்ட நிலையிலேயே புதுப்பித்தல் என்ற உணர்வு அடி மனதில் இழையோடியிருக்க வேண்டும்.

### 1. 2. 3. கட்டுரைத்துணை உறுப்புகள்

1. நூலடைவு: நோக்கம்: கட்டுரையில் சொல்லப்பட்டுள்ள பொருளை மேலும் மேலும் தெளிவாக அறியத் துணை செய்தலும், அக்கட்டுரைக்கான ஆதார மூலமாக விளங்குதலும் ஆகும்.

தன்மை: தொடர்ந்த படிப்புக்குத் துணை செய்வதாகவும், இன்னும் இது போன்ற நூலடைவுகளைத் தெரிந்து கொள்ள வழி செய்வதாகவும், அண்மைக்கால மற்றும் வரலாற்றுத் தகவல்களை உடையதாகவும் மற்றும் தலைப்புக்குப் பொருத்தமான இதழ் களைப் பரிந்துரைப்பதாகவும், நூலடைவின் தன்மை அமைய வேண்டும்[11].

முறைமை: கட்டுரையைத் தொடர்ந்து இருக்க வேண்டும். நூலின் எப்பதிப்பு ஆளப்பட்டிருப்பினும் முதற்பதிப்பாண்டு தரப்பட வேண்டும். புதுப்பிக்கும் போது இவையும் புதுப்பிக்கப்பட வேண்டும். குறிப்பமைநூலடைவாக இருத்தல் நலம். மிகக் குறைவான படிகளும், ஓரிரு நூலகங்களில் மட்டுமே இருக்கக் கூடியனவும் தவிர்க்கப்படலாம். பொதுவாக, கட்டுரையாளரே நூலடைவைத் தருதல் வேண்டும். ஆனால், பதிப்புக்குழு இந் நூலடைவைச் சரிபார்ப்பதோடு, கூட்டவும் குறைக்கவும் செய்யும்.

2. தேசப்படம், அட்டவணை மற்றும் வரைபடம்: இவை தனியே தொகுத்தளிக்கப் படுதலுக்கு மாறாக, கட்டுரைகளில் உரிய இடங்களில், கட்டுரைச் செய்திகளை நன்கு விளங்கிக் கொள்வதற்கு ஏற்ப, பொருத்தமாகப் பக்கத்திலேயே அமைக்கப் பட வேண்டும். ஆனால், அட்டவணைகளும் வரைபடங்களும் இருந்தால்தான் கட்டுரை விஞ்ஞானத்தன்மை பெறும் என்ற எண்ணத்தில், கட்டுரைச் செய்திகளைத் தேவையின்றி அட்ட வணை ஆக்கித் தரக்கூடாது.

3. சொல்லடைவு: ஒரு விஞ்ஞான பூர்வமான நூலாக்கத்தில் சொல்லடைவுகளின் பணி வெள்ளிடை மலை.

4. குறுக்கெதிர் நோக்கீடு: எல்லோரும் எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் நாமே ஒரு நெறிமுறையைப் பின்பற்ற வேண்டும்/ பின்பற்றலாம். Brockhaus என்பவர். 'see also' என்பதற்குப் பதிலாக அம்புக்குறியைப் (→) பயன் படுத்தியதைப் போல எளிய முறையை நாமே உருவாக்கலாம்.[12]

5 வழிகாட்டி நூல்: இது தனித்தொகுப்பாக வெளியிடப்பட வேண்டுமா, முதல் தொகுதியின் முதல் பகுதியாக அமைய வேண்டுமா என்பது முதலிலேயே தெளிவு படுத்தப் படவேண்டும்.

6. குறுக்கவிளக்கம், பிழைப்பட்டியல் இன்னபிற : இவற்றின் அவசியம் வெளிப்படை.

2.1.2.4. அமைப்பு: கலைக்களஞ்சியத்தில் கட்டுரைகளை அமைக்கும் தன்மை ரோமானியர் காலம் முதல் இன்று வரை அனைவராலும் ஒப்புக்கொள்ளத்தக்க அளவு இணக்கமாகஅமைய வில்லை. அகரநிரல் அமைப்போ, பொருள் நிரல் அமைப்போ, மற்றும் சொல்லடைவு, குறுக்கெதிர் நோக்கீடு போன்றவையோ ஒரு குறிப்பிட்ட நூலைத்தான் பின்பற்றி அமைக்க வேண்டும் என்பது அவசியமல்ல. தேவை, தெளிவு மற்றும் நோக்கம் ஆகியன பொறுத்து ஒவ்வொரு பதிப்புக்குழுவும், புதிய, ஆனால் எளிய வழிமுறைகளை உருவாக்கிக் கொள்ளலாம்.

2.1.3. கட்டுரையாளர்: ஒவ்வொரு கட்டுரையாளரும் அவரவர்தம் துறையில் வல்லுநராக இருப்பர். ஆனால், அவரால் எழுதப்படும் கட்டுரைகள் வெறும் வல்லுநர் குழாத்திற்கு அன்று என்ற எண்ணம் உடையவராக இருத்தல் வேண்டும். ஒரு குறிப் பிட்ட துறை சார்ந்த வல்லுநர், பிறதுறைக்கட்டுரைகளைப் படிக்கும் போது எந்த மனநிலையினராக இருப்பாரோ அதே போன்ற மனநிலையினரே, தன்மையரே தம் கட்டுரையைப்

படிப்பவரும் என்று கருத்தில் கொள்ள வேண்டும். ஒரு கட்டுரையாளர், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கட்டுரைகள் எழுதினாலும், அவர் மனதுள், ஒரு மிகப்பெரிய வழிகாட்டியாக அமைக்ககூடிய தொகுதிக்குக் கட்டுரை எழுதுகின்றோம் என்ற உணர்வுடையவராக இருக்க வேண்டும். (கட்டுரை என்ற பகுதியில் விளக்கப்படும் கருத்துக்கள் கட்டுரையாளர் தொடர்புடையனவே. காண்க).

2. 2. சிறப்புச் செய்திகள்: கட்டுரையாக்கம். பதிப்புக் குழுவின் சிறப்புக் கட்டுரையாளரின் சிறப்பு ஆகிய அனைத்தும் கட்டுரைகளைப் பொறுத்தே அமைவன. ஒரு கலைக்களஞ்சியத்தின் உயிர் கட்டுரையே. கலைக்களஞ்சியக் கட்டுரைகள் இவ்வகையில் பல்வேறு கலைக்களஞ்சியப் பொருண்மைத் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

1. உரிதிறன்: ஒரு கட்டுரை, அது சார்ந்துள்ள துறையின் வல்லுநரால் எழுதப்பட்டதாக இருக்க வேண்டும்; அதே தலைப்பிலான நூலுக்கும், ஆய்வுக்கட்டுரைக்கும் இடைப்பட்டு நின்று கலைக்களஞ்சியத்திற்கே உரிய திறன் பெற்றிருக்க வேண்டும்.

2. விரிவு அல்லது முழுமை: விரிவு என்பது பக்கங்களின் மிகுதி அல்ல. குறிப்பிட்ட ஒரு தலைப்பில் சொல்லப்பட வேண்டிய அனைத்துச் செய்திகளையும் சொல்லிய நிலை. இதுவே முழுமை என்று பொருள் கொள்ளப்படும். ஒரு தலைப்பில் சில கூறுகளே கூறப்பட்டிருப்பினும், அக்கூறுகள் அதற்கேற்ற முழுமை பெற்றதாக இருக்கவேண்டும்.

3. களஞ்சியச் சுருக்கம்: இங்கே சுருக்கம் என்பது தெளிவை உள்ளடக்கிய பொருட் செறிவு என்பதாம்.

4. இயைபு அல்லது உட்பொருத்தம்: ஒவ்வொரு கட்டுரையும் தலைப்பு, விளக்கம், குறுக்கெதிர் நோக்கீடு, நூலடைவு போன்ற பல்வேறு கூறுகளைக் கொண்டது. இக்கூறுகள் ஒன்றை ஒன்று சார்ந்தும், எந்நிலையிலும் முரண்படாமலும் அமைய வேண்டும்.

5. நுட்பம்: கட்டுரையில் சொல்லப்படும் செய்திகள், புள்ளி விவரங்கள், அட்டவணைகள், வரைபடங்கள் போல்வன தன்னளவில் நுட்பம் அல்லது கூர்மை உடையதாக இருக்க வேண்டும். படிப்போர் யார் ஒருவர், சரிபார்க்க விரும்பி முயன்றாலும். அவரால் பிழை காண முடியாத தன்மையில் அமைய வேண்டும். காலந்தோறும் மாறக்கூடிய விவரங்கள் தேதியிடப்பட்டு எழுதப்பட வேண்டும்.

6. தெரிதல்: எழுதப்போகும் கட்டுரைகளைத் தெரிதலும், கட்டுரைக்கான செய்திகளைத் தெரிதலும் குறிப்பிடத்தக்கன, அறிவு வட்டத்தின் முழுமையைக் காட்டுவதோடு அறிவு வட்டத்தின் ஒவ்வொரு புள்ளியும் முழுமையாக்கிக் காட்டப்பட வேண்டும்,

7. நடுநிலைமை: பழமைக்கும் புதுமைக்குமான முரண்பாடுகள் அறிவியலுக்கும் கலையியலுச்குமான முரண்பாடுகள் கிழக்கு மற்று மேற்கு நாடுகளுக்கிடையே உள்ள முரண்பாடுகள் போன்ற எந்த முரண்பாட்டுக்குள்ளும கட்டுரை சிக்கிக்கொள்ளக்கூடாது.

8. புறவயம்: நடுநிலைமையின் மேற்குறிப்பிட்ட முரண்பாடுகளில் இருந்து தப்பிக்க ஒரேவழி, கட்டுரையை அகவய உணர்வுகளின் மூலம் படைக்காமல், புறவயத் தகவல்களின் அடிப்படையில் வடித்தெடுக்க வேண்டும்.

9 நடை: கலைக்களஞ்சியப் பொதுநடைக் குறிப்புகளை ஒட்டியும், செய்திகளின் தெளிவை ஒட்டியும், படிப்போரின்-கலைக்களஞ்சியத்தின்[2]வகையை ஒட்டியும் நடை அமைக்கப்படவேண்டும்.

உரிதிறன் முதல் நடைவரை குறிப்பிடப்பட்டுள்ள இவ்வொன்பது குறிப்புகளே கட்டுரையாக்கம் பற்றிக் கருதக்கூடியன என்பதல்ல. இவை எல்லைக் கோட்டுப்படம்; அவ்வளவே நுழைத்தும் விரித்தும் விளக்கத்தக்கன விரியும்.

2.3. வடிவச் செய்திகள்: உருவ அமைப்பு: ஒரு நூல் வெளியீட்டின் வெற்றி உள்ளடக்கத்தால்தான் என்றாலும், கலைக்களஞ்சிய வெளியீட்டைப் பொறுத்தவரை உருவஅடக்கத்தைப் பற்றியும் கவனிக்க வேண்டும்.

2. 3. 1. பொதுத்தோற்றம்: தாள், அச்சு, மை, அச்சாகும் முறை, பக்கங்களுள் செய்திகள் பிரித்துப் போடப்பட்டுள்ள தன்மை; தலைப்பு வரிகள், விளக்க வரிகள், குறுக்கெதிர் நோக்கீடுகளின் வரிகள்; மற்றும் நூலடைவுகளின் வரிகள் ஆகியவற்றின் அச்சமைப்பு வேறுபாடு; ஒவ்வொரு பக்கத்தின் முதல் இறுதிச் சொற்களின் அகர நிரல் பொருத்தம் ஆகிய பலவும் கவனிக்கப்பட வேண்டியன.

2. 3. 2. கட்டமைப்பு: உறுதியான அட்டை, சமமான முதுகுத்தண்டு, தொகுதி எண் தெளிவு, தலைப்புச் சுருக்கக்குறியீட்டுத் தெளிவு மற்றும் பொருத்தம் ஆகியன தெளிவுற்றிருக்க வேண்டும்.

2. 3. 3. முக்கிய கவனத்திற்குரியன: பிற்சேர்க்கைகள், துணைத் தொகுதிகள், பிழைபட்டியல், துண்டு இணைப்புத்தாள்கள், சுருக்கக்குறியீட்டு விளக்கங்கள் மற்றும் இன்னபிற அனைத்து முக்கியப் பகுதிகளும் கவனத்திற்குரியனவே.

3. 1. கலைக்களஞ்சியப்பணி தொடர்ந்து நடைபெற வேண்டிய பணி என முன்பே கண்டோம். குறிப்பிட்ட ஆண்டுக்குள் முடித்துவிடக்கூடிய பணியாக இது கருதப்படுமேயானால் பல மெய்மைப் பிழைகள் தோன்ற வாய்ப்புண்டு. எனவே புதுப்பிக்கப்பட்ட தொகுதிகளைப் பல ஆண்டுத்திட்டங்களில் வெளிக்கொணரும்போதே, ஆண்டுதோறும் பல வழிகளில், புதுப்பித்துக்கொண்டே இருக்கும்போதுதான், கலைக்களஞ்சியத்தின் இக்காலத்தன்மை, காப்பாற்றப்பட முடியும்.

3. 1. 1. துண்டுத்தாள் இணைப்பு: ஒரு தொகுதி உருவாகும் போதே விடப்பட்ட செய்திகளடங்கிய துண்டுத்தாள்கள், அத் தொகுதிகளில் உரிய பக்கங்களில் இணைக்கப்படலாம்.

3. 1. 2. பிற்சேர்க்கை இணைப்பு: குறிப்பிட்ட தொகுதிகள் யாவும் வெளியிடப்பட்டபின், பிற்சேர்க்கையாக ஒரு தொகுதி

அல்லது சில தொகுதிகள் வெளியிடப்படுவது பொதுவான முறையாகும்.

3. 1. 3. ஆண்டுத்தொகுப்பு: ஒவ்வோராண்டு இறுதியிலும், அவ்வாண்டில் உருவான அனைத்துத் துறை நுட்பங்களையும், செய்திகளையும் இணைத்து, ஆண்டுத் தொகுப்புகள் வெளியிடல் பலபுகழ் பெற்ற கலைக்களஞ்சிய நிறுவனங்கள் பின்பற்றி வரும் வழியாகும்.

3. 2. கலைக்களஞ்சியத்தின் பயன் வெளிப்படை ஆனால், கலைக்களஞ்சிய உருவாக்கப் பணியோ மிகவும் சிக்கலானது. அகராதிப் பணியின் அருமை குறித்து செகுஸ்தா என்பவர் இரண்டு பேராசிரியர்களின் கருத்துக்களை முன்னுரையிலும் முடிவுரையிலும் மேற்கோளாகக் காட்டியுள்ளார். அவை: 1) கிரிமினல் குற்றவாளிகளைத் தூக்கிலிடுதல் மற்றும் கடின உழைப்பில் ஈடுபடுத்தலுக்கு மாறாக அவர்களை அகராதித் தொகுப்புப் பணியில் ஈடுபடுத்தி விடலாம். காரணம், அப்பணி எல்லாவித துன்புறுத்தல்களையும் கொண்டதாகும்[13]; ii) அகராதிப் பணியை விட மிகுதியான மகிழ்ச்சியளிக்கக்கூடிய வேறு அறிவுத் துறைப் பணியை நான் காணவில்லை. ஒவ்வொரு நாளும் மிகச் சிறிய கடினமான சிக்கலை அணுகுவதும், பின்னர் நாளிறுதியில் மெத்தச் சோர்வடைவதும் என இப்பணி இருப்பினும், ஒவ்வொரு நாளும், பணியின் ஏதோ ஒரு பகுதி முடிந்தது என்றும், முழுமையை நோக்கிச் செல்கின்றது என்றும் நிறைவடையத் தக்கதாக இருக்கிறது.[14] அகராதிப் பணிக்குக் கூறப்பட்ட இப் புகழ் மற்றும் இகழுரை கலைக்களஞ்சியப் பணிக்கு மட்டுமல்ல, எந்தத் தொகுப்பியல் பணிக்கும் பொருந்துவதாகும்.

*Notes*

1. தி.சு. அவினாசிலிங்கம், கலைக்களஞ்சியம் (முன் மாதிரிப் படிவம்), முகவுரை.
2. Encyclopaedia Britanica, Propaedia, P xiv
3. ———— ————, P.viii
4. Louis Shores, Basic Reference Sources, P.57.
5. Encyclopaedia Britanica (Macro), vol. 6, P.780.
6. V. Jayadevan, A Survery of Encyclopaedias in Tamil mass.
7. எண்கள் 2.1.2.2. மற்றும் 2.2. ஆகிய பகுதிகளில் உள்ள கருத்துக்கள், நூலடைவில் உள்ள பல நூல்களில் இருந்தும் தொகுக்கப்பட்டவையாகும்; பிழிவாகும். ஆனால், அவை அப்பட்டமாக அப்படியே தரப்படாமல், கட்டுரையாளரின் திறனாய்வுக்குட்படுத்தப்பட்டு, இங்கே தலைப்புக்கு ஏற்ற வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.
8. Encyclopaedia Britanica (Macro.), vol. 6, P.786.
9. International Encyclopaedia of the Social Sciences, vol. I, PP.xxiv—xxv.
10. பெ. தூரன், கலைக்களஞ்சியம், முன்னுரை
11. International Encyclopaedia of the Social Sciences, vol. I, P.xxviii.
12. Encyclopaedia Britanica (Macro.), vol. 6, P 785
13. Ladislav Zgusta, A Manual of Lex cography, P. 15
14. ————, P. 357

*Select Bibliography*

1. Encyclopaedia of Library and Information Service, Vol. 26. New York, Marcell Dekker, INC., 1979.

2. Goetz, Philip W. (Ed.), Encyclopaedia of Britanica Propaedia and Vol. 6 (Maero). Chicago, Helen Hemingway Bentcn, 1981. Edn. 15.

3. Jayadevan, V. A Survey of the Encyclopaedias in Tamil (Mass. submitted to 'Annals of oriental Research) Madras, University of Madras, 1981.

4. Roberts, A. D. Introduction to Reference Books. London, The Library Association, 1949.

5. Shores, Louis, Basic Reference Sources. Chicago, American Library Association, 1954.

6. Sills, David L., (Ed.), International Encyclopaedia of The Social Sciences, Vol. I. London, The Macmillon Company and the Free Press, 1968.

7. Winche l, Constance M., Guide to Reference Books, Chicage, American Library Association, 1951.

8. Zgusta, Ladislav, et al., A Manual of Leocicography. Mouton, 1971.

9. அவினாசிலிங்கம், தி. சு., கலைக்களஞ்சியம் (முன்மாதிரிப் படிவம்). சென்னை, தமிழ்வளர்ச்சிக்கழகம், 1948.

10. தூரன், பெ., கலைக்களஞ்சியம், தொகுதி 1. சென்னை, தமிழ்வளர்ச்சிக் கழகம், 1954.

மொழியியல் 6.4 (1983.

# கல்வெட்டுத் தமிழ் — சில கூறுகள்.

இரா. பாக்கியலட்சுமி

இந்தியமொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்

முதன் முதலில் வீரர்கள் இறந்து பட்ட இடங்களில் நடப் பட்ட கற்களில் அவர்கள் புரிந்த வீரச்செயல்கள் பொறிக்கப்பட்டன, இவற்றை நாம் தொல்காப்பிய, சிலப்பதிகாரச் செய்திகளின் மூலம் அறிவோம். இதன் தொடர்ச்சியே கோயிற் சுவர்களிலும் மலைக் குகைகளிலும் நாம்காணும் கல்வெட்டுகள். இக்கோயிற்க ல்வெட் டுகளில் தெய்வங்களுக்குக் கொடுத்த நிவந்தங்களும் அதனை நடாத்தும் முறையும் வெட்டப்பட்டு அதில் தவறினால் அடையும் பாபங்களும் வெட்டப்பட்டுள்ளன. கல்வெட்டுகளில் செய்திகளை பொதுவாக ஐந்து பகுதியாகப் பிரித்துள்ளனர். அவை மங்கல வாசகம், சாசன காலம், சாசனச் செய்திகள், கையெழுத்துகள், ஓம் படைக் கிளவி என்பன. (சதாசிவபண்டாரத்தார், 1977) இம் முறையே கர்நாடக மாவட்ட தமிழ் கல்வெட்டுகளிலும் காணப் படுகின்றன.

கல்வெட்டுமொழி இலக்கியமொழி நடையினின்றும் பேச்சு வழக்கினின்றும் மாறுபட்டமொழி அமைப்புகளைக்கொண்டுள்ளது. பெரும்பாலும் கல்வெட்டுகளில் காணப்படும் மொழி எழுத்துப் பிழைகளோடும் பல்வேறு உச்சரிப்பு முறைகளுக்கு ஏற்றபடியும், பேச்சுமொழி கலந்தும் அமைந்துள்ளன. அக்காலத்தில் சாசன எழுத்துகளை வெட்டுபவர்களின் கல்வியறிவில்லாமை மேலும் சில பிழைகளுக்கு வழிவகுத்துள்ளன. எனினும் அப்பிழைகள் இவ் வாய்வினின்றும் மாறுபட்டவையே,

கர்நாடகத்தில் கிடைத்த தமிழ் கல்வெட்டுகளில் (Rice 1905) எழுத்துகள், சொல்வேறுபாடுகள், கூட்டெழுத்துகள், புணர்ச்சி, பேச்சுத்தமிழ் சொற்கள், வடமொழிச்சொல் தமிழாக்கம், கன்னடச் சொற்கள் போன்ற பல கூறுபாடுகளை எடுத்துக் கூறுவது இக் கட்டுரையின் நோக்கம். சாசனத்தமிழ் கிரந்தமும் தமிழும் கலந் தவை. சில சோழர்காலக் கர்நாடக கல்வெட்டுகள் தமிழ்மொழியி லேயே சிறப்பாக பொறிக்கப்பட்டுளன.

கர்நாடகக் கல்வெட்டுகளில் காணப்படுகின்ற ஒரு சில மாதங் களின் பெயர்களும் பிறசொற்களும் தற்கால எழுத்து முறையினை ஒத்து எழுத்து மாற்றங்களுடன் வெட்டப்பட்டுள்ளன. இவற்றில் உயிர் எழுத்துகளின் மாற்றங்களை முதலில் காணலாம்.
[அடைப்புக்குள் கொடுக்கப்பட்ட எண்களில் முதல் எண்கல் வெட்டுகள் எண்ணெயும் இரண்டாவது கல்வெட்டுகளின் வரி எண்ணையும் குறிக்கின்றன. மூன்று எண்கள் கொடுக்கப் பட்டிருப்பின், இரண்டாம் எண் பத்தியெண்ணையும் மூன்றாம் எண் வரியெண்ணையும் குறிக்கின்றன.]

1. அ~இ

a. ஐப்பசி (45 1)

ஐப்பிசி 102-1)

b. நாயற்றுக் கிழமை (27-14)

2. இ~உ

பங்கிநி (96-2, 169-10)

பங்குனி (55-1-2)

4. ஐ~எ

னாயற்றுக் கிழமை (8-2-2) a. வைகாசி (82-1)

3. அ~எ வெகா சி (71-3)

a. கங்கை (49-6, 40a-2) b. கங்கை (49-6, 40a-2)

கெங்கை (203-35, 70-21) கெங்கெ (27-29)

b. கவாரநாடு (55-16) c. கைய்வாரநாடு (26-2)

கெவாரநாடு (48-5) கெவார நாடு (48-5)

மேலே கூறப்பட்டுள்ள உயிர் எழுத்துகளில் ஐப்பசி என்னும் சொல்லில் உள்ள அகர உயிர் ஐப்பிசி என்று இகர உயிராக சொல்லின் இடையில் மாற்றம் பெற்றிருக்கின்றது. 'பங்கிநி' என்னும் சொல்லின் இடையில் இகர உயிர் 'பங்குனி' என்று உகரமாக மாறியிருக்கின்றது. இது போன்றே 'கங்கை' 'கெங்கை' யாகவும் 'கவாரநாடு' 'கெவார நாடாகவும்', 'வைகாசி' 'வெகாசி' யாகவும் 'கைய்வாரநாடு' என்பது 'கெவார நாடு' என்றும் உயிர் மாற்றம் பெற்றுள்ளன. இவையெல்லாம் மொழி முதல் மாற்றங்களே. 'கங்கை' என்னும் சொல் 'கெங்கெ' என்று மாற்றம் பெற்றுள்ளதன் மூலம் மொழி முதலிலும் மொழி இறுதியிலும் உயிர் மாற்றம் காணலாம்.

இது போன்றே உயிர்மெய் எழுத்துக்களிலும் மொழிமுதல், இடை, கடையிலும் மாற்றங்களைக் காணலாம்.

ஞ~ந மாறுபாடுகள்

1. ஞயிற்றுக் கிழமை (8-2-2)
   நாயற்றுக் கிழமை (27 - 14, 42 a -7, 93 - 6)
2. ஞகன் (40 a - 2)
   நாகன் (40 a - 1)
3. ஞட்டு (82 - 1, 10 - 11)

நாட்டு (26-11)

4. ஞூல் பாலெல்லே (10-14,15)

நாற் பாலெல்லே (45-7)

5. ஞயனூர் (70-21)

நாயனூர் (126-2)

6. னந்தி (129-2)

நந்தி (120-1, 137-2)

7. னந்தா விளக்கு (40b-1)

நந்தா விளக்கு (45-4)

மேற்கூறியவை மொழி முதல் உயிர்மெய் மாற்றங்கள்.

II 1. நாஞழி (112a-8-4)

நாநாழி (106d-5, 106d-7), 112a-8-4)

2. தனிமை (54-2-2)

தநிமை (47-4)

3. இன்த (106-6)

இந்த (45-8-3)

4. ஸன்தி-(100a-4)

சந்தி-(109a113, 127-2)

போன்ற மேற்கூறிய சொற்களில் ன்கர நக்ர் இடை யெழுத்துகள் மாறுபாடு கொண்டு அமைந்துள்ளன.

1. யிறக்கிநான் (75-3)

2. தேவதாநம் (76-3)

3. வன்து (70-13)

4. ஒன்று (105-9-3,42b-13, 49b-3-3)

5. விலக்கிநவன் (28-15)
6. இதறுள் (94-1)
7. பத்தாந்தியதி (71-2)
8. முன்நோன் (107-4)
9. பின்நது (107-5)
10. பந்றி (579 2-4)
11. பிந்பு (78-5)
12. தாநம் (139-21, 186-10)
13. பந்னிரண்டு (112-9-9)

போன்ற மேற்கூறிய சொற்களுக்கு இணையான சரியான எழுத்து வடிவம் கல்வெட்டுகளில் கிடைக்கவில்லையெனினும் தற்கால எழுத்து முறைக்கு மாறுபட்டுள்ளது.

சொற்களின் இறுதியில் மாறுபடும் ன~ந வேறு பாட்டுச் சொற்கள்.

1. ஆனி (81-2)
   ஆநி (39 2, 45-3)
2. மகன் (40a-2)
   மகந் (71-2-1)
3. புவன (428-5)
   புவந (427-4)

இச்சொற்கள் சொல்லின் இறுதியில் மாற்றங்கள் பெற்று வந்துள்ளன. இது போலவே

1. கங்கநாந (76-2)
2. தென்நவந் (106-5-1)

ஆகிய சொற்கள் மொழி இடையிலும் இறுதியிலும் மாற்றங்கள் பெற்றுள்ளன.

திருமந்னி (108-1)

னம்பிமார் (100b-1-3)

னல்ல பிள்ளை (100b-1-4)

காணியாளநாய் 77-2)

பொந்நாண்டாள் (96-1)

னெல்லிகிறை (98-2)

னற்க் காலம் (176-1-2)

உள்ளந (28-12)

போவாந் (69-11)

தாநே (15b-6)

போன்ற மேற்கூறிய சொற்களையும் மொத்தமாக மொழி முதல், இடை, கடை என்ற பிரிவில் கூறிய எல்லாச் சொற்களும் அடைந்துள்ள மாற்றங்களையும் நோக்கின் அக்காலத்தில் தற்போதைய 'ந'கர 'ன'கர வேறுபாடுகள் இல்லை யென்றும் மொழி இடையிலும், இறுதியிலும் 'ந'கரம் வரக்கூடாது என்ற வழக்காறினையும், தொல்காப்பிய விதிகளையும் கடைபிடிக்கவில்லை என்பது தெரிகிறது.

ன~ண

பன்னு (71-3)

பண்ணு (71-3)

ழ~ள

சோழ (56-9)

சோள (82-1-5)

கீள் (82-1)

ல~ற

நால் பாலெல்லை (10-14, 15)

நாற்பாலெல்லை (45-7)

குரால் (27-30)

குராற் (171-16,17)

ர~ற

குராப்பசு (17-29)

குறாற்பசு (40a-2)

ம~வ

நிமந்தம் (120-2-2, 132-4)

நிவந்தம் (16-7, 120-4-1)

போன்ற பல உயிர்மெய் எழுத்துகள் மாற்றம் பெற்றுள்ளன. இச் சொற்களில் பல இரண்டு வித உயிர்மெய்களும் ஒரே கல் வெட்டில் இரண்டு வகையாகவும், பல இடங்களில் பலவகை யாகவும் பயன் படுத்தப்பட்டுள்ளன. சில சொற்களின் உயிர் மெய்கள் தற்போது நாம் கையாளும் முறைக்கு மாறுபட்டுள்ளன.

2. கூட்டெழுத்துகள் (clusters)

கூட்டெழுத்துகள் ஒரு சொல்லின் இடையில் மட்டுமே வரும். இங்குக் கர்நாடக கல்வெட்டுகளில் காணப்படுகின்ற சில கூட் டெழுத்துகள் தமிழ் மரபுக்குப் புறம்பானவை.

ய்த்த் வைய்த்து (108 9, 106a-12

ய்க்க் கைய்க்கொண்டு (106b-2)

ய்ம்ப் அய்ம்பத்தேழு (112d-3)

ஙக்க் பங்க்குநி (41-1)

ங்த்த் சுங்த்து (202-7)

ன்ந்த் நன்ந்தா விளக்கு (28-13)

போன்ற இச்சொற்களில் வரும் கூட்டொலிகள் மொழி இடையிலேயே வருகின்றன. தற்காலக் கூட்டெழுத்துகளின் முறையினின்றும் மாறுபட்டவை.

'ற்'கர மெய்க்குப்பின் வேறொரு மெய் வருவதில்லை. ஆனால் கல்வெட்டுகளில் அதிகமாக'ற்'கர மெய்க்குப்பிறகு 'க'கர மெய் வருகின்றது.

எடுத்துக்காட்டு

நிற்க்கையில் (62-5)
தெற்க்கு (100b-5,6)
நிற்க்க (101-3)
தோளிற்க் கட்டின (112d-3)
தேவற்க்கு (202-7)

3. புணர்ச்சி

புணர்ச்சி, ஒரு சொல் மற்றொரு சொல்லோடு சேரும் போது நிலைமொழி ஈற்றிலோ, வருமொழி முதலிலோ நேர்கின்ற மாற்றங் களைக் கூறுகிறது.

1. தென் + திசை — தென்திசை (21—1—2)
2. புனிதம் + திருமணி — புனிதற்றிருமணி (42b-3 2)
3. ஐந்து + அரை — ஐஞ்சரை (111-7,106d-14)
4. ஐந்து + நூற்று — ஐஞ்ஞூற்று (111-7, 106d-14)
5. பொந் + அற — பொந்நற (8—3—1)
6. தோளில் + கட்டின — தோளிற்க்கட்டின (112d-3)
7. அருள் + மொழி — அருமொழி (16-7)
8. நல்ல + எண்ணை — நற்யெண்ணை (94-17)
9. மண்டலம் + அத்து — மட்டலத்து

போன்ற மேற்கூறிய சொற்களில் தற்போதைய சந்தி முறை களினின்றும் வேறுபட்ட தவறான சந்தி முறை அமைந்துள்ளது.

4. சொல் உருவ வேறுபாடு

சொல் உருவ வேறுபாடு என்பது சாதாரணமாக இந் நாளிலும் இடத்துக்கு இடம் மாறுபடும் ஒன்றே யாகும். ஒரே சொல்லை பல ஊர்களில் பலமாதிரி உச்சரிப்பதைக் காணலாம். அதுபோலவே கோலார் மாவட்டத்தில் காணப்படும் பல கல் வெட்டுகளிலும் ஒரே சொல் பல மாதிரி எழுதப்பட்டிருக்கின்றன.

எடுத்துக்காட்டாக இங்கு சில சொற்களின் உருவ வேறுபாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

1. ஐப்பிசி (102-1)
   அற்பசி (100b-1)
   ஐபசி (55-15)
   ஐப்பசி (45-1)
   அப்பசி (18-4)

2. வையிகாசி (79 a-4,5)
   வைகாசி (82-1)
   வெகாசி (71-3)
   வைய்யாசி (12-4)
   வைய்காசி (126-2, 126-4)

3. பங்கிநி (96-2, 169-10)
   பங்க்குநி (41-1)
   பங்குனி (55-1-2)

4. தைய் (74-2, 77-1)
   தை (73-1-2, 71-3, 168-3)

5. ஆட்டி (203-5)
   ஆடி (239-4, 239-5)

6. ஆனி (81-2)
   ஆநி (39-2, 45-3)

7. காத்திகை (92-5, 54-5, 82-1-12)
   கார்த்திகை (48-2, 28-2, 99-1-2)
   கார்திகை (112a-2-6)

8 மார்கிழி (98-1)

9. நிமந்தம் (132-4, (120-2-2)
   இவந்தம் (16-7, 120-4-1)

10. நாநாழி (106d-7, 106d-4, 112a-8-5)
   நாஞழி (112a-8-4)

11. ஞயஞர் (130-2)
   நாயநார் (125-2, 429-11)
   நாயஞர் (126-2)
   இநாயஞர் (234-17)

12. சக்கிரவத்திகள் (422-5, 169a-1)
   சக்கரவத்திகள் (234-2)
   சக்ரவத்தி (239-2)

13. நஞ்சை புஞ்சை (149b-12, 13, 69-7, 171-14)
   நன்செய் புன்செய் (55-17, 18, 121-1-6, -242-9)
   நஞ்செ புஞ்செ (38-14,15)

சக்கிரவர்த்திகள் (186-1)

ஞஞ்செ புஞ்செ (10-14)
நந்ஜெயி (149a-29)

14. நாற்பாலெல்லை (49-4)
நாற்பால்லெல்லை (45-7)
நார்பாலெல்லை (47-5)
நாற்பாற்கெல்லை (45-7)
ஞல் பாலெல்லை (10-14,15)
ஞல் பால் கெக்கல்லை (101-6)
நாற் பால் எல்லை (242-10)

15. கைய்வாரநாட்டு (26-6)
கைவாரஞட்டு (39-2, 70-11)
கைவ்வாரநாட்டு 111-1, (26-11)
கயாரநாட்டு (39-4)
கெவாரநாட்டு (48-5)
கைவாரநாட்டு (49-4)
கவார நாட்டு (55-16)

16. நன்ந்தா விளக்கு (28-13)
நந்தா விளக்கு (45-4)
நுந்தா விளக்கு (42b-12)
னந்தா விளக்கு (40b-1)

17. பெம்மி செட்டி (62-7)
பெம்மணனும் (70-7
(70-1)
பம்மணனுக்கு (71-5)
வம்மிசெட்டி (39-7)

இவ்வெடுத்துக் காட்டுகளில் ஒரு சில ஒரே கல்வெட்டில் இரு வகையாகவும் சிலவற்றில் வேறு முறைகளிலும் அமைந்துள்ளன. ஒரு சொல் பல வகையாக உருவ வேறுபாடு கொண்டு வுழங்கு வதை விளக்கும் படம்.




5. பேச்சுத்தமிழ்

கல்வெட்டுகளின் மொழியினை நோக்கின் பெரும்பாலானவை பேச்சுத்தமிழும் இலக்கியத் தமிழும் கலந்த முறையிலேயே

அமைந்துள்ளன. ஒரு சில சொற்கள் எழுத்து மொழியிலும் பேச்சு மொழியிலும் நாம் எவ்வாறு புயன் படுத்துகின்றோமோ அங்ஙனமே அமைந்துள்ளன. எடுத்துக் காட்டாக

1 மாதம் (100b-1, 55-12)
மாஸம் (45-1, 39-2, 45-3, 46-3, 41 1)
மாசம் (55-1, 74-2, 77-1)

2. காத்திகை (92-5, 54-5, 82-1-12)
கார்த்திகை (48-2, 28-2, 99-1-2)

3. நாயற்றுக்கிழமை- (27-14, 27-15, 429-7, 93-6, 124b-6)
ஞயிற்றுக்கிழமை (8-2-2)

4. வைய்காசி (126-2, 126-4)
வையிகாசி (12-4)

5. தம்மம் (17-27, 28-15)
யம்மம் (99-2)

6. ஐப்பிசி (102-17)
அப்பசி (18-4)

7. சக்கிரவத்தி (427-5, 1699-1)
சக்கரவத்தி (234-2)
சக்ரவத்தி (239-2)

8. நஞ்சை புஞ்சை 69-7, 171-14, 149b-12,13)
நஞ்செ புஞ்செ (38-14,15)

9. அரமனே (101-3)

10. கை வார நாட்டு (49-4)
கவார நாட்டு (55-16)
கெவார நாட்டு (48-5)

11. கணபதி (42b-13-4)
கணவதி (111-14

போன்ற சொற்களைப் பார்க்கும் போது இவையெல்லாம் நாமும் நம் பேச்சு மொழியில்தற்போது கையாளும் சொற்க ளாகவே உள்ளன. இவைபோலவே சில சொற்றொடர்களும் முழுமையான பேச்சு வழக்கிலேயே அமைந்திருக்கின்றன.

1. 'நமக்கும் நம்முடைய ராஜ்யத்துக்கும் குறைவற நடத்தி நமக்கு அற்புதையமாக வாழ்த்தி யிருப்பது' (71-last two lines)
2. 'கெடுத்தினவன்' (44-8)
3. 'யிலங்கணம் பண்ணிநாருண்டாகில்' (45-8-3) பண்ணிநார் என்பது பேச்சு வழக்கு செய்த என்று வந்தால் அதனை எழுத்து வழக்காகக் கொள்ளலாம்.
4. 'வச்ச சந்தி விளக்கு' (7b- 2-2)

போன்ற சொற்றொடர்களின் மூலம் இக்கால சில பத்திரிகை களின் மொழிகளைப் போலவே அக்காலத்திலும் சில கல்வெட் டுகளில் பேச்சு மொழியும் சில கல்வெட்டுகளில் இலக்கியமொழியும் மாறிமாறி வந்துள்ள நிலை கண்கூடு.

'இத்தன்மத்தை அழிவு பிழை நினைச்சவன்' (38-23) என்ற சொற்றொடர் பிழையாக வந்துள்ளது.

6. வடமொழிச் சொல்லின் தமிழாக்கம்

பிறமொழிச் சொற்களைச் சிறப்பாக, வடமொழிச் சொற்க ளைத் தமிழில் பயன் படுத்தநேரின் அவை தமிழ் மரபிற்கேற்ப தமி ழாக்கம் பெற்றுப் பயன் படுத்தப்படவேண்டும் என்பது சங்ககாலந் தொட்டே இருந்து வரும் மரபாகும். அம்மரபின் வழி கல் வெட்டுத் தமிழும் வடமொழிச் சொல்லைத் தமிழாக்கம் செய்ய முயன்ற நிலை சில கல்வெட்டுகளைக் காணும்போது தெற்றெனத் தெரி கிறது.

1. தர்மம்- (25-19, 46 - 9, 45-9, 75-3)
தன்மம்-(18-25, 409-2, 47-7, 49-6, 70-21)
தம்மம்-(17-27, 28-15)
யம்மம்-(199-2)




2. சக்கரவத்திகள்-(427-5, 169அ-1)
சக்ரவத்தி -(239-2)
சக்கிர வர்த்திகள் -(186-1)

3. ஸ் வஸ்தி ஸ்ரீ -(203-1)
சுவத்திசிரி -(81-1)
சொத்திசிரி -(221-1)

4. சதுர்வெதி (95-1, 98-1, 62-6, 92-9)
சதுர்பேதி (100ஆ-1, 26-9)
சருப்பேதி (111-3, 4, 12)

5. வீரபலாழ தேவன் -(53-4)
வீரவல்லாள தேவன் (124ஆ-11, 70-2)

போன்ற மேற்கூறிய சொற்களைத் தமிழாக்கம் செய்துள்ளனர்.

7. கன்னடமொழிக் கூறுகள்

தமிழ்க் கல்வெட்டுகளிலும் கன்னட மொழிக்கூறுகள் இருப்பதைச் சில கல்வெட்டுகள் மூலம் அறியலாம். வீரவல்லாள தேவர் என்னும் பெயரினை வீரபலாழ தேவர் என்றே அவர்கள் கூறுகின்றனர். இது போன்றே தற்போதைய வழக்கில் இருக்கும் பெயர்கள் சில கல்வெட்டுப் பெயர் களுடன் ஒத்திருக்கின்றன.

நீலப்பர் (75-32, 33)
மப்பிசாற்சூரர் (64.2-3)

போன்ற பெயர்களும் கர்நாடகத்தில் மலிந்துள்ள பெயர்களே.

ஸாவிரத நானூர-1400 (60-1)

மக (94-14)-மகன்

அறுபத்த (202-3) -60

நூர (60-1) -100

மூறு (122-1)-3

நாக தேவரிகெ (61-5) - நாக தேவருக்கு

திம்ம பட்டர (60-4-1) திம்மபட்டருடைய

கொட்ட பூதானம் (61-5 கொடுத்த பூமிதானம்

பட்டரிகெ கொட்டி (60-2-2) - பட்டருக்குக் கொடுத்து

நாயகர 60-5 2) நாயகருடைய

கொப்பத்தில் (17-11) - கிராமத்தில்.

கொட்டவராகி நீவு நிம்ம (60-6-2) — கொடுத்தவராகி நீங்கள் உங்களுடைய

போன்ற மேற்கூறிய சொற்கள், சொற்றொடர்களின் மூலம் கன்னடமொழியின் தாக்கத்தினையும் நன்குணரலாம். இக் கன்னட மொழியினைத் தமிழ் கிரந்த எழுத்துகளின் மூலம் வெட்டியிருக்கிறார்கள்.

இக்கல்வெட்டுகளில் ஒரு சொல் முடிந்தபின் இன்னொரு சொல்லின் ஆரம்பமே அடுத்த வரியாக வரவேண்டும் என்ற நியதியின்றி ஒரு சொல்லை எங்கு வேண்டுமாயினும் பிரித்து வெட்டியிருக்கிறார்கள். எடுத்துக் காட்டாக, 'கெங்கை' என்ற சொல்லில் /எ/ ஒரு அடியின் முடிவாகவும் கங்கை அடுத்த அடியின் ஆரம்பமாகவும் வந்திருக்கிறது. கல்லில் இடமில்லாமல் அடுத்த அடியில் வெட்டியிருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

இக்கல்வெட்டுகள் மூலமாக நாம் அரசரின் காலம், வரலாறு, கொடை, வீரம் போன்ற பல வரலாற்றுச் செய்திகளைத் தெரிந்து கொள்ளும் பயன் ஒரு புறம் இருப்பினும் அக்கால மக்களுடைய

வாழ்க்கை முறை, அவர்கள் இறைவனிடம் கொண்ட பக்தி பாவத்தையும், நரகத்தையும் கண்டு மக்கள் பயந்த நிலையினையும் தெளிவாக அறியலாம். இத்துடன் அவர்கள் கால எழுத்துமுறை, இலக்கணம் இவற்றைத் தற்கால எழுத்துமுறை, இலக்கணம் இவற்றுடன் ஒப்பிட்டுப் பல நன்மைகளை அடைகிறோம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

துணை நூல்கள்

1. சதாசிவ பண்டாரத்தார், தி. வை. 1977. கல்வெட்டுகள் கூறும் உண்மைகள், நண்பர்கள் அச்சகம், சென்னை.

2. Rice, B. L. 1905 *Epigraphia Carnatica*, Vol. X, *Inscriptions in the Kolar District*, Part II, Bangalore: Mysore Govt. Central Press

## மாட்டுத் தரகர்கள் பயன்படுத்தும் எண்ணுப் பெயர்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வாட்ச் | (va:ṭcu) | 1/ | 10/ | 100/ | 1000/ | 10000 |
| ராயம் | (ra:yam) | 2/ | 20/ | 200/ | 2000/ | 20000 |
| உத்திரம் | (uttiram) | 3/ | 30/ | 300/ | 3000/ | 30000 |
| அற்பா | (aṛpa:) | 4/ | 40/ | 400/ | 4000/ | 40000 |
| தட்டை | (taṭṭai) | 5/ | 50/ | 500/ | 5000/ | 50000 |
| சித்தா | (citta:) | 6/ | 60/ | 600/ | 6000/ | 60000 |
| மாறம் | (ma:ṛam) | 7/ | 70/ | 700/ | 7000/ | 70000 |
| தானம் | (ta:nam) | 8/ | 80/ | 800/ | 8000/ | 80000 |
| தீசம் | (ti:cam) | 9/ | 90/ | 900/ | 9000/ | 90000 |
| வாட்சி | மேல தட்ட | 1 1/2 | 15/ | 150/ | 1500/ | 15000 |
| ராயம் | மேல தட்ட | 2 1/2 | 25/ | 250/ | 2500/ | 25000 |
| உத்திரம் | மேல தட்ட | 3 1/2 | 35/ | 350/ | 3500/ | 35000 |
| அற்பா | மேல தட்ட | 4 1/2 | 45/ | 450/ | 4500/ | 45000 |
| தட்டை | மேல தட்ட | 5 1/2 | 55/ | 550/ | 5500/ | 55000 |
| சித்தா | மேல தட்ட | 6 1/2 | 65/ | 650/ | 6500/ | 65000 |
| மாறம் | மேல தட்ட | 7 1/2 | 75/ | 750/ | 7500/ | 75000 |
| தானம் | மேல தட்ட | 8 1/2 | 85/ | 850/ | 8500/ | 85000 |
| தீசம் | மேல தட்ட | 9 1/2 | 95/ | 950/ | 9500/ | 95000 |

('தட்ட' என்ற சொல் பாதி அளவைக் குறிக்கப் பயன் படுத்தப்படுகிறது).

—தென்னாற்காடு மாவட்ட சமுதாய மொழியியல் களஆய்வுக் குறிப்புகளிலிருந்து தொகுக்கப்பட்டவை.

நன்றி : மொழியியல் துறை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

மொழியியல் 6.4 (1983

# மொழிச் செயலூக்கி: மறைந்து போன தொடர்ச் சங்கிலி

ந. நடராசபிள்ளை
இந்தியமொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்

மொழி கற்பித்தல் துறையின் வளர்ச்சி மொழி கற்றல் (acquisition) / மொழி பயிலுதல் (learning) துறையின் ஆய்வையும் முடிவையும் அடிப்படையாகக் கொள்கின்றது. கற்றல் / பயிலுதல் கற்பவரின் / பயிலுபவரின் மொழிச் செயலைச் (performance) சார்ந்திருக்கின்றது. மொழிச் செயலை அடிப்படையாகக் கொண்ட ஆய்வும் அதன் கொள்கை / கோட்பாட்டு மாற்றங்ளுமே கற்பித்தல் துறையின் வளர்ச்சிக்கு ஏணியாக அமைகின்றன.

இக்கட்டுரை தமிழை **இரண்டாம்** மொழியாக பயிலுபவர்களின் மொழித்திறனுக்கும் (competence) வளர்மொழிக்கும் (inter - language) இடையிலான தொடர்பையும் அதன் அமைப்பையும் அதனால் ஏற்படுகின்ற மொழிச் செயல் மாற்றங்களையும் ஆராய்கின்றது. இக்கட்டுரையில் இரண்டாம் மொழியாகப் பயிலுபவர்களின் மொழி

யறிவு ஆய்வுக்குட்படுத்தப்படுவதால் பயிலுதலையே எடுத்துக் கொள்கின்றது. மொழித்திறன் என்பது இங்கு மொழி பயிலுபவரின் புதையறிவும் (implicit knowledge) வெளியுணர் அறிவும் (explicit kno ledge) சேர்ந்த ஒரு கூட்டமைப்பாகும்.

வளர்மொழி

இரண்டாம் மொழி பயிலுகின்ற மாணவன் தான் பயின்ற மொழியறிவின் அளவைப் பாராமல் அதைக்கொண்டே பேச/எழுத முயலுகின்றான். இம்மொழியளவுக்கு மாணவனுக்குக் கொடுக்கப்பட்ட மொழியளவுக்கும் இடையில் நிச்சயமாக வேறுபாடு இருக்கும். இவ்வாறு மாணவன் பயில்மொழியில் பேச/எழுத முயற்சி செய்கின்ற போது இம்மொழியளவில் பயில்மொழியமைப்புகளோடு அவனுடைய தாய்மொழிக் கூறுகளும் அறிந்திருக்கின்ற மற்ற மொழிக் கூறுகளும் வேறு சில பாதிப்புக் கூறுகளால் நேர்ந்த மாற்றங்களும் இருக்கும். இம் மொழியளவே வளர் மொழி (inter language இம் மொழியறிவு மாறிக் கொண்டே இருக்கும் தன்மையைக் கொண்டிருப்பதால் இதை இடை மாறு பாட்டு மொழித்திறன் அல்லது இடை மாறுபாட்டுக் கிளைமொழி (கார்டர், 1973) என்றும் அழைக்கலாம்.

மாணவன் ஒரு மொழியைப் பயிலுகின்ற போது அவனுடைய படிப்பின் அளவைப் பல நிலைகளாகப் பிரித்துக்கொள்ளலாம். எடுத்துக் காட்டாகப் பத்துமாதக் கால படிப்பாக இருந்தால் மூன்று மாதங்கள் படித்தபிறகு அவன் மொழி அறிவின் நிலை ஆறு மாதங்களுக்குப்பிறகு, ஏழு மாதங்களுக்குப் பிறகு எனப் பல நிலைகளாகப் பிரித்துக் கொள்ளலாம். இவ்வாறு கால நிலையைப் பிரித்து கொண்டு பார்க்கும் போது ஒவ்வொரு கால நிலையின் முடிவிலும் அவன் கொண்டிருக்கின்ற மொழி அறிவின் அளவே வளர்மொழி. இந்த வளர்மொழியை அடிப்படையாகக் கொண்டே இரண்டாம் / அயல் மொழி கற்றல் / பயில்தல் ஆராயப் படவேண்டும்.

மொழிச் செயலூக்கி

பயிலுபவர் தன்னகப்படுத்திய விதிகளாலும் அவருக்கு உள்

ஞுணர்வாக நிற்கின்ற மொழியமைப்பு விதிகளாலும் மொழித்திறன் பெரும்பாலும் விளக்கப்படுகின்றது. சாம்ஸ்கியின் மொழித்திறன் மொழிச்செயல் பிரிவினை ஒரு கூற்றின் இலக்கண விளக்கத்திற்கும் அந்தக் கூற்று வெளிவருவதற்கு முன் மூளையில் நடக்கின்ற மொழியடிப்படை மாற்றங்களுக்கும் இடையேயுள்ள தொடர்பைச் சுட்டிக் காட்டியிருக்கின்றது. மொழித்திறன் மொழி பேசுபவரின்/ பயிலுபவரின் மூளையில் பதிந்திருக்கின்ற இலக்கண விதிகளால் விளக்கப்படுவது போன்று, மொழிச்செயல் அவர்கள் வெளிப் படுத்துகின்ற மொழியளவின் அடிப்படையில் விளக்கப்படுகின்றது. மொழித்திறன்தான் மொழிப் பயிலுதலுக்குத் தேவையானது என்றும் மொழிச்செயல் மொழித்திறனின் வெளித் தோற்றம் என்றும் அது ஆளுக்கு ஆள் மாறி வாலாம் என்றும் கூறப்படு கின்றது. ஆனால் இது பற்றிய ஆய்வுகள் சிறப்பாக எதுவுமே வரவில்லை என்று கூறலாம்.

ஆனால், மொழிச் செயலை விளக்க வெளிப்படுத்தப் படுகின்ற மொழியளவு மட்டும் போதாததாகின்றது, இன்னும் சில பாதிப்புக் கூறுகளும் தேவையாகின்றன. அதாவது, மொழித்திறனின் வளர்ச் சிக்கு உதவுவதற்காக மொழி கற்றலூக்கி (language acquisition device) என ஒன்று அமைத்துக் கொள்ளப் பட்டது. அது மொழிச் செயலை விளக்கப் போதுமானது அல்ல. அது உட்கொள்ளும் திறனை அடிப்படையாகக் கொள்வதால் பிற பயிலுபவர்களின் வெளியிடும் திறனை அளக்கவோ ஆராயவோ போதாது. மேலும் அதுவே குறைபாடுடையது, இதன் காரணமாக மொழித் திறனைச் சுட்டுகின்ற ஆய்விற்கும் மொழிச் செயலைப் பற்றிய ஆய்விற்கும் இடையே ஓர் இடைவெளி, உண்டாகின்றது. இவ் விடைவெளியைத் தொடர்பு படுத்த ஓர் இணைப்புத் தேவை யாகின்றது. இவ்விணைப்பே இக்கட்டுரையில் மொழிச் செய லூக்கி (language performance device) எனப்படுகின்றது.

இவ்வாறு ஓர் அமைப்பை உருவாக்குதல் மொழி கற்றல்/ பயிலுதல் துறைகளிலும் பிழை ஆய்விலும் (error analysis) எதிர்

நோக்கப் படுகின்ற பெரும்பாலான பிரச்சினைகளைத் தீர்க்கப் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

இம்மொழிச் செயலூக்கி மொழிச் செயலைப் பற்றிய ஆய்வுக் குரிய உருப்படிவம் (model) அல்ல; அல்லது கிரேஷனின் (krashen, 1981) monitor model போன்றதும் அல்ல. ஆனால் மொழித் திறனுக்கும் (மொழி புகுவளவுக்கும்) மொழிச் செயலுக்கும் (விளை வளவுக்கும்) இடையே இருக்கின்ற இடைவெளியில் நடக்கின்ற செயற்பாட்டை விளக்கப் பயன்படுகின்றது. இவ்விடைவெளியே ஆராய்ச்சியாளர்களால் இருண்ட பகுதி (black box) என்று குறிக்கப்படுகின்றது. மாணவனுக்குக் கொடுக்கப்படுகின்ற மொழி யளவும் அவன் பயிலுகின்ற மொழியளவும் ஒருபுறம், அவன் எழுதவும் பேசவும் பயன்படுத்துகின்ற மொழியளவு மறுபுறம். இவ்விரண்டும் ஒன்றுபோலிருப்பதில்லை. மொழியளவு மட்டு மல்லாமல் குறைபாடற்ற மொழி கற்பிக்கப்படும் போது மாணவனால் வெளியிடப்படுகின்ற மொழிச்செயலால் அறிந்து கொள்ளப்படுகின்ற மொழி ஏன் பிழைகளுடன் குறைபாடுகள் நிறைந்ததாகத் தோன்றுகிறது? மேலும், ஒரேமாதிரியான மொழியறிவு கொடுக்கப்படும் போது மொழிச் செயல் ஏன் வேறுபாடாக இருக்கின்றது? இக் குறைபாட்டிற்கு மாண வனின் மொழித்திறன் காரணமாகின்றதா? அல்லது மொழித் திறனுக்கும் மொழிச் செயலுக்கும் இடையே இருக்கின்ற இருண்ட பகுதி காரணமாகின்றதா? எனும்போது அவ்விருண்ட பகுதி தான் காரணம் எனக் குறிப்பிடப்படுகின்றது. ஆயின், அவ் விருண்ட பகுதியில் என்னதான் நடக்கின்றது?

## மொழிச் செயலும் மொழிச் செயலூக்கியும்

குழந்தைகளிடம்/மொழி பயில்பவரிடம் மொழி கற்கத் துணை புரிகின்ற ஒரு மொழி கற்றலூக்கி உள்ளுணர்வாக இருக்கின்றது என்றும் அதற்குத் தேவையானதெல்லாம் மொழியின் புகுவளவும் செயற்பாடும் தான் என்பது முன்னரே விளக்கப்பட்டதொன்று. இம் மொழியளவையும் செயற்பாட்டையும் கொண்டு மொழி கற்றலூக்கி தனக்குரிய ஒரு பிறப்பிலக்கணத்தை உருவாக்கிக் கொள்கின்றது.

ஆகவே, மொழி பயிலுபவரின் மொழித்திறன் என்பது பயில் மொழியின் (target language) அமைப்பு பற்றிய அறிவும் அதை உருவாக்கத் தேவையான அறிவும் எனக் கொள்ளலாம். அதே நேரத்தில் அம்மொழி விதிகளைக் கட்டுப்படுத்தி மொழிச் செயலுக்கு உதவுகின்ற செயற்பாடு பேசுதல் அல்லது எழுதுதல் ஆகிய மொழிச் செயலுக்கு முன்னர் நடக்கின்றது. பயிலுபவர் எவ்வாறு மொழி விறிகளைக் கட்டுப்படுத்துகிறார்? மொழிக் கற்றலூக்கியின் துணையால் தன்னகப் படுத்தப்பட்ட விதிகளி லிருந்து விலகிப் போவதற்குக் காரணம் என்ன? வளர்மொழி எங்கே உருவாகின்றது? அவ்வாறான வளர்மொழி உருவாக எவை அடிப்படையாகின்றன? போன்ற பல கேள்விகள் பெரிதும் போற்றிப் பேசப்படுகின்ற மொழித்திறன் மொழிச் செயல் விளக்கங்களால் எழுகின்றன.

மொழிச் செயல மொழித்திறனின் நேரடி பிரதிபலிப்பாக இருந்தால் அது மொழியின் விதிகளிலிருந்து விலகி செல்லக் கூடாது, அவ்வாறு விலகிச் சென்றாலும் வேறுபாடு குறை வாகவே இருத்தல் வேண்டும். ஆனால் உண்மையில் நடப்பது என்ன? மொழிச் செயல் மொழித்திறனிலிருந்து மிகவும் வேறு பட்டே அமைகின்றது. இப்பாதிப்பு ஏதனால் ஏற்படுகின்றது? இதற்கு எவற்றைக் காரணமாகச் சொல்வது? சில பாதிப்புக் கூறுகள் காரணமாக அமைகின்றன. ஆனால் அவை எங்கு எப்படிச் செயல்படுகின்றன என்பது விடிவை எதிர்நோக்குகின்றது. மேல் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலாக இம்மொழிச் செயலூக்கி இங்கு உருவாக்கப்பட்டிருக்கின்றது.

ஆய்வு

மொழி பயிலுபவர்கள் பெரும்பாலும் தமக்கென சில பரிமாற்ற அணுகுமுறைகளை உருவாக்கிக்கொள்கிறார்கள். இவ்வணுகு முறைகள் இரு திறத்தன. சில உளச்சார்பானவை. சில மொழிச் சார்பானவை.

இவ்வணுகு முறைகளைக் கண்டுகொள்வதற்காக ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் முடிவு மொழிச் செயலில் ஏற்படு

கின்ற மாற்றங்களுக்குக் காரணம் கற்பிப்பதுடன் மொழித்திறனுக்கும் வளர் மொழிக்கும் இடையிலான இருண்ட பகுதியை விளக்கவும் மேற்கூறிய மொழிச் செயலூக்கியின் தேவையை எடுத்துரைக்கவும் உதவுகின்றது.

### தரவு

இந்தியமொழிகளின் நடுவண் நிறுவனத்தில் பதின்மூன்று இந்தியமொழிகளையும் கற்பிக்கின்ற மண்டல மொழிப்பயிற்று மொழிகளில் ஒன்றான தென்மண்டல மொழிப்பயிற்று மையத்தில் தமிழை இரண்டாம் மொழியாகப் பயிலுபவர்களின் மொழிப்பிழைகளே இங்குத் தரவாக (data) எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. தமிழை இரண்டாம் மொழியாகப் பயிலுபவர்களைப் பற்றியும் பாடத்திட்டத்தைப் பற்றியும் இங்குச் சிறிது பார்ப்பது ஆய்வின் அடிப்படைகளை விளக்கும்.

இங்கு மாணவர்களாக வருபவர்கள் பட்டம் பெற்ற பள்ளி ஆசிரியர்கள், அவர்களின் தாய்மொழி வேறுபடுவது போல-அவர்கள் இந்தியாவின் மற்ற மாநிலங்களிலிருந்து வருவதால்—மற்ற எல்லாக் கூறுகளிலும் வேறுபட்டிருக்கிறார்கள். சான்றாக, வயது, படிப்பு, உளவியற் கூறுகள், மனப்பான்மை, ஆர்வம் அறிந்திருக்கின்ற மற்ற மொழிகள் முதலிய எல்லாவற்றிலும் அவர்கள் வேறுபட்டிருக்கிறார்கள்.

மையத்தின் மொழிக் கலைத்திட்டம் (curriculum) தொடக்க நிலை, இடை நிலை, முதுநிலை, என மூன்று பெரும் பகுதிகளையுடையது. மொத்த படிப்புக் காலம் 10 மாதங்கள் 1100 மணி நேரம். தொடக்க நிலையில் தமிழின் பேச்சு வழக்கும் (நிலைபேறு பெற்ற இடை நிலையில் எழுத்து வழக்கிற்கு மாற்றமும் அதில் பயிற்சியும் முதுநிலையில் மொழியில் உயர்திறன்களும் அளிக்கப்படுகின்றன. இப்பத்து மாதக் காலத்தில் அவர்கள் செய்த மொழிப் பிழைகளே இங்குத் தரவாக எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன.

### அணுகுமுறைகள்

இம் மாணவர்களின் மொழிப் பிழைகளை-ஏறத்தாழ ஆறாயி

ரம் - எடுத்து ஆராய்ந்த போது (காண்க: நடராசபிள்ளை & விமலா 1981) அவர்களின் மொழிச் செயலில் நேர்ந்த பிழைகளுக்கு ஆறு . காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவையாவன ஒப்புமையாக்கம் (overgeneralization) பயில் மொழி விதித்தவறு (over extension of target language rule) பயில்மொழி வளர்ச்சிப் பிழைகள், தாய்மொழி இடையீடு, மற்ற மொழிகளின் இடையீடு, பயில் மொழி இலக்கணத்தை எளிமையாக்கல். இவ்வாறு வகையான பிழைகளுக்கும் காரணமாக அமைவன மாணவர்களின் பரிமாற்றி அணுகுமுறைகளே இவ்வணுகு முறைகளின் வெளித் தோற்றமே மொழிப் பிழைகள்-மொழிச் செயலுக்கும் மொழித் திறனுக்கும் இடையிலான வேறுபாடுகள். ஆகவே, மொழிச் செயலுக்குக் காரணமாக அமைகின்ற அவ்விருண்ட பகுதியில் உருவாக்கப்பட்ட மொழிச் செயலூக்கியில் இவ்வணுகு முறைகளின் தாக்கம் இருப்பதால்தான் மொழிச்செயல் - வளர் மொழி-மொழித் திறனிலிருந்து வேறுபடுகின்றது எனக் கூறலாம்.

இவ்வணுகு முறைகளால் பயிலுபவரின் மொழிச் செயல் பெரிதும் மாறுபடுகின்றது. சில நேரங்களில் இம்மொழிச் செயலூக்கி மொழி விதிகளை அதிகமாகப் பயன்படுத்தத் தூண்டுகின்றது. இவ்வாறு விதிகளைச் சார்ந்து நிற்பதால் பயிலுபவர்கள் மெதுவாகப் பயிலுகின்ற நிலையைக் காணலாம். காரணம், அவர்கள் மொழிவிதிகளைச் சிந்தித்து வெளிச்சூழலோடு தொடர்பு படுத்தி நினைவு நிலையில் உணர்த்த நினைப்பதால்தான். அதே நேரத்தில், இம்மொழிச் செயலூக்கி மொழிவிதிகளை நினைவிலி நிலையில் பயன்படுத்தவும் சில நேரங்களில் தூண்டுகிறது. இவ்வாறு நினைவிலி நிலையில் மொழிவிதிகளைப் பயன்படுத்துகிறவர்கள் தாய்மொழியாகப் பேசுபவர்கள் போல வெகுவேகமாகப் பயில ஆரம்பிக்கிறார்கள். மொழிச் செயலூக்கி வெவ்வேறு விதமாகச் செயல்படுவதால் வளர்மொழி மாறுபடுகிறது என்று சொல்லலாம். இவ்வாறு மாறுபடுவதற்கு விதிதருமுறை,, (deductive method) விதிவருமுறை(inductive method) போன்ற கற்பித்தல் கொள்கைகளும் உத்திகளும் காரணமாக அமைந்தாலும் அதில் முக்கியத்துவம் பெறுவது பயிலுபவர்களின் அணுகுமுறைகளே!

மொழி விதிகளை நினைவு நிலையில் சார்ந்திருப்பவர்கள் மொழி பற்றிய தங்கள் உள்ளுணர்வை நம்பாமல் கற்பிக்கப்பட்ட பயின்ற விதிகளை நம்புகிறார்கள். அதனால் பெரும்பாலானவர் கள் அவ்விதிகளைத் தவறான இடங்களிலும் பயன்படுத்துகின்ற நிலையைக் காணலாம். இவ்வாறு பிழைக்குக் காரணமாக அமைகின்ற மாதிரிகள் வடிவத்திலோ ஒலிப்பிலோ ஒன்று போல் இருப்பதில்லை. அவ்வாறு வடிவத்திலும் ஒலிப்பிலும் ஒன்று போல் மாதிரி அமைப்பு அமைந்தால் அது ஒப்புமையாக்கப் பிழையாகின்றது. ஆனால் இங்கு விதியைப் பொதுமைப் படுத்தியதால் நேர்வதால் இது பயில்மொழி விதித்தவறு என்ற அமைப்பிற்குள் அடக்கப்படுகின்றது. சான்றாக,

மரம் + இல் → மரத்தில்

–'அம்' –இல் முடியும் சொற்களோடு வேற்றுமை உருபு சேர்க்கும் போது -த்த்- சேர்க்கப் படுதல் ஒருவிதி. ஆனால் இங்கு மொழிச் செயலூக்கி விதிகளை அதிகமாகப் பயன்படுத்தத் தூண்டுவதால் அம்மாணவர்கள் இவ்விதியை

பெங்களூர் + இல் → பெங்களூரத்தில்

ஊர் + இல் → ஊரத்தில்

லக்னோ + இல் → லக்னோவத்தில்.

போன்ற மற்ற சொற்களிலும் பயன்படுத்துவது இவ்வாறு முறையை விளக்குகின்றது.

முன்னரே அறிந்திருக்கின்ற ஒரு விதியை ஒலிப்பிலும் அமைப் பிலும் ஒன்று போலிருக்கின்ற ஒரு வடிவத்தில் பயன்படுத்துதல் ஒப்புமையாக்க அணுகு முறையாகும். குழந்தையாக இருக்கும் போது தாய் மொழி கற்கும்போது பயன்படுத்திய அணுமுறைதான் இது. ஆனால் இவ்வணுகுமுறை இரண்டாம்மொழி பயிலும் போது பிழையில் முடிகின்றது. மொழிச்செயல் மொழித்திறனின் எதிரொலிப்பாக இருந்தால் இப்பிழைகள் நேரக்கூடாது. ஆசிரியரால் புகுவனவாகக் கொடுக்கப்படுகின்ற விதி அறிவு சரியாக இருக்கும் போது மொழிச் செயல் எப்படித் தவறாக

இருக்க முடியும்? அல்லது தூண்டல் சரியானதாக இருக்கும் போது துலங்கலும் சரியானதாகத்தானே இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாதது நடத்தைக் கொள்கையினரின் கோட்பாட்டைத் தவறெனச் சுட்டுகின்றது. மேலும், இவ்வாறு மொழிச்செயல் வேறுபட்டிருப்பதைக் காட்ட இருண்ட பகுதியில் நடக்கின்ற மாற்றத்தைக் குறிக்க மொழிச் செயலூக்கியின் தேவையையும் உறுதிபடுத்துகின்றது. சான்றாக,

தேய்—தேய்க்கிறேன்

மேய்—மேய்க்கிறேன்

இவற்றை மாதிரியாகக் கொண்டு

வேய்—*வேய்க்கிறேன்

என எழுதுதல் பிழையில் முடிகிறது. (வேய் ஒரு மெல்வினை ஆனால் தேயும், மேயும் வல்வினைகள்) இதற்கு ஒப்புமையாக்க அணுகுமுறையே காரணமாகின்றது.

மொழியைப் பயின்று கொண்டிருக்கும் போது பயிலுபவர்கள் தாங்கள் பயில்மொழியில் பெற்றிருக்கும் அறிவின் அளவைப் பொருட்படுத்தாமல் பயில்மொழியில் பேச/எழுதத் தொடங்குகிறார்கள். அவ்வாறு மொழிச் செயல் புரியும் போது கண்டிப்பாக, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மொழிப்புகுவளவிற்கும் அவர்கள் வெளிப்படுத்துகின்ற வினைவளவிற்கும் இடையே ஓர் இடைவெளியும் வினைவளவிற்கும் சரியான அல்லது தேவையான அறிவிற்கும் இடையே ஓர் இடைவெளியும் இருக்கும். இவ்வாறு இருக்கின்ற இடைவெளியில் மாணவர்களின் பயில் மொழித்திறனின் வளர்ச்சியும் தாய் மொழித்திறனின் கூட்டும் சேர்ந்தது தான் வளர்மொழி எனக் கண்டோம். பயில்மொழித்திறன் வளர வளர தாய்மொழியின் இடையீடு அதில் குறைவாக இருக்கும்.

இங்கு எடுத்துக் கொண்ட ஆய்வில் வளர்மொழி இன்னொரு புதிய கூறாலும் விளக்கப்படுகின்றது. இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் பத்து மாதப் படிப்பின் முதல்நிலையில் தமிழின் பேச்சு வழக்கு கற்பிக்கப்படுகின்றது. பின்னர் நான்காவது மாதம் முதல் எழுத்து வழக்கு கற்பிக்கப்படுகின்றது. இம்

மூன்று மாதப் பயிற்சிக்குப் பின்னர் பயிலுபவர்களின் மொழிச் செயலில் பேச்சு வழக்கின் இடையீடு இருந்து கொண்டே இருக்கின்றது. அதாவது தாய்மொழியின் இடையீட்டோடு பயில் மொழியின் இன்னொரு வழக்கும் இடையீடு செய்வதால பயிலுபவர்களின் வளர்மொழியில் இக்கூறும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். இது இவ்வாறு இருக்க முதலில் கற்பிக்கப்படுவது எழுத்து வழக்காக இருப்பினும் இத்தொல்லை இருந்தே தீரும். தமிழ் ஓர் இருவழக்கு நிலை மொழியாக இருப்பதால் அதில் ஏதாவது ஒரு வழக்கில் மட்டும் பயிற்சி அளித்தால் அது குறை பாடுடையதாகவே இருக்கும்.

ஆக, வளர்மொழி எனும் போது அது

பயில்மொழி + தாய்மொழி (+மற்றமொழிகள்) மட்டுமல்ல

பயில்மொழி + பயில்மொழியின் பேச்சு/எழுத்து

வழக்கு + தாய்மொழி (+மற்றமொழிகள்)

என்று குறிப்பிட வேண்டும்.

சான்றாக

அவன் தன்னோடெ வீட்டிற்குக் கிளம்புனான்

'அவன் தன்னுடைய வீட்டிற்குக் கிளம்பினான்'

நான், ரொம்ப நேரமாக வினையெச்சத்தைப் பற்றிப் படிச்சும் எனக்கு அது விளங்கவில்லை.

'நான் நிரம்ப/அதிக நேரமாக (நேரம்)

வினையெச்சத்தைப் பற்றிப் படித்தும்

அது எனக்கு விளங்கவில்லை.

போன்ற பல பிழைகள்.

எழுத்து வழக்கில் திறன் போதாததாக இருக்கும் நிலையில் பயிலுபவர் தன் பேச்சு வழக்கு அறிவை- முன்னரே தன்னகப் படுத்திக் கொண்ட பேச்சுவழக்கு விதிகளை- எழுத்து வழக்கோடு சேர்த்து எழுதலாம் என நினைக்கின்ற அணுகுமுறை தான் மொழிச்செயலூக்கியின் இன்னொரு கூறாக இங்குச் சொல்லப் படுகிறது.

தாய்மொழியின் இடையீடும் இதைப் போன்றது தான். பயில் மொழியில் தான் பெற்ற அறிவு போதாத நிலையில் பேச/எழுத

முற்படும் போது சில இடங்களில் அவனுடைய பயில்மொழி அறிவில் ஏற்படுகின்ற இடைவெளியைத் தன் தாய்மொழியால் அல்லது தான் அறிந்திருக்கின்ற மற்ற மொழிகளால் நிரப்ப முயலுவது ஓர் அணுகுமுறையாகும். பயில்மொழியில் தன் அறிவு வளர்வது வரைக்கும் ஒருவர் காத்திருந்து பேசவோ அல்லது எழுதவோ நினைப்பது அவருடைய படைப்பாற்றல் திறனைக் குறைக்கும்; வெளியிட வாய்ப்பும் இருக்காது, இந்நோக்கில் இவ்வணுகு முறை நல்லதொரு கூறாகும். இத்தாய்மொழி இடையீடு அவருடைய மொழிப் பயிலுதலில் ஊறு செய்கிறது என்பதை விடத் துணைசெய்கிறது என்று கொள்ளுதல் சிறப்பாகும்.

பயில்மொழியும் பயிலுபவரின் தாய் மொழியும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவையாக இருந்தால் தாய்மொழியின் இடையீடு அதிகமாக இருக்கும் என்றும் அது வேற்று மொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததாக இருந்தால் தாய்மொழியின் இடையீடு குறைவாக இருக்கும் என்றும் ஆய்வின் முடிவு எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு தாய்மொழிக் கூறுகளைப் பயன்படுத்துகின்ற அணுகு முறை வளர்வதற்கு மாணவர்களின் மனப்பான்மையே காரணம். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளாக இருக்கும் போது தாய் மொழிக் கூறுகள் அதிக அளவு வேறுபடாததால் பிழையாகாது என்ற மனப்பான்மையும் வேற்று மொழி தன் தாய்மொழிப் பயன்பாடு பிழையில் முடியலாம் என்ற அச்ச மனப்பான்மையும் மேற்கூறியவற்றிற்குக் காரணங்களாகின்றன.

இதே போன்று கடைசியாகப் பயின்ற மொழி, அது பயில் மொழியோடு தொடர்புடையதாக இருந்தாலும் சரி அவ்வாறு இல்லாததாக இருந்தாலும் சரி பயில்மொழியில் குறுக்கிடும் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

தாய்மொழியின் இடையீட்டைப் போல பயில்பவர் அறிந்திருக்கின்ற இன்னொரு மொழி இடையீடு செய்வதற்கு மேற் கூறிய காரணங்களோடு ஓர் உளவியற் கூறையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். தாய்மொழியை விடவும் இன்னொரு மொழிக்கு

அதிக மதிப்பு கொடுக்க நினைப்பவரும் தாய்மொழியில் அந்த மொழியமைப்பு இல்லாத நிலையில் பயின்றிருக்கின்ற இன்னொரு மொழியில் அவ்வமைப்பு இருப்பதாக நினைப்பவரும் மற்றமொழி அமைப்புகளைப் பயன்படுத்துவதைக் காணலாம் சான்றாக.

கன்னடத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர் சத்துப்போ 'செத்துப்போ' என்றும் மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர். கீழில் 'கீழே' முகளில் 'மேலே', இரிக்கிறது 'இருக்கிறது' என்றும் எழுதுவதும் தாய் மொழி இடையீட்டைச் சேர்ந்தது. ஆனால் இந்தி தெரிந்த கன்னடம் அல்லது தெலுங்கு தாய் மொழியாகக் கொள்பவரின் மொழிச் செயலில் இந்தியின் இடையீடு இருப்பதற்கு மேற்சொன்ன காரணங்களில் ஏதாவது ஒன்று பொருத்தமாகிறது.

எளிமையாக்கல் அடுத்த அணுகுமுறையாகும். பெரும்பாலான இரண்டாம்மொழி பயிலுபவர்கள் முறைசார் கல்வியானாலும் முறைசாராக் கல்வியானாலும் இவ்வணுகுமுறையைப் பின்பற்று கிறார்கள். பயில்மொழி இலக்கணத்தில் அமைப்பொழுங்கற்றவை இருக்கும் போது – இது எல்லா மொழிகளுக்கும் பொதுவானதே! அல்லது அமைப்புகள் கடினமாக இருக்கும் போது பொதுமைப் படுத்திட ஒழுங்கு படுத்தி அவ்வமைப்புகளை எளிமையாக்கிக் கொள்கின்றார்கள். சான்றாக

நம்மள் கொடுக்கிறான்

நிம்மள் வாங்குறான்.

அல்லது

வாங்கி, பாடி, ஓடி போன்ற

வினை யெச்சங்களைப் போல மற்ற

இறந்தகால இடைநிலை கொள்ளும்

வினைச் சொல்லைடும் எளிமையாக்குதல்

பார்த்தி, படித்தி என்று

(இரண்டும் வேறு வேறானவை, ஒழுங்கற்றவை
என்பது புரியாமல் - இ சேர்த்துவிடுதல்)

இதே போன்றதொரு அணுகுமுறையையே குழந்தைகள் தம் தாய்மொழி கற்கும் போதும் பின்பற்றுகிறார்கள். நானுக்கு நீனுக்கு, போன்றவை ஒப்புமையாக்கப் பிழையாக இருந்தாலும் இலக்கணத்தை எளிமையாக்குதல் எனும் அணுகுமுறையினால் எழுந்தது.

ஆக மேற்கூறிய ஆறு பரிமாற்ற அணுகுமுறைகளும் பயில் மொழியின் மொழிச்செயலில் செல்வாக்குச் செலுத்துவதால் தான் வளர்மொழி வேறுபட்டிருக்கின்றது என்பது விளங்கும். இதைக் கீழ்க்கண்டவாறு காட்டலாம்.



ஆக, பிழைகளின் ஆய்வால் கண்டு கொள்ளப்பட்ட ஆறு அணுகுமுறைகளும் மொழிச் செயலூக்கியில் செல்வாக்கு செலுத்தி பயிலுபவர்கள் அடைந்திருக்கின்ற மொழித்திறனில் மாற்றங்கள் நிகழ்த்தி இடைமாறுபாட்டுக் கிளைமொழியான வளர்மொழிக்கு வழி வகுக்கின்றது. இவ்வளர்மொழியே பின்னர் மொழிச் செயலாக வெளிவருகின்றது.

மொழித் திறனுக்கும் மொழிச் செயலுக்கும் (வளர் மொழி) இடையிலான வேறுபாடுகள் மொழிச் செயலூக்கியின் துணை கொண்டு விளக்கப்படுகின்றன.

### உதவிய நூல்கள்

Corder, S.P. 1973. Introducing Applied Linguistics, Penguin Education.

Krashen, Stephen, D. 1981. Second Language Acquisition and Second Language Learning, Oxford: Pergamon Institute of English.

நடராசபிள்ளை, ந. & விமலா, ச. 1981 பிழை ஆய்வு, மைசூர்: தென்இந்திய மொழிகளின் பயிற்றுமையம்.

மொழியியல் 6.4 (1983

# பெயரைச் சொல்லலாமா!

எஸ். ஆரோக்கியநாதன்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

ஒருவருக்குப் பெற்றோரால் வைக்கப்படுகிற பெயர் பெரும்பாலும் வாழ்நாள் முழுதும் அவருடைய பெயராக நிலைத்து நின்று, அவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளவும் உதவுகிறது. ஆனால் சிலர் பெற்றோர்கள் வைக்கும் பெரைத் தாமே மாற்றிக் கொள்ளுதலும், புனை பெயர் வைத்துக் கொள்ளுதலும், உண்டு. சில சமயம் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டதுமே நம் மனதில் அப்பெயருக்கு உரியவரைப்பற்றிய ஒரு கற்பனை - அவரின் உருவத் தோற்றம், சமுதாய அந்தஸ்து, சொந்த ஊர், மதம், படிப்பு நிலை போன்றவைகளை - உருவகப்படுத்திக்கொள்ளுகிறோம். இத்தகைய சமுதாயக் கூறுகளை உருவகப்படுத்திக்

கொள்ள ஏதுவாகும் பெயர்களைச் சமுதாய மொழியியல் பார்வையில் காண முயலுவதே இக்கட்டுரையின்! நோக்கமாகும்.*

தொல்காப்பியம் தமிழ்ச் சொல்லமைப்புக்குத் தமிழ் எழுத்துக்களில் அமையும் வரம்பு முறை குறித்து சில விதிமுறைகள் வகுத்துள்ளது. ஆனால், இன்று தமிழில் பெயர் எழுதும்போது எழுத்தமைப்பு விதிமுறைகள் மிக எளிதாக மீறப்படுகிற சூழலைக் காணலாம். பெயரிடுவதற்குப் பெரும்பாலும் கடவுளரின் பெயர்களையும் (உ.ம். கோவிந்தன், ரங்கநாதன், யேசுதாஸ், லக்ஷ்மி, சரஸ்வதி); மலர்களின் ஆறுகளின் பெயர்களையும் (உ.ம் அல்லி, குறிஞ்சி, காவேரி, கங்கா); செடி கொடிகளின் பெயர்களையும் (உ.ம். துளசி, கற்பகம், முல்லைக்கொடி, பைங்கொடி ; சில ஊர்களின் பெயர்களையும் (உ.ம். சிதம்பரம், திருப்பதி, மதுரை); சில மனிதர்கள், தலைவர்கள் ஆகியவர்களின் பெயர்களையும் (உ.ம். நேரு, காமராஜ், அண்ணா, கென்னடி) பயன்படுத்துகின்றனர். முக்கியமான சில நிகழ்ச்சிகளும் பெயரிடுவதற்கு காரணமாக அமைவது உண்டு. சமீபகாலத்தில் 'புருடென்ழியல்' என்றும் 'அப்பு' என்றும் பெயரிடப்பட்டதை இதற்குச் சான்று கூறலாம்.

மற்ற மொழியினைச் சார்ந்த கடவுளர், ஊர், மனிதர் ஆகியவர்களின் பெயர்களை வைப்பதால், தமிழ் எழுத்தமைதி பல இடங்களில் மீறப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. சொல்லுக்கு முதலில் வரக்கூடாது எனும் விதிக்கு உட்பட்ட மெய்யெழுத்துக்களான 'ல, ர, ட' போன்றவைகள் பெயரில் முதலெழுத்துக்களாக வருகின்றன (உ.ம். லாவண்யா, லீலா, லைலா, ராதா, ரீடா, டயானா). தொல்காப்பிய விதிக்குப் புறம்பாக சொல் இறுதியில் மெய்யொற்றுக்களான 'க், ச், ப்'. இவைகளைக் கொண்டும் பெயர்கள் பல உள்ளன. (உ.ம் கார்த்திக், பிரதீப்,) சில சமயம் மெய்யொற்றுகள் சொல் முதலிலும் கூட வரும் வண்ணம் பெயர்கள் அமைகின்றன (உ ம் ப்ரியா, க்ரியா, ஸ்நேகலதா). கிருத்துவ மற்றும் முஸ்லீம்

* இக்கட்டுரை எழுத பெயர்களை வரிசைப்படுத்தித் தந்து விவாதித்து பயனுள்ள கருத்துக்களைக் கூறிய நண்பர்கள், ராமசாமி, முருகேசன், ரவி, அறிவுடைநம்பி, இராமநாதன் ஆகியவர்களுக்கு நன்றி.

தமிழர்களின் பெயர்களும் இந்த எழுத்தமைதி விதிகளை மிக எளிதாக மீறி வருவதைக் காணலாம் (உ.ம். ரகுமான், லத்தீப், டயானா) சமஸ்கிருத எழுத்துக்களைத் தடையின்றிப் பெயர் எழுதப் பயன்படுத்துகின்ற நிலையினைக் காணலாம். சான்றாக, ஆஷா, ஹாசன், ஜானி, போஸ் எனும் பெயர்களைக் குறிப்பிடலாம். ஆனால், சமஸ்கிருத எழுத்துக்களைத் தவிர்த்து ஒருவரின் பெயரை எழுத இயலும் என்றாலும் மேலே குறிப்பிட்டுள்ள பெயர்களிலும், இவை போன்றவைகளிலும் சமஸ் கிருத எழுத்துக்களைத் தவிர்த்து எழுதுதல் இயலாது. பெயரை எழுதுவதில் 'ட, ஸ' எனும் மெய்யொலிகளை சொல் முதலில் பயன்படுத்தலை தவிர்த்தும், சில தவிர்க்க இயலும் மெய்க் கட்டுகளை விலக்கியும் பெயர்களை எழுதலாம். சான்றாக, ஸீதா, ஸ்நேகலதா, ஸிப்ரமணி, விஸ்வநாதன் போன்ற பெயர் களை சுதா, சிநேகலதா, சுப்பிரமணி, விசுவநாதன் (விசுவ னாதன்) என்றும் எழுதலாம்.

மெய்க்கூட்டு மற்றும் சமஸ்கிருத எழுத்துக்களைப் பயன்படுத்து கின்ற இம்முறை பிராமணர்களிடையேயும் ஏனைய முறை பிரா மணரல்லாதாரிடையேயும் இருப்பதைக் காணலாம். அவ்வாறே ரகுமான் எனும் முஸ்லீம் பெயரை முஸ்லீம் தமிழர்கள் ரஹ்மான் (றஹமான்) என்றும், மற்றவர்கள் ரகுமான்/இரகுமான் என்றும் எழுதுவதைக் காணலாம்.

பெயர் எழுதும் முறையில் எழுத்தமைதி மீறப்படுவதுடன் ஆங்கில எழுத்துக்களும் தடையின்றிப் பயன்படுத்தப் படுகின்றன. இத்தகைய முறையினைப் பெயர் எழுதுகின்ற நிலையில் மட்டுமே காணமுடிகிறது. பெரும்பாலும், ஒருவரின் பெயர் எழுதப்படும் போது பெயரில் வரும் முதலெழுத்துக்கள் (initials) ஆங்கிலத்தில் எழுதப்படுகின்றன. கையெழுத்து மட்டுமே போடத் தெரிந்தவர் கள்கூட ஆங்கில எழுத்துக்களை முதலெழுத்தாகப் பயன்படுத்து கின்றனர். M. S. விஸ்வநாதன், M. பாஸ்கர், A. L. சீனிவாசன் போன்ற பெயர்களில் இதனைக் காணலாம். ஆயினும் ஆங்கில எழுத்துக்களை நீக்கிவிட்டு சமஸ்கிருத அல்லது தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தும் வழக்கமும் காணப்படுகிறது

(உ. ம். எம். எஸ். விஸ்வநாதன், எம். பாஸ்கர், ஏ. எல். சீனிவாசன்). சில பட்டங்களைப் பெயருக்கு முன்னால் போட்டுக் கொள்ளுவதில் ஆங்கில எழுத்துக்கள் மிகப்பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன (உ. ம். Dr. ராமன், Fr. சுந்தரம், Sr. விமலா.) அவ்வாறே, படிப்பிற்கான பட்டங்களை. பெயருக்குப் பின்னால் போடும்போது ஆங்கில எழுத்துக்களே பயன்படுத்தப்படுகின்றன (உ. ம். ராமன், M. A. B. L., செங்குட்டுவன் M. B. B. S.) இவ்வாறு பெயர் எழுதும்போது தமிழ் எழுத்தமைதி முறைகளைச் சுலபமாக மீறுவதும், சமஸ்கிருத எழுத்துக்களைப் பயன்படுத்துவதும், அதற்கும் மேலாக ஆங்கில எழுத்துக்களையும் பயன்படுத்துவதும் நாள்தோறும் தமிழ்மொழியில் நடந்து வருகின்ற எழுத்தமைதி மீறல்களாகும்.

சில பெயர்கள் அப்பெயருக்குரியவரின் சமுதாயக் கூறுகளைத் தெளிவு படுத்துவதாக அமைந்திருப்பதைக் காணலாம். மதப் பிரிவுகளைச் சுட்டும் வகையில், ஆல்பர்ட், அந்தோணி, ஜூலி, மேரி என்பன கிருத்துவப் பெயர்களாகவும், காசீம், இஸ்மாயில், ஷகிலா, உம்முசல்மா என்பன முஸ்லீம் பெயர்களாகவும் இருக்கின்றன. ராமானுஜம், அலமேலு போன்ற பெயர்கள் ஐயர் பிரிவினருக்கு உரியன அல்ல. அவ்வாறே, சிவா, கணபதி, உமா போன்ற பெயர்கள் ஐயங்கார் பிரிவினருக்கு உரியவை அல்ல. இதனால் இப்பெயர்களைத் தவிர்த்தே அப்பிரிவினர்கள் பெயரிடுவதைக் காணலாம். பொதுவாக, ஐயர்பிரிவினர் சைவ மற்றும் வைஷ்ணவப் பெயர்களை வைப்பார்கள். ஆனால் ஐயங்கார் பிரிவினர் சைவப்பெயர்களைத் தவிர்த்து வைஷ்ணவப் பெயர்களையே வைப்பார்கள். சாரி என முடியும் பெயர்கள் ஐயங்கார் பிரிவினருக்கே உரியன. நகரத்தாரின் பெயர்களை, பெயருக்கு முன்னால் வரும் முதலெழுத்துக்கள் இரண்டு அசைக்கு மேற்பட்டும், மிக நீளமாகவும் அமைந்திருப்பதைக் கொண்டே எளிதாக அறிந்து கொள்ளலாம். (உ. ம். லெ. பெ. கரு. இராமநாதன், இராம. சுந்தரம்) இத்தகைய பழக்கம் அந்த வட்டாரத்தில் உள்ள மற்ற சாதியினைச்

சார்ந்த மக்களிடையேயும் சற்று பரவியிருப்பதைக் காணலாம். இராம. வீரப்பன் எனும் பெயருடைய ஒருவர் செட்டியாராக அல்லாது செட்டிநாடு வட்டாரத்தைச் சார்ந்தவராக இருக்கிறார் என்பது அதற்குச் சான்றாக அமையும். சில பெயர்கள் ஒரு குறிப்பிட்ட பொருளாதார நிலையுடையவர்களுக்கு உரியன என்பதுபோன்ற உணர்வை நமக்கு உண்டாக்குகின்றன. அங்காளம்மா, அஞ்சலை, காத்தாயி, ராமாயி எனும் பெயர்கள் மேல் சாதியினைச் சாராத கிராமப் பெண்களின் பெயராக பெரும் பாலும் கருதப்படுகின்றன. அவ்வாறே காளி, மூக்கையன், மொக்கையன் என்பன ஆண்களின் பெயராக உள்ளன. அத் தோடு வயது மூத்த பெண்களின் பெயர்கள் என்று உருவகப் படுத்தும் வண்ணம் ஒளவையார், காரைக்கால் அம்மையார் எனும் பெயர்கள் உள்ளன. இவ்வாறு வழக்கில் உள்ள பல பெயர்கள் மதம், சாதி, சமுதாய நிலை, ஆண்-பெண் எனும் சமுதாயக் கூறுகளை வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருக் கின்றன. அத்தோடன்றி ஒரு சில பெயர்கள் குறிப்பிட்ட வட்டாரத்தில் மட்டுமே அதிகமாகப் பயன்படுத்தப் படுகின்றன. ஒவ்வொரு வட்டாரத்திலும் ஆங்காங்கே அமைந்துள்ள தெய்வங் களின் பெயர்களையே பெயராக இடுவது வழக்கமாக உள்ளது என்று மு. ராமசாமி அவர்கள் தம் களப்பணி ஆய்வில் கண்ட கூற்றாகக் குறிப்பிடுகின்றார். நடராஜரின் பெயர் சிதம்பரத் திலும்; மீனாட்சியின் பெயர் மதுரையிலும், பஞ்சநதம் ஐயாரம்பன் எனும் பெயர்கள் திருவையாற்றிலும், வெங்கடாஜலபதியின் பெயர் திருப்பதியிலும் அதிகமாக வழங்கப்படுவதை இங்கே குறிப்பிடலாம்.

வயதான பெரியவர்களின் பெயரோடு '-ஆர்' எனும் விகுதி சேர்த்து மரியாதையுடன் அழைக்கப்படுவதும் உண்டு; சான்றாக மீனாட்சிசுந்தரனார், வேலாயுதனார் ஆகிய பெயர்களை குறிப்பிடலாம். அவ்வாறே பெண்களுக்கும் அம்மையார் என்பது விகுதியாக சேர்க்கப்படுவதும் உண்டு. உ. ம். லக்ஷ்மி அம்மை யார்) முப்பது வயதுக்கு மேற்பட்ட திருமணமான ஆண்களின் பெயரோடு சாதிப்பெயரைச் சேர்த்து அழைப்பதும், பத்திரிகை

மற்றும் சமூக சடங்கு நிகழ்ச்சிகளில் குறிப்பிடுவதும் அண்மை காலம் வரை பரவலாக வழக்கிலிருந்தது. அவ்வாறே பெண் களின் பெயரோடு 'அம்மாள்' என்று சேர்த்துக்கொள்வதும் வழக்கிலிருந்து வந்தது. ராமசாமி என்னும் பெயருடையவர் திருமணமான பின்னர் தன் சாதிப் பெயர் சேர்க்கப்பட்டு ராமசாமி ஐயர் என்றும்; அவ்வாறே ராஜலக்ஷ்மி என்பவர் ராஜலக்ஷ்மி அம்மாள் என்றும் குறிக்கப்படுவதை இங்கே மேற்கோள் காட்டலாம். நகரத்தாரின் பெண்களுடைய பெயர்கள் 'ஆச்சி' எனும் அடைமொழியுடன் மரியாதை காரணமாக அழைக்கப் படுவதையும் இங்கே குறிப்பிடலாம். ஆண்களின் பெயர்களில் சில 'அப்பா' அய்யா' எனும் விகுதிகளைக் கொண்டு முடிகின்றன (உ.ம்: மாரியப்பா, ராஜப்பா, சுப்பைய்யா). அவ்வாறே பெண்களின் பெயர்களில் சில 'அம்மா' எனும் விகுதி கொண்டு முடிகின்றன (உ.ம்: மாரியம்மா, ராஜம்மா, சுப்பம்மா), –அன் எனும் விகுதியினை இறுதியாகக் கொண்டு ஆண்களின் பெயர்களே வருவது போல் 'அள்/ஆள்' எனும் விகுதிகளை இறுதியாகக்கொண்டு பெண்களின் பெயர்களே வருகின்றன. (உ.ம்: முருகேசன், ராகவன், தங்காள்). கிருத்துவப் பெயர்களில் ஆல்பர்ட், அந்தோணி என்பன ஆணின் பெயர்கள் என்றும் மேரி, ஜூலியட் என்பன பெண்ணின் பெயர்கள் என்றும் பழக்கத்தின் காரணமாக அறிந்துகொள்ள முடிந்தாலும், ஜோன், கிரிஸ் என்னும் பெயர்கள் இருபாலருக்கும் பொதுவாக இருக்கலாம். மேலும் இன்னும் பல கிருத்துவ பெயர்கள் எவ்வாறு ஆண்களுக்கு அல்லது பெண்களுக்கு மட்டும் உரியனவாகின்றன என்று தீர்மானிப்பது தற்போது நமக்கு தெளிவாகப் புலப்படவில்லை. அவ்வாறே முஸ்லீம் பெயர்களில் பீவி, சல்மா எனும் விகுதிகளைக் கொண்டு முடிவன பெண்களின் பெயர்கள் என்றாலும் ஒரு ஆழ்ந்த ஆய்வு இவைகளை இனங்கண்டு கொள்ளும் விகுதிகளை நமக்குத் தெளிவுபடுத்தக்கூடும். பொதுவாக உயிரொலிகளில் முடிவுறும் பெயர்கள் 'ஆ,இ,உ' எனும் உயிரெழுத்துக்களைக் கொண்டுள்ளன. இவைகளில் பெரும்பாலும் 'இ' எனும் உயிரொலியைக்கொண்டு பல பெயர்கள் முடிகின்றன (உ.ம்; மாலினி, தேவி, ஈஸ்வரி, ரவி, சாமி). 'ஆ' எனும் உயிரொலி

களைக் கொண்டு பெரும்பாலும் பெண்களின் பெயர்களே முடிவடைகின்றன (உ.ம். லாவண்யா, உமா, அங்கம்மா, ராதா,) பெரும்பாலும் நம்மிடை வழங்கும் பெயர்கள் சமஸ்கிருதத்தை மூலமாக கொண்டிருப்பதால், சமஸ்கிருதத்தில் 'ஆ' காரத்தில் முடியும் சொற்கள் பெருமளவு பெண்பாற் சொற்களாகவே இருப்பதாலும் அதன் காரணமாகத்தான் தமிழிலும் பெண்பாற் சொற்கள் பல 'ஆ' காரத்தில் முடிகின்றன என க. பாலசுப்பிரமணியன் கருத்துத் தெரிவிக்கிறார். 'உ' எனும் உயிரொலியை இறுதியாகக் கொண்டு ஆண்களின் பெயர்களே பெரும்பாலும் வருகின்றன (உ.ம். சுப்பு, வாசு, முருகு, ராசு.)

கடவுளரின் பெயர்களை ஒருவருக்குப் பெயராக வைக்கும் போது பொதுவாக அந்தப் பெயருக்குரிய கடவுளின் நினைவாக வைக்கப்படுகின்றன. இருந்தாலும், பெண் தெய்வங்களின் பெயர்களை ஒருவருக்கு வைக்கும்போது அந்தத் தெய்வமகளின் பண்பு நலன்களை பெயர் வைக்கப்படுபவரும் பெற்று வாழவேண்டும் என்று நினைத்தும் பெயரிடப்படுகின்றன. ஆனால் ஆண்களுக்குப் பெயரிடும்போது, இதிகாச புருஷர்களின் பண்பு நலன்களை மனதில் கொள்ளாது அவர்களின் நினைவாக மட்டுமே பெயர்கள் வைக்கப்படுகின்றன என்று கருத வாய்ப்புள்ளது. 'லக்ஷ்மி போல' என் பெண் அழகாக கலையம்சத்துடன் இருந்தாள் அதனால் லக்ஷ்மி எனப்பெயரிட்டேன், எனும் விளக்கங்களை கேட்க முடிகிறதுபோல, 'ரங்கநாதனைப் போல் என் மகன் இருந்ததால் அந்த பெயரைவைத்தேன்'. என்று கேட்க முடியாத தால் நமது சிந்தனை மேற்கூறிய கருத்தினை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. (விதிவிலக்கு: காளியம்மா, முருகன் எனும் பெயர்கள்).

தமிழிலக்கிய ஈடுபாடு காரணமாக தமிழ் மக்களிடை இலக்கிய மாந்தர்களின் பெயர்கள் வைக்கும் வழக்கம் பரவலாக அண்மையில் ஏற்படத் தொடங்கியது. அப்பொழுது, அரசர்களின் பெயர்களே ஆண்களுக்கு பெரும்பாலும் இயற்பெயர்களாகவும் புனை பெயர் களாவும் வைக்கப்பட்டன (உம். செங்குட்டுவன், நெடுஞ்செழியன், மாறன், இளங்கோ . ஆனால் இலக்கியங்களில் காணும் தலைவர்களின் பெயர்களான கோவலன், சீவகன், போன்ற

பெயர்கள் வைக்கப்படவில்லை. மாறாக, இலக்கியத் தலைவிகளின் பெயர்களான கண்ணகி, மாதவி, மணிமேகலை என்பன அதிகமாக வைக்கப்பட்டன. ஆனால் சங்ககால அரசியர்களின் பெயர்கள் (எண்ணிக்கையில் குறைவாக நமக்கு தெரிந்திருப்பினும்) பெண்களின் பெயராக பரவலாக வைக்கப்படவில்லை. சங்ககாலத்தில் ஆண்பாற்புலவர்களின் எண்ணிக்கை பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கையை விட அதிகம் எனினும் பெயர் வைப்பதில் ஆண்பாற் புலவர்களின் பெயர்கள் பெண்பாற் புலவர்களின் பெயர்களை விட அதிக விழுக்காடு பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் புனைபெயர் வைத்துக்கொள்வதில், இலக்கிய பெயர்களும் விளக்கப் பெயர்களும் பயன்படுத்தப்படுகின்றன. (உ.ம். சேவற் கொடியோன், வெள்ளை வாரணன், கலையரசி, பூங்குழலி). பெண்களைக்காட்டிலும் ஆண்களே புனைபெயரில் அதிக நாட்டம் கொண்டுள்ளனர் எனக் கருத வாய்ப்புள்ளது.

ஒரு சிலருக்கு இயற்பெயரோடு காரணப் பெயர் ஒன்றும் இருக்கும். சில சமயங்களில் காரணப் பெயரே வழக்கில் அமைந்து இயற்பெயர் மறைந்துவிடுவதும் உண்டு. ஒருவரின் உருவத் தோற்றம், பண்புநலன், தொழில் நிலை, சார்ந்துள்ள ஊர், குடும்பம் இவைகளை அடிப்படையாகக் கொண்டு காரணப் பெயர்கள் அமைவதுண்டு என ஆறு. இராமநாதன் குறிப்பிடுகிறார் (உ.ம். மண்டையன், கருப்பன், பித்தகுளி, வெட்டியான் மதுரை, கடலூரான்). ஒரு சில பெயர்களை இயற் பெயராக வைக்கும்போது சில சம்பிரதாயக் கட்டுப்பாடுகள், தெய்வ வேண்டுதலை நிறைவேற்றும் நிவர்த்தி முயற்சிகள் முதலியன காரணமாக அமைவதுண்டு (உ.ம். பிச்சை, அம்மாசி, குப்புசாமி). இத்தகைய சம்பிரதாயக் கட்டுப்பாடுகள், நிவர்த்தி நிறைவேற்றல் இவைகளின் காரணமாக வைக்கப்படும் இயற் பெயர்கள் சில சமயம் அப்பெயர்களுக்கு உரியவர்களைச் சரியாக உருவகப்படுத்திக் காட்டாது போய்விடுகிறது. உயர் கல்வி யுடைய நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த ஒருவரின் பெயர் பிச்சை யென்று இருப்பதை இதற்குச் சான்று காட்டலாம்.

ஒரு சில பெயர்கள் குறிப்பிட்ட பண்புநலனைக் குறிக்கப் பயன் படுத்தப் படுவதுமுண்டு. சான்றாக கர்ணன் எனும் பெயர்

வள்ளல்தன்மைக்கும், சகுனி சூட்சும புத்திக்கும், அர்ச்சுனன் அழகானவன் என்று குறிக்கவும், கும்பகர்ணன் வேலையின்றி எப்போதும் தூங்குபவன் என்று குறிக்கவும் வழங்கப்படுவதுண்டு, அவ்வாறே அல்லி ராணி, கண்ணகி எனும் பெயர்கள் ஒரு குறிப்பிட்ட பண்பு நலன்களோடு தொடர்புபடுத்தி; காரணப்பெயராக வழங்கப்படுகிறது.

தற்சமயம் நகர்ப்புற மக்களிடையே பரவலாக வைக்கப்படும் பெயர்கள் அனைத்தும் பெரும்பாலும் மூன்று அசைகளுக்கு (syllable மேற்படாது அமைகின்றன (உ.ம். ராதா, நித்யா, விஜி, சுரேஷ், ராஜ்). நீளமாக வைக்கப்பட்ட பெயர்கள் கூட மூன்று அசைகளுக்குள் சுருக்கப்படுகின்றன. வித்யாவதி, விஜய லக்ஷ்மி, பாலகிருஷ்ணன் எனும் பெயர்கள் வித்யா, விஜி (விஜயா), பாலு என்று சுருக்கம் பெறுகின்றன. ஒருவரை அழைப்பதற்கும் இயற்பெயர்கள் சுருக்கம் அடைகின்றன. இயற்பெயரின் முதலிரண்டு அசைகளே தற்போது பெரும்பாலும் விளிப்பெயராக அமைகின்றன. சில சமயம் விஜயலக்ஷ்மி, பாலகிருஷ்ணன் எனும் பெயர்கள், விஜயா (விஜி), லக்ஷ்மி எனும் பெயர்களாலும், பாலு, கிருஷ்ணன் (கிருஷ், கிச்) எனும் பெயர்களாலும் அழைக்கப்படலாம். ஆனால் வரலக்ஷ்மி, பரமேஸ்வரி எனும் பெயர்களில் வர, பர என்பன விளிப் பெயர்களாக வர இயலாது. லக்ஷ்மி, ஈஸ்வரி, இவைகளே பயன்படுகின்றன. பெயரோடு வரும் அடைகள் சில தனித்தியங்க முடியாத காரணத்தால்தான் இவ்வாறு நிகழ்கிறது. ஆனால் வேறு சில அடைகள் விளைப் பெயராக தனித்தியங்க இயலும். (உ.ம். ராஜேஸ்வரி – ராஜீ : தனலக்ஷ்மி – தனம்). ஆண்களின் பெயர்களில் பெரும்பாலும் விளிப்பெயர்கள் மெய்யொலி ஒற்றிலும் (உ.ம். ராஜ், தாஸ்); 'அர், அன், அம்' எனும் விகுதிகளை இறுதியாகக் கொண்டும் (உ.ம். சுந்தர், ராஜன், சுந்தரம்); உயிரொலிகளான 'ஆ, இ' எனும் உயிரெழுத்துக்களைக் கொண்டும் (உ.ம்.: ராஜா, ரவி) முடிவுறும். பெண்களின் பெயர்களில் விளிப்பெயர்கள் பெரும்பாலும் இரண்டு அசைகளுக்கு மேற்படாது இருந்து, அதிலும் பெரும்பாலும் அவைகள் உயிரொலிகளைக் கொண்டு முடிந்தும், குறிப்பாக ஆ,இ எனும் உயிரெழுத்துக்களைக் கொண்டும் அமைகின்றன (உ.ம். ராதா, சீதா, ராதி, விஜி).

## அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக வெளியீடுகள்

1. மொழியியல்-வாழ்வும் வரலாறும் (History of Linguistics)

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

டாக்டர் க. புஷ்பவல்லி

பக்கம் 458) (விலை ரூ 16/-

2. கிளை மொழியியல் (Dialectology)

டாக்டர் கோ. சீனிவாச வர்மா

பக்கம் 226) (விலை ரூ 10/-

3. மொழித்திட்டமிடுதல் (Language Planning)

டாக்டர் கி. கருணாகரன்

பக்கம் 165) (விலை ரூ 7/-

4. உலக மொழிகள்-திராவிட மொழிகள்-1

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

பக்கம் 250) (விலை ரூ 12/-

5. உலக மொழிகள்-திராவிட மொழிகள்-2

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

பக்கம் 265) (விலை ரூ 15/-

6. நரிக்குறவப் பழங்குடிமக்கள்

டாக்டர் கோ. சீனிவாச வர்மா

பக்கம் 96) (விலை ரூ 4/-

7. எழுத்துச் சீர்திருத்தம் (Script Reform)

டாக்டர் செ. வை. சண்முகம்

பக்கம் 240) (விலை ரூ 12-50/-

8. ஒலியியல் (Phonetics)

டாக்டர் சு. இராசாராம்

பக்கம் 180) (விலை ரூ 15/-

9. எழுத்திலக்கணக் கோட்பாடு

(Phonological Theories in Tamil Grammars)

டாக்டர் செ. வை. சண்முகம்

பக்கம் 306) (விலை ரூ 20/-

10. சொல்லியல் - 1 (Morphology) - பெயரியல் (Noun)

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

பக்கம் 280) (விலை ரூ 21/-

**11. Linguistic Convergence**

Dr. K. Karunakaran

pp. 188) (Price Rs. 10/-

12. இருமொழியம் (Bilingualism)

டாக்டர் கோ. சீனிவாச வர்மா

பக்கம் 152) (விலை ரூ 15/-

**13. Study of Social Dialects in Tamil**

Dr. K. Karunakaran

pp. 141) (Price Rs. 12/-

14. சொல்லியல் (Morphology) - வினையியல் (Verb-1)

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

பக்கம் 212) (விலை ரூ 16/-

15. சங்கத் தமிழ் - I

டாக்டர் ச. அகத்தியலிங்கம் (அச்சில்)

16. பாடல் பயிற்றுமுறை

டாக்டர் மா. சு. திருமலை (அச்சில்)

**17. Studies in Applied Tamil Sociolinguistics**

Dr. K. M. Irulappan (price Rs. 10/-

**18. Aspects of Language Use**

Dr. M. S. Thirumalai

pp. 140) (Price Rs. 18/-

**19. Aspects of Language Development**

Dr. S. V. Shanmugam

pp. 112) (Price Rs. 14/-

20. Sociolinguistic Patterns of Language Use

Dr.K. Karunakaran (price Rs. 18/-

21. நீலகிரி மொழிகள்

டாக்டர் இரா. பாலகிருஷ்ணன் (அச்சில்)

22. சங்கத்தமிழ் II

டாக்டர். ச. அகத்தியலிங்கம் (அச்சில்)

23. சங்கத்தமிழ் - III

டாக்டர். ச. அகத்தியலிங்கம் (அச்சில்)

## உறுப்பினர்களுக்கு

தமிழ் இலக்கணம், மொழியியல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மொழியியலில் வெளியிடுவதற்கு அனுப்ப வேண்டுகிறோம். கட்டுரையாளர்களுக்கு இருபத்தைந்து படிகள் (reprints) இலவசமாக வழங்கப்பெறும். கட்டுரைகளைத் தெளிவாகத் தட்டச்சு (type) செய்து இரண்டு படிகள் அனுப்புதல் வேண்டும். தங்கள் நண்பர்களையும் மொழியியற் கழக உறுப்பினர்களாக்கி மொழியியல் வளர்ச்சிக்கு உதவ வேண்டுகிறோம்.

## மொழியியல் இதழ் வெளியீடு பற்றிய குறிப்பு


| | | |
|---|---|---|
| 1. | வெளியீட்டாளர் & ஆசிரியர் | டாக்டர் ச. அகத்தியலிங்கம்,<br>செயலாளர், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்,<br>மொழியியல் துறை,<br>அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,<br>அண்ணாமலைநகர் 608 002. |
| 2. | அச்சிட்டோர் | சிவகாமி அச்சகம்,<br>அண்ணாமலைநகர் 608 002. |

# மொழியியல்

தொகுதி 6 ஏப்ரல் - ஜூன் எண் 4

## உள்ளுறை


| வ. எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | விரவுத்திணை<br>— செ. வை. சண்முகம் | 1 - 74 |
| 2. | கலைக்களஞ்சிய உருவாக்கம் சில அடிப்படைக் குறிப்புகள்<br>— து. மூர்த்தி | 75 - 92 |
| 3. | கல்வெட்டுத் தமிழ் – சில கூறுகள்<br>— இரா. பாக்கியலட்சுமி | 93 - 107 |
| 4. | மொழிச்செயலூக்கி : மறைந்து போன தொடர்ச் சங்கிலி<br>— ந. நடராசபிள்ளை | 109 - 122 |
| 5. | பெயரைச் சொல்லலாமா!<br>— எஸ். ஆரோக்கியநாதன் | 123 - 131 |